


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 மே 1, 2008 புரட்சி 7 முழக்கம் 18 விலை : ரூ.2.50


# ‘பிரபவ’, ‘அட்சய’ - அரசு ஆவணங்களில் ஒழிகிறது!

தமிழ்ப் புத்தாண்டு என்ற பெயரில் பார்ப்பனர்கள் திணித்த ‘பிரபவ’ முதல் ‘அட்சய’ வரையுள்ள 60 வடமொழிப் பெயர்களைக் கொண்ட ஆண்டு முறை தமிழகத்தில் அதிகாரபூர்வமாக ஒழிக்கப் படுகிறது. இந்த வடமொழி ஆண்டு களுக்குப் பதிலாக - திருவள்ளுவர் ஆண்டையே இனி தமிழக அரசு, தனது அனைத்து நடவடிக்கைகளிலும் பயன் படுத்தும். மகத்தான இந்தப் பண்பாட்டுப் புரட்சியை நிகழ்த்திக் காட்டியிருக்கிறது தமிழக அரசு. தி.மு.க. அரசும், முதலமைச்சர் கலைஞரும் இதன் மூலம் பார்ப்பன எதிர்ப்புப் பண்பாட்டுப் புரட்சி வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுள்ளார்கள். இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள பிப்.25, அரசாணையில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டுச் சட்டம், 2008 சமீபத்தில் வெளியானது. அதில் தை மாதத்தின் முதல் நாளிலிருந்து தமிழ் ஆண்டு தொடங்கும் என்றும், மார்கழி மாதத்தின் கடைசி நாளில் தமிழ் ஆண்டு முடிவடையும் என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே இனி அரசாணைகள், தமிழ்நாடு அரசிதழ், அரசு கடிதங்கள் மற்றும் பல வெளியீடுகளில் ‘சர்வஜித்’ என்ற ‘தமிழ்’ ஆண்டை நீக்க வேண்டும். ‘பிரபவ’ முதல் ‘அட்சய’ வரை உள்ள 60 ஆண்டு களின் பெயர்களை பயன்படுத்த வேண்டாம். கிறித்துவ ஆண்டுக்கு நிகராக தமிழ் மாதங்கள், நாள், மற்றும், திருவள்ளுவர் ஆண்டு (ஆங்கில ஆண்டுடன் 31அய் கூட்டினால் திருவள்ளுவர் ஆண்டு வரும்) ஆகியவற்றையே பயன் படுத்த வேண்டும். (உதாரணமாக 2008 - பிப்.9 ஆம் தேதியை அரசாணையில் ‘திருவள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 27 ஆம் தேதி’ என்று குறிப்பிட வேண்டும்) - என்று அரசாணையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பார்ப்பன ஜெயலலிதாவும், பா.ஜ.க. பரிவாரங்களும், பார்ப்பன ‘தினமணி’ களும் இந்த மாற்றத்தை செரித்துக் கொள்ள முடியாமல், தீயில் விழுந்த புழுவாய் துடிக்கிறார்கள். விண்வெளித் துறையில் பணியாற்றும் பார்ப்பன விஞ்ஞானி ஒருவர் - ‘தினமணி’ நாளேட்டில் - தமிழக அரசின் இந்த முடிவை எதிர்த்து கட்டுரை எழுதியுள்ளார். அதே ஏடு - இந்த முடிவை எதிர்த்து - ‘பகுத்தறிவு அல்ல; பாசிசம்’ எனும் தலைப்பில் தலையங்கமும் தீட்டி, தனது வயிற்றெரிச்சலைக் கொட்டியுள்ளது. ‘ஜனசக்தி’ நாளேடு - இந்த வாதங்களை மறுத்து - சிறப்பான கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

முதன்முதலில் பண்டை உரோமானியர் சூரிய நாள்களை ஓராண்டுகளுக்கு வரும்படி பத்து சம பாகங்களாக வகுத்தனர். எப்படியோ, இது 12 பாகங்களாக பிரிக்கப்பட்டுவிட்டது என்று கூறும் அந்த விஞ்ஞானி ‘எப்படியோ’ மாற்றப்பட்டதை ஏற்கும் போது, தமிழக அரசு இப்படி மாற்றியதை ஏன் எதிர்க்க வேண்டும்? ‘கிருஷ்ணரும்-நாரதரும்’ கூடிப் பெற்றதாக (அதாவது ஆணும்-ஆணும் கலவி செய்து பெற்ற) 60 ஆண்டுகளின் பெயர்களை - இந்து பார்ப்பன மதம் கூறுகிறது. இது அறிவியலுக்கு ஏற்புடையதா? சங்கத் தமிழ் நூல் எவற்றிலாவது இந்த 60 ஆண்டு களின் பெயர் இடம் பெற்றுள்ளதா? பிறகு எப்படி இதை தமிழ்ப் புத்தாண்டு என்று அழைக்க முடியும்?

சித்திரையில் தொடங்கும் ஆண்டைத் தையில் தொடங்க ஏற்பாடு செய்தது பாசிசம் என்றால், மறைக்காட்டை வேதாரண்யமாக, மயிலாடுதுறையை மாயூரமாக, குடந்தையை கும்பகோணமாக, இப்படி ஏராளமான தமிழ்ப்பெயர்களை சமஸ்கிருதத்துக்கு மாற்றியது எது? அத்தகைய அதிகாரம் எவர் கைக்கு எப்படிப் போய்ச் சேர்ந்தது? இப்படி - சாட்டையடிக் கேள்விகளைத் தொடுக்கும் அக் கட்டுரை - பெரும்பான்மை மக்கள் நம்பிக்கையை மாற்றுவதா என்ற வழமையாக எழுப்பப்படும் கேள்விகளுக்கும் பதிலளித்துள்ளது. வீர பாண்டிய கட்டபொம்மனிடம் வெள்ளைக்காரத்துரை, “எல்லா பாளையக்காரர்களும் பணிந்து விட்டார்கள், நீ மட்டும் ஏன் பணிய மறுக்கிறாய்?’ என்று கேட்டதைப் போல, இந்தக் கேள்வி இருக்கிறது என்று நறுக்குத் தெறித்ததுபோல் பதிலடி தந்துள்ளது.

குடும்பத்தையே பகுத்தறிவாளர்களாக மாற்ற முடியாதவர்கள் - பகுத்தறிவை மற்றவர்களிடம் திணிப்பதா என்று அந்தப் பார்ப்பன ஏடு எழுப்பிய கேள்விக்கு, “இறை நம்பிக்கையுடைய பெரும்பான்மை குடும்ப உறுப்பினர்களால், ஏன், அந்த ஒரு இறை மறுப்பாளரை மாற்ற முடியவில்லை? என்று திருப்பிக் கேட்க முடியாதா?” என்று நச்சென்று கேட்டுள்ளது.

தொடர்ந்து ‘ஜனசக்தி’ நாளேட்டில் பகுத்தறிவுக் கட்டுரைகளை மிகச் சிறப்பாக நையாண்டி நடையில் எழுதி வரும் தோழர் சுமலி - இந்தக் கட்டுரையிலும் தனது முத்திரையைப் பதித்துள்ளார். ஆக பார்ப்பனர்கள் இந்த ‘தமிழ்ப் புத்தாண்டு’ மாற்றத்தை ஏற்க மறுப்பதன் மூலம் - பார்ப்பனர்கள், பார்ப்பனர்களாகவே வடமொழிப் பற்றாளர்களாகவே வர்ணாஸ்ரமப் பாதுகாவலர்களாகவே இருக்க விரும்புகிறார்கள், அவர்கள் மாறவில்லை என்பது மீண்டும் உறுதியாகியுள்ளது. ✦

# அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகிறார்கள்!

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆவதன் மூலம் கோயில் கர்ப்பக்கிரகத்தில் நிலைநாட்டப்பட்டுள்ள ‘சூத்திர’ இழிவை ஒழிக்க பெரியார், தன் வாழ்நாள் இறுதியில் போர்க்களத்தில் நின்றார். 1971 அன்று கலைஞர் அரசு இதை நிறைவேற்ற சட்டசபையில் சட்டம் இயற்றியது. சட்டத்தை எதிர்த்து பார்ப்பனர்கள் உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து முடக்கி விட்டார்கள். எம்.ஜி.ஆர். முதல்வரான பிறகு - பெரியார் நூற்றாண்டையொட்டி, இது பற்றி ஆராய நீதிபதி மகாராஜன் தலைமையில் ஒரு குழுவை நியமித்தார். அந்தக் குழு அனைத்து சாதியினரும் அர்ச்சகராக ஆகமங்கள் தடை விதிக்கவில்லை என்று கூறியது. பின்னர் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா, திருச்சி கம்பரசம் பேட்டையில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் ‘வேத - ஆகம’ பயிற்சிக் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவித்தார். அப்போது ஜெயலலிதாவை ‘சமூகநீதி காத்த வீராங்கனையாக்கி’ புகழாரம் சூட்டிக் கொண்டிருந்த தி.க. தலைவர் கி.வீரமணி, இதற்கும் ஜெயலலிதாவுக்கு பாராட்டுரைகளை வழங்கிவிட்டு, பிரச்சினையை முடித்துக் கொண்டார். உண்மையில் கம்பரசம்பேட்டையில், அனைத்து சாதியினருக்கும் பயிற்சி தரப்படவில்லை. பார்ப்பனர்கள் மட்டுமே பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தனர்.

பார்ப்பன ஜெயலலிதா தொடர் நடவடிக்கை எதையும் மேற்கொள்ளாத நிலையில், பிரச்சினை கிடப்பில் போடப்பட்டது. திராவிடர் கழகமும் இதை மறந்தே போனது. அதன் பிறகு பெரியார் திராவிடர் கழகம் தான் 2003 ஆம் ஆண்டு ஜூலையில் புதுவையில் நடந்த பெரியார் திராவிடர் கழக மாநாட்டில் இந்தப் பிரச்சினையை மீண்டும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்து, போராட்டத்துக்கு தயாரானது. 2004 ஜனவரி 30 ஆம் தேதி காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலுக்குள் கருவறை நுழைவுப் போராட்டத்தை நடத்தி, ஆயிரத்துக்கும் அதிகமான பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் கைதானார்கள். அதற்குப் பிறகு தான் பிரச்சினை வெளி வரத் தொடங்கியது. திராவிடர் கழகம் அதற்குப் பிறகு தான் விழித்துக் கொண்டு இதைப் பேசத் தொடங்கியது. கலைஞர் ஆட்சி மீண்டும் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம் கொண்டு வந்தது.



இப்போது தமிழக சட்டசபையில் 25.4.2008 அன்று அறநிலையத் துறை மான்ய கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசிய அறநிலையத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன்,


4 ஆம் பக்கம்


## மேதினவாழ்த்து!

**கழகத்தினருக்கும், தோழர்களுக்கும் ‘மே’ தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.**

## கழக சார்பில் ‘பயிற்சி முகாம்கள்’

தமிழ்நாட்டில் கழகத்தினருக்கு பயிற்சி முகாம்கள் கீழ்க்கண்ட திட்டப்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.. மாவட்ட கழகப் பொறுப்பாளர்களோடு கலந்து பேசி, அவர்களின் ஒப்புதலோடு இந்த தேதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| மே 31 - ஜூன் 1 | - | புதுவை மாநிலம் |
| ஜூன் 7, 8 | - | சேலம் மாவட்டம் |
| ஜூன் 14, 15 | - | கோவை மாவட்டம் |
| ஜூன் 21, 22 | - | ஈரோடு மாவட்டம் |
| ஜூன் 28, 29 | - | நாகை மாவட்டம் |

மாவட்டங்களில் இதுவரை பயிற்சி முகாம்கள் நடக்காத ஊர்களைத் தேர்ந்தெடுத்து, அங்கே முகாம்களை நடத்துவதற்கு, கழகப் பொறுப்பாளர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுகிறோம். (விரிவான செய்தி பின்னர்)

**– தலைமைக் கழகம்**

தலையங்கம்

## ‘என் கவுன்டர்’ படுகொலைகளை நிறுத்துங்கள்!

தமிழ்நாட்டில் நக்சலைட் தீவிரவாதம் தலை தூக்கியிருப்பது போன்று ஒரு பொய்யான தோற்றத்தை உருவாக்கும் முயற்சிகளில் தமிழக காவல்துறையின் உளவுப் பிரிவு இறங்கியிருப்பதும், இதற்கு தமிழக அரசு பச்சைக்கொடி காட்டி நிற்பதும் உண்மையிலே வேதனைக்கும், கண்டனத்துக்கும் உரிய நிகழ்வுகளாகும்.

தமிழ்நாட்டில் எந்த ஒரு பகுதியிலும் நக்சலைட்டுகளானாலும், மாவோயிஸ்டுகளானாலும், தாக்குதல் நடத்தியதாகவோ, ‘அழித்தொழிப்பு’ நிகழ்த்தியதாகவோ எந்த நிகழ்வும் இல்லாதபோது, தமிழக காவல்துறையின் உளவுப் பிரிவு தமிழின இளைஞர்களை ‘என்கவுன்டர்’ பெயரில் சுட்டுப் பிணமாக்குவது, மன்னிக்க முடியாத, மனித விரோதச் செயலாகும். கடந்த வாரம் ஏப்ரல் 23 ஆம் தேதி மத்திய உள்துறை அமைச்சகம், நக்சலைட் பிரச்சினை பற்றிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் வறுமையும், சுரண்டலும், கொடூரமாக தலைவிரித்தாடுகிற சட்டீஸ்கார், ஜார்கண்ட், பீகார், ஒரிசா மாநிலங்களில் தான் நக்சலைட்டுகள் நடவடிக்கை தீவிரமாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக சட்டீஸ்கார், ஜார்கண்ட் மாநிலங்களில்தான் நக்சலைட் தொடர்பான தாக்குதல் நிகழ்வுகளில் முறையே 66, 75 சதவீதம் கடந்த ஆண்டு நடந்துள்ளது என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. ஆந்திரா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, உ.பி., மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் மாவோயிஸ்டுகள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ளனர் என்று கூறும் அந்த அறிக்கை, தமிழகத்தைப் பொறுத்தவரை, நக்சலைட் பிரச்சினை, மிகவும் புதிய பரிமாணம் என்றே குறிப்பிடுகிறது. இந்த உண்மையான எதார்த்தத்தை கவனத்தில் கொண்டு சமூகக் கண்ணோட்டத்துடனும், சமூகப் பொறுப்புடனும் அணுக வேண்டிய ஒரு பிரச்சினையை ஏன், அதிரடிப் பிரச்சினையாக மாற்ற வேண்டும்? வழக்கு, விசாரணைகள், நீதிமன்றங்கள் எல்லாம் ஓரம் கட்டப்பட்டு, காவல்துறையே துப்பாக்கிகளைக் கொண்டு மரணதண்டனை வழங்கும் கொடுமை – ‘என்கவுன்டர்’ என்ற போலி நாடகத்தால் அரங்கேற்றப்பட்டு வருவது வன்மையான கண்டனத்துக்குரியதாகும். ஒரு காலத்தில் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை ஏற்றுக் கொண்ட பல புரட்சிகரக் குழுக்கள் – தங்கள் முடிவுகளை மறுபரிசீலனை செய்து – மக்களை அணிதிரட்டும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இது தமிழ்நாட்டுக்கே உரிய தனித் தன்மை. இந்த நக்சலைட் பிரச்சினையை சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக பார்க்காமல், சமூகப் பிரச்சினையாக ஆராய வேண்டும் என்று தமிழக முதல்வர் கலைஞரே, ஒன்றுக்கு மேற்பட்ட முறை சட்டமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார். ஆனால் காவல்துறையின் செயல்பாடுகளோ இதற்கு நேர்முரணாக இருக்கிறது.

இன்னமும் கிராமங்களில் வறுமைப் பிடியில் சிக்கித் தவிக்கும் மக்களின் வாழ்வுரிமைகள் மறுக்கப்படுவதை புரிந்து கொண்டு, அதைத் தீர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த மக்களின் உரிமைகளுக்காக போராடும்போது அவர்கள் மாவோயிஸ்டாக இருந்தாலும், நக்சலைட்டாக இருந்தாலும் மக்கள் ஆதரிக்கவே செய்வார்கள். அண்மையில் கொடைக்கானல் மலையில் நவீன் எனும் பிரசாத் என்கிற ஒரு இளைஞரை தமிழக காவல்துறை சுட்டு பிணமாக்கி, இவர்களுக்கு மக்கள் ஆதரவே கிடையாது என்று கூறியது. ஆனால், அந்த இளைஞரின் இறுதி ஊர்வலம் தர்மபுரியிலிருந்து புறப்பட்டபோது 12 கிலோ மீட்டர் தூரம், செம்மணஹல்லி வரை மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்ததாக செய்திகள் வந்துள்ளன. தமிழக காவல்துறையின் கூற்று பொய்யானது என்பதை இது நிரூபித்துவிட்டது என்று, ஆங்கில நாளேடுகள் சுட்டிக் காட்டுகின்றன.

காவல்துறையின் இத்தகைய அத்துமீறிய என்கவுன்டர் படுகொலைகளால் தமிழக அரசு அடித்தள மக்களின் வெறுப்பையும், எதிர்ப்பையும் சந்திக்கும் நிலை உருவாகி வருவதை தமிழக முதல்வர் கலைஞர் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். ஆட்சி மாற்றம் என்று வந்துவிட்டால் காவல்துறை உடனே தனது விசுவாசத்தை மாற்றிக் கொண்டு விடும். இவர்களின் அத்துமீறிய செயல்பாடுகளுக்கு, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஆட்சிகள் தான் பலிகடாவாக வேண்டும்.

தமிழ்நாட்டு இளைஞர்கள் புரட்சிகர தத்துவங்களை ஏற்றுக் கொண்டிருப்பதாலேயே அவர்கள் மீது வன்முறை முத்திரை குத்தி என்கவுன்டரில் சுட்டு பிணமாக்கும் கொடூரத்தை இனியாவது தடுத்து நிறுத்த வேண்டும். தீர்ப்பு தரும் உரிமைகளை காவல்துறையிடம் வழங்கிவிட்டால், பிறகு நாட்டின் நிலை என்னாவது? தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்து இளைஞர்கள் – இப்படி, தமிழ்நாட்டில் காவல்துறையின் துப்பாக்கிப் பசிக்கு இறையாகலாமா?

இதை ஒரு ஜனநாயக நாடு அனுமதிக்கலாமா?

## வரப் போகுது ‘சங்கரா’ டி.வி.

இந்து மதத்தைப் பரப்ப - தனித் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்று வருகிறதாம்! காஞ்சி ஜெயேந்திரன் அடுத்த இரண்டு வாரத்தில் தொடங்கப் போகிறாராம்! காஞ்சிபுரம் மடத்தின் வட்டாரங்கள் கூறுகின்றன. ஒரு காலத்தில் தொலைக்காட்சியில் ‘தெய்வவாக்கு’ கூறும் நிலையில் இருந்த ஜெயேந்திரன் பிறகு, “குற்றம் நடந்தது என்ன ?” என்ற நிகழ்ச்சியில் இடம் பெறும் நிலைக்கு வந்தார். இப்போது, தானே தொலைக்காட்சியைத் தொடங்கி தூள் கிளப்பப் போகிறாராம்! ராமகோபாலனும், ஜெயேந்திரரும் தமிழ்நாட்டில் இந்துக் கடவுள்கள் அவமதிக்கப்படுவதாகக் கூறி மிகவும் கவலைப்படுவதாக தெரிகிறது.

சென்னையில் ‘வணக்கம் அம்மா’ என்ற திரைப் படத் தொடக்க விழா சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது. அதில் - பகவான் ராமபிரானும், அவனது சக தோழர் அனுமானும் வீதியில் சிறுநீர் கழிப்பதுபோல படங்கள் இடம் பெற்றனவாம். உடனே இராம கோபாலன் - பூணூலை இழுத்துப் பிடித்துக் கொண்டு போராடக் கிளம்பி விட்டார். “பகவான் - சிறுநீர் கழிப்பது - பாவமா ? சிறுநீர் கழித்தார் என்றால், சிறு நீரகம் நன்றாக இயங்கி, உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறார் என்பதுதானே அர்த்தம் ? அதற்காக ராமகோபாலனும், ஜெயேந்திரனும் ஏன் சங்கடப்பட வேண்டும் ? ராமாயணப்படியே பகவான் காட்டுக்குப் போகிறார். வால்மீகி ராமாயணப்படி, மாட்டுக்கறி சாப்பிடுகிறார்; சோம பானம் - சுராபானம் என்ற அந்தக் காலத்து ‘டாஸ்மார்க்’ சரக்குகளை குடிக்கிறார். இதை எல்லாம் ஏற்றுக்கொண்டால், சிறுநீர் போவதையும், மலம் கழிப்பதையும் ஏற்றுக் கொள்ளத் தானே வேண்டும் ? என்று, நண்பர் ஒருவர் கேட்கிறார். அவர் கேட்பது நியாயமான கேள்வி என்றே நமக்கும் தோன்றுகிறது. பகவானை பாலம் கட்டுகிறவன்; சாலை போடுகிறவன் என்ற நிலைக்கு மனிதர்களாக மாற்றிடத் துடிக்கிறவர்கள், சிறுநீர் கழிப்பதை மட்டும் ஏன் புண்படுத்துவதாகக் கருத வேண்டும் ? சரி; சிறுநீர் ஆராய்ச்சியை இத்துடன் நிறுத்திக் கொண்டு, அடுத்தப் பிரச்சினைக்கு வருவோம். ராமன் வேடம், அனுமான் வேடம் போட்டுக் கொண்டு தெருத் தெருவாக பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்களே; அந்தப் பிச்சைக்கார சிறுவர்களிடம், “இப்படி எல்லாம் பகவான் வேடம் தரித்து பிச்சை எடுக்கக்கூடாது; இது எங்களை புண்படுத்துகிறது” என்று ராமகோபாலன் வேண்டுகோள் வைத்துள்ளாரா ? அல்லது பகவான் வேடத்தில் எவர் பிச்சை எடுத்தாலும், அந்தப் பிச்சைக்காரர்களை எதிர்த்து, இந்துக்களை திரட்டி போராட்டம் நடத்துவேன் என்று அறிவித்திருக்கிறாரா ? ராமகோபாலன் ஆனாலும், ஜெயேந்திரன் ஆனாலும் ‘அவாள்’ அகராதியின் ‘மனம் புண்படுகிறது’ என்பதற்கான அர்த்தமே அலாதி தான்!

ஆனாலும்கூட, உண்மையிலே பகவானைப் புண்படுத்தக்கூடிய எவ்வளவோ நிகழ்ச்சிகள் நாட்டில் நடந்து கொண்டேயிருப்பது, ‘இவாளுக்கு’ தெரியாதா ? அவைகளை எல்லாம் தட்டிக் கேட்க முன்வரவேண்டும் என்று ‘இவாள்களை’ நாம் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம்.

தமிழக அறநிலையத்துறை அமைச்சர் தமிழ்நாட்டுக் கோயில்களில், திருட்டு, கொள்ளைகள் நிகழாமல் தடுப்பதற்காக கோயில் பாதுகாப்புப் படை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார். அதில் காவல்துறையைச் சேர்ந்த **904** காவலர்களும், முன்னாள் ராணுவ வீரர்கள் **1933** பேரும் பணியாற்றுகிறார்களாம். இது என்ன அநியாயம் ? முன்னாள் ராணுவத்தினரும், போலீசாரும் சேர்ந்து படை அமைத்துதான் கோயிலையும், கோயிலுக்குள் இருக்கும் பகவானையும் காப்பாற்ற வேண்டும் என்றால், இதைவிட பகவான் சக்தியை கேலி செய்யும் செயல் வேறு உண்டா ?

கோயில் மற்றும் கடவுள் பாதுகாப்புப் படையை உடனடியாகக் கலைத்து, பகவானின் சக்திக்குள் வரம்பு மீறி தலையிடும், அரசை எதிர்த்து, உடனே போராட்டத்தை ராமகோபாலன் அறிவிக்க வேண்டும் என்பது அடியேனின் விண்ணப்பம்.

இதைவிட மற்றொரு ‘புண்படுத்தும்’ அறிவிப்பை யும் அமைச்சர் வெளியிட்டுள்ளார். கோயில் உண்டியல்களையும், தெய்வத் திருமேனிகளையும் பாதுகாக்க கள்வர் எச்சரிக்கை மணி பொருத்தப் போகிறார்களாம். இதற்கு **5** கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாம். கடவுள் மீது கை வைத்தால், உடனே மின்சார சக்தியால் இயங்கும் எச்சரிக்கை மணி ஒலிக்கும் என்றார். கடவுள் சக்தியை இப்படி நக்கலடிப்பது தர்மம் தானா ?

கடவுள் சக்தி செயலிழந்து அவர் மின்சார சக்தியைத் தான் நம்பியிருக்க வேண்டுமா ? “பாதுகாப்புப் படை ஒழிக; எச்சரிக்கை மணி ஒழிக; காப்போம் காப்போம்; கடவுள் சக்தியைக் காப்போம்;” என்ற முழக்கத்தோடு, உடனே படை திரட்டுங்கள் ! நீங்கள் தானே கடவுள் சக்தியை காப்பாற்றியாக வேண்டும் !

ஜெயேந்திரர் தொடங்கும் தொலைக்காட்சியில் இதுபோன்ற இந்து தர்மம் காக்கும் நிகழ்ச்சிகளை எல்லாம் நடத்தி, பக்தி தர்மத்தை வளர்க்க வேண்டும் என்பது அடியேனின் விண்ணப்பம். சங்கர்ராமன் உயிரோடு இருந்திருந்தால், அவர்கூட இந்த யோசனையை ஏற்று, பாராட்டுவாராக்கும் !

**– கோடங்குடி மாரிமுத்து**

*நளினி – பிரியங்கா சந்திப்பு எதிரொலி*

## தூக்குத் தண்டனை ஒழியுமா?

சோனியாவின் மகள் பிரியங்கா, அண்மையில் வேலூர் சிறையில் - நளினியை சந்தித்துப் பேசியதை ஊடகங்கள் பரபரப்பாக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த சந்திப்பின் வழியாக - ராஜீவ் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை குறைக்கப்பட்டு அவர்கள் விடுதலையாகிவிடக் கூடாது என்று பார்ப்பன ஏடுகள் - பார்ப்பன ஊடகங்கள் பதறுகின்றன. இந்த நிலையில், டெல்லி உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி இராஜேந்திர சச்சார், இந்த சந்திப்பை வரவேற்றுள்ளதோடு இதன் தொடர் நடவடிக்கையாக தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

நளினியுடன் நடத்திய சந்திப்பு - தனிப்பட்ட சந்திப்பு; மன அமைதிக்கான சந்திப்பு என்று பிரியங்கா கூறியுள்ளார். இது பிரியங்காவின் பாராட்டத்தக்க மனிதாபிமான உணர்வின் வெளிப்பாடு. இந்த சந்திப்பின் மூலம் தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் முன்னாள் நகர்த்தப்பட்டுள்ளது என்று முன்னாள் நீதிபதி குறிப்பிட்டுள்ளார். தூக்குத்தண்டனை இந்தியாவில் ஒழிக்க வேண்டும் என்ற கருத்தை அவர் அழுத்தமாக வலியுறுத்துகிறார்.

சட்டத்தாலும் நடைமுறையாலும் 135 நாடுகளில் தூக்குத்தண்டனை ஒழிக்கப்பட்டுவிட்டது. 2006 ஆம் ஆண்டில் 25 நாடுகள் மட்டுமே தூக்குத் தண்டனையை நிறைவேற்றியுள்ளன. 2006 இல் தூக்குத் தண்டனை தரப்பட்டோர் 1,591. 2005 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 2,105. சிலி நாட்டின் அதிபர் எட்வர்டோ ஃபிரே தூக்குத் தண்டனை மனிதாபிமானத்துக்கு எதிரானது. கொலை செய்த குற்றத்துக்காக, நாமும் கொலை செய்யக்கூடாது” என்று கூறியுள்ளார்.

1980 ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றம் அரிதிலும் அரிதான வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கலாம் என்று ஒரு வரையறையை உருவாக்கியது. ஏதோ அரசியல் சட்டத்திலேயே, இப்படி இருப்பதுபோல ஒரு பொய்மையான தோற்றத்தை, உச்சநீதிமன்றமே உருவாக்கியது. அப்படி சொன்ன உச்சநீதிமன்றம் தான் 1980க்குப் பிறகு 1990 வரை 40 சதவீத வழக்கில் தூக்குத்தண்டனை விதித்தது. அதற்கு முன்பு - அதாவது ‘அரிதிலும் அரிதான வழக்கில் மட்டும் தூக்குத் தண்டனை விதிக்கலாம்’ என்று இவர்கள் வரையறுப்பதற்கு முன்பு - 1970-80 ஆம் ஆண்டுகளில் 37.7 சதவீத வழக்குகளில்தான் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. 1970 - 80களில் உயர்நீதிமன்றங்கள் 59 சதவீத வழக்குகளில் தூக்குத்தண்டனை விதித்தன, இதுவே 1980-90களில் 65 சதவீதமாக உயர்ந்துவிட்டது. தூக்குத் தண்டனையை குறைக்க வேண்டும் - அரிதாகப் பயன்படுத்த வேண்டும் என்று கூறிய நீதிமன்றமே அதற்கு முரணாக செயல்பட்டது.

தூக்குத் தண்டனையை ஆதரிப்போர், அழுத்தமாக முன்வைக்கும் வாதம் என்ன? தூக்குத் தண்டனையை எடுத்துவிட்டால் குற்றங்கள் அதிகரித்துவிடும் என்பதுதான். 1945 முதல் 1950 வரை திருவாங்கூர் சமஸ்தானத்தில் தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட்டிருந்தது. அப்போது அங்கு நடந்த கொலைகள் 962 . மீண்டும் 1950-55 இல் தூக்குத் தண்டனை கொண்டு வரப்பட்டபோது நடந்த கொலைகளோ 967.

1976 இல் கனடாவில் தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட்டப் பிறகு அங்கு கொலைகளின் சதவீதம்

4 ஆம் பக்கம்

# மத்திய அமைச்சர் ஆ. இராசா ஆய்வுரை (3)

# இன ஒடுக்கலைவிட கொடுமையானது சாதியம்

*22.2.2008 அன்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பெரியார் உயராய்வு மையமும், மகளிரியல் துறையும் இணைந்து நடத்திய ‘பெரியார் அம்பேத்கர் : இன்றைய பொருத்தப்பாடு’ என்ற தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவில் பங்கேற்று மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப துறை அமைச்சர் ஆ. இராசா ஆற்றிய உரையின் சென்ற இதழ் தொடர்ச்சி:*

அம்பேத்கர் சொல்லுவார்:

*Hindus are the only people in the world whose relation between man to man has been consecrated by the religion as inviolative and eternal* மாற்ற முடியாது. ஒருமுறை ஒருவன் பிறந்து விட்டால் மாற்ற முடியாது. நீ இந்த ஜாதி என்று பிறந்து விட்டால் நான் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மாற்ற முடியாது.

அய்யா கிண்டலாகச் சொல்லுவார். இந்து யார் என்று சொல்லுகிறபோது, இந்து யாரென்று அரசியல் சட்டத்திலே, நம்முடைய இந்து லாவிலே சொல்லுகிறபோது, யார் இந்து என்று சொன்னால் அய்யா சொல்லுகிறார்:

“ஆடு எதுன்னு கேட்டா எதுன்னு நீ சரியாச் சொல்லனுமில்ல? எது மாடு இல்லையோ, எது கோழி இல்லையோ, எது கொக்கு இல்லையோ அதெல்லாம் ஆடுன்னு சொன்னா அவன் பைத்தியக்காரன்ல?”

அது மாதிரின்னு சொன்னார். அதுவரைக்கும் புரியல நமக்கு. அய்யா சொல்றார், இந்துன்னா யாரன்னு இவன் சொல்லணுமில்ல?

Those who are not Muslims, those who are not Christians, those who are not Persians, those who are not Jews, they are Hindus. யாரெல்லாம் முகம்மதியன் அல்லவோ, யாரெல்லாம் கிறிஸ்துவன் அல்லவோ, யாரெல்லாம் பார்சியன் அல்லவோ, யாரெல்லாம் அவனல்லவோ, இவனல்லவோ அவனெல்லாம் இந்து.

இதைத் தாண்டி இன்னொருவன் பிறக்க முடியாது இந்த மண்ணில். இந்த முடிச்சைக் கொண்டு வந்து சேர்த்த இழிவு, பெருமை எது என்பதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். அது இந்த இந்துமதத்திற்குத்தான் உண்டு.

இதைத்தான் தந்தை பெரியார் அவர்களும், அண்ணல் அம்பேத்கர் அவர்களும் ஒரே இடத்தில் நின்று சொன்னார்கள்.

தந்தை பெரியார் பிராமணீயம் என்று எடுத்துக் கொண்டிருக்கக்கூடாது. இந்துத்துவா என்றுதான் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று சொன்னார்கள். நாங்கள் படித்துப் பார்த்தவரை, பிராமணியத்திற்கும், இந்துத்துவாவிற்கும் மிகப் பெரிய வித்தியாசமில்லை. இரண்டும் ஒன்றுதான். ஒரு சமூகத்தைப் படைத்து அந்த சமூகம் இப்படித்தான் வாழ வேண்டுமென்பது மட்டுமல்ல, அவர்களைப் படிக்காதே என்று சொன்ன சமூகம் உலகத்திலே இன்னொரு சமுதாயம் இல்லை. இன்னும்கூட அம்பேத்கர் ஒருமுறை ஆய்வு செய்கிறார். The caste system in India is not virtually visible இந்த அரங்கத்திலே இருக்கிற யாரையாவது பார்த்து வன்னியர் யார்? ஆதிதிராவிடர் யார்? கவுண்டர் யார்? பள்ளர் யார்? என்று நிறம் பிரிக்க முடியுமா? இந்த முகத்தைப் பார்த்து யாரையாவது ஜாதி சொல்ல முடியுமா உங்களால்? வேறுபாடு இருக்கிறது என்பது வேறு. Racial difference என்று சொல்லுவார்கள். ஒரு இன வேறுபாடு என்பது முகத்திலேயே தெரியும்.

நீக்ரோக்களைப் பார்த்தால் தெரியும். நீக்ரோக்கள் எவ்வளவு அல்லல்பட்டிருக்கிறார்கள்? The world owes a duty to untouchables as it is declared to other communities in the world என்று அம்பேத்கர் ஒரு இடத்திலே சொல்லுவார். உலகத்திலே நீக்ரோவை எப்படிப் பார்த்தீர்களோ, உலகத்திலே வேறு விதமான இன ஒடுக்கல் முறையை எப்படிப் பார்த்தீர்களோ, அப்படிப்பட்ட இன ஒடுக்கல் முறைதான் இந்தியாவில் இருக்கிறதென்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அது தெரியவில்லை நமக்கு. அவ்வளவுதான். ஒரு நீக்ரோவைப் பார்த்தால் தெரியும், வெள்ளைக்காரன் இவன், கருப்பன் இவன், இவனுக்கு கஷ்டம் இருக்கிறது என்று சொல்லலாம். நீக்ரோக்கள் படும் கொடுமையை பெஞ்சமின் மொலாய்சியஸ் என்கின்ற கவிஞன் ஒருமுறை சொன்னான். ஒரு கருப்புப் பெண்மணியை நீதிமன்றத்துக்கு அழைத்து வருகிறார்கள். அந்தக் கருப்பு இனப் பெண்மணி வெள்ளைக்காரப் போலீஸ்காரர்களால் கைது செய்யப்பட்டு காவல்நிலையத்தில் கொடுமைப் படுத்தப்படுகிறாள். எப்படிக் கொடுமைப்படுத்தப் படுகிறாள் என்பதை நீதிமன்றத்திலே பெஞ்சமின் மொலாய்சியஸ் என்கின்ற சிந்தனையாளன் தன்னுடைய கருத்தை சொல்லுகிறபோது நீதிமன்றக் காட்சி வாயிலாகச் சொல்லுவான். ஒரு கருப்பு இனப் பெண்ணை நீதிமன்றத்திற்கு கூட்டி வருகிறார்கள். நீதிபதி கேட்கிறார்:

“அம்மா, சிறையில் உன்னை யாராவது கொடுமைப்படுத்தினார்களா? இல்லை, எந்தக் கொடுமையும் படுத்தவில்லை. நன்றாகச் சொல் கொடுமைப்படுத்தினார்களா? இல்லை. அய்யா எனக்கு எந்தக் கொடுமையும் நடக்கவில்லை. ஆனால் ஒன்று, என் அருகிலே இருக்கிறானே இந்தப் போலீஸ்காரன் அவனுடைய தடிக்கு மட்டும் விந்து பாய்ச்சுகிற ஆற்றல் இருந்தால் நான் இந்நேரம் ஒரு குழந்தைக்குத் தாய்”. நீதிபதிக்குப் புரியவில்லை. அப்படியானால் எவ்வளவு பெரிய கொடுமையை அந்தப் போலீஸ்காரர்கள் அந்தப் பெண்ணுக்கு செய்திருக்கிறார்கள் என்பதிலிருந்து அந்த இன ஒடுக்கலினுடைய அடர்த்தியை உங்களால் அறிய முடியும்.

அம்பேத்கர் சொல்லுகிறார்: இந்த ஒடுக்கலைக் காட்டிலும் எங்கள் நாட்டில் இருக்கிற ஜாதிய ஒடுக்குமுறை கொடுமையானது. ஆனால் இதைச் சொல்லாமல் பார்த்துக் கொள்கிற வேலையை பிராமணீயம் இங்கே செய்து கொண்டிருக்கிறது. அதனால்தான் அவங்க அக்ரிமெண்ட் போட்டாங்க. எந்த இடத்திலே தந்தை பெரியாருக்கும் , அண்ணல் அம்பேத்கருக்கும் ஓர்மை வருகிறது என்று சொன்னால், முதல்ல சுதந்திரம் வேணான்னு சொன்னது ரெண்டுபேர்தான். இன்னும் சொல்லப்போனால் 1927 இல் சைமன் கமிஷன் வருகிறது. 1919 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தை எப்படித் திருத்தலாம் என்பதற்காக சைமன் கமிஷன் வந்தபோது, இங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்கள் சைமன் கமிஷனே வெளியேறு என்று சொல்லுகிறார்கள். அதற்கு அவர்கள் சொன்ன காரணம் போலித்தனமானது. இந்தியாவில் யாரும் இந்தியர்கள் அந்தக் குழுவிலே இல்லை என்று சொன்னார்கள். அது அல்ல நோக்கம். சைமன் கமிஷன் எதற்காக வந்தது என்றால், இந்தியாவில் ஜாதி என்றால் என்ன? எத்தனை ஜாதி இருக்கிறது? ஏன் இவர்கள் படிக்க வைக்கப்படாமலிருக்கிறார்கள்? ஏன் இவர்கள் நாகரீகம் இல்லாமல் இருக்கிறார்கள்? இவைகளுக்கு யார் காரணம்? என்பதைக் கண்டறிய வேண்டிய சூழ்நிலை கமிஷனுக்கு தேவைப்பட்டது. அம்பேத்கர் இன்னொரு இடத்தில் சொல்கிறார்.

No intellectual class in the world has prostituted its intelligence to invent a philosophy to keep its fellowmen in perpetual state of imbalance and poverty as Brahmin community has done to India உலகத்திலே இருக்கிற எந்த முன்னேறிய ஜாதியும், மேட்டுக்குடி ஜாதியும் தான் வளரும் சுரண்டும் உண்மைதான். ஆனால் படிக்காதே, வறுமையிலும், ஏழ்மையிலும் இரு என்பதற்காக கடவுளின் பெயரால் ஒரு தத்துவத்தைக் கண்டுபிடித்து, அந்த தத்துவத்தைச் சுமத்தி, ஒரு மிகப் பெரிய சமுதாயத்தை 95 பேர் இருக்கிற சமூகத்தை அறியாமையிலும், ஏழ்மையிலும், கல்வியறிவில்லாமலும் வைத்திருக்கிற ஒரு கொடுமைக்குச் சொந்தக்காரர்கள் யாரென்று சொன்னால், இந்தியாவில் பிராமணர்களைத் தவிர வேறு யாரும் கிடையாது.

இது அம்பேத்கர் அவர்கள் சொன்னது. இதைத்தான் அய்யா அவர்கள் சொன்னார்கள். உலகத்திலே எந்த தேசத்திலேயும் இப்படி இல்லையே, வேற்றுமைகள் இருக்கிறது. ஆனால் அந்த வேற்றுமைகளை பிறப்போடு முடிச்சுப் போடவில்லையே என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். ஆக அந்த இரண்டு பேருக்கும் இருக்கின்ற ஒற்றுமை என்ன என்று சொன்னால், இந்து மதத்தை எதிர்ப்பது. அதற்குக் காரணம், மனிதனை மனிதனாகப் பார்ப்பது. அது ஒருவிதம். மேலெழுந்த வாரியாகப் பார்க்கின்ற போது, மார்க்சிய கண்ணோட்டத்தில் பார்த்தால் இரண்டு பேரும் பொருள் முதல்வாதிகள். ஒரு பொருள் முதல்வாதிக்கு இருக்கவேண்டிய அடிப்படையான பண்பு என்ன என்று சொன்னால், இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை இயற்கையாகவே பார்ப்பது. சிம்பிளா சொன்னா அவ்வளவுதான். மெட்டீரியலிசம்னா போட்டுக் குழப்பிகிட்டு இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. மெட்டீரியலிசம்னு சொன்னா, இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை இயற்கையாகவே பார்ப்பது.



இந்த மார்க்சிய கண்ணோட்டத்தோடு பார்த்த இந்தியாவில் இரண்டு தலைவர்கள் சமூகத்தைப் பார்த்தவர்கள் உண்டு என்றால் பெரியாரும் அம்பேத்கரும்தான் வேறு எந்த கம்யூனிஸ்ட்காரர்களும் கிடையாது. எஸ்.ஏ.டாங்கேவே, கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மிகப் பெரிய தலைவர் எஸ்.;ஏ. டாங்கேவே வேதத்திலிருந்து தான் கம்யூனிசம் வந்ததுன்னு சொல்லிவிட்டுப் போயிட்டாரு. வேதத்துக்கும் கம்யூனிசத்துக்கும் என்ன சம்பந்தம்? இன்றைக்கு இருக்கின்ற இந்த மேடையில் நின்று கொண்டு சொல்கின்றேன். பெரியாருக்கும் அம்பேத் கருக்கும் பொருத்தப்பாட்டைப் பற்றி இன்றைக்கு பேசிக் கொண்டிருக்கின்றோம். ஒரு காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் பெரியாரையும், அம்பேத்கரையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள். ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்றால் இவர்களுடைய வாழ்க்கைத் தளம், இவர்களுடைய நெறி எல்லாம் ஒரு சின்ன சிட்டிகைக்குள் அடைக்கப்பட வேண்டியவை என்று கருதியவர்கள். வர்ணபேதம் பேசப்பட வேண்டியதில்லை என்று கருதியவர்கள். ஆனால் அப்படிப் பேசாமல் இருப்பதற்கு அவர்கள் மார்க்சியத்தைப் படிக்காமல் போனார்கள் என்பதுதான் உண்மை. 1848 இல் பெரியார் பிறப்பதற்கு 30 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் சுதந்திரப் போர் என்கின்ற தலைப்பில் காரல் மார்க்ஸ் எழுதுகிறார். இந்தியாவைப் பற்றி,

*“பசுவையும் குரங்குகளையும் வணங்குகிற மூடத்தனம் இருக்கின்ற தெற்காசியாவில், குறிப்பாக இந்தியாவில், மனிதனை இன்னொரு மனிதன் கருவியாகக் கருதுகிற தெற்காசியாவில் குறிப்பாக இந்தியாவில் புரட்சி வருவதற்கான சாத்தியக் கூறுகளே இல்லை”*

- என்று 1848 இல் காரல்மார்க்ஸ் சொன்னார். காரல் மார்க்ஸ் சொன்ன அறிவுரையை ஏற்க மறுத்த மார்க்சியவாதிகள் ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு தந்தை பெரியாரின் தடியையும், அம்பேத்கரின் கண்ணாடியையும் போட்டுக் கொண்டு அருந்ததியர்களின் மாநாட்டில் உரிமைக்காகக் கலந்து கொள்கிறார்கள் என்றால் பெரியாரும் அம்பேத்கரும் இன்னும் நூறு ஆண்டுகளுக்குத் தேவைப்படுகிறார்கள் என்பதைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். இதுதான் இவர்களுக்கு இருக்கிற பொருத்தப்பாடு. இந்துயிசம் எதிர்ப்பு என்று வருகிறபோது இரண்டு பேரும் ஒரு தளத்தில் நின்றார்கள். அதற்கு என்ன காரணம்? இரண்டு பேரும் ஒருவிதத்திலே நாத்திகவாதிகள். அம்பேத்கர் தன்னை ஒரு இடத்திலேகூட நாத்திகவாதி என்று வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால், இருக்கிற கட்டமைப்பை உடைக்க வேண்டுமென்று விரும்பியவர். பெரியார் இன்னொரு இடத்தில் சொல்லுகிறார்:

நான் நாத்திகன் என்றுகூட சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. நான் தாராளவாதி என்று அவர் சொல்கிறார். அதற்கு என்ன காரணமென்றால், பெரியாருடைய நாத்திகம், இன்றைக்கும் சொல்லுகின்றேன். திராவிடர் கழகத்தின் மீது அல்லது பெரியாரின் கருப்புச் சட்டைக்காரர்கள் மீது இருக்கிற மிகப் பெரிய குற்றச்சாட்டு. பெரியார் என்றால் இவர்கள் அறிந்தது, அல்லது பெரியார் என்றால் இவர்கள் அடையாளப்படுத்த விரும்புவது கடவுள் மறுப்பாளராக மட்டும்தான் பெரியாரைப் பார்க்கிறார்கள். மதம் வேண்டாம், கடவுள் வேண்டாம், மோட்சம் இல்லை, நரகம் இல்லை என்று சொல்லுவதற்காக மட்டுமே பெரியார் தேவைப்படுகிறார் என்கின்ற ஒரு வறட்டுத்தனமான நாத்திகத்திற்குள் பெரியாரை அடக்குவதற்கு இன்றைக்கு இருக்கிற பெரியாரிஸ்ட்டுகள் தெரிந்தோ, தெரியாமலோ ஆளாகிறார்கள் அல்லது ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்கின்ற ஒரு குற்றச்சாட்டில் இருக்கிற உண்மையை நாம் மறுதலிப்பதற்கில்லை.

அதனால்தான் பெரியார் சொல்லுகிறார்: நான் நாத்திகன் என்பதைக் காட்டிலும் ஒரு தாராளவாதி என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்படி அவர் சொல்லுவதற்குக் காரணம், பெரியாரின் நாத்திகம் சமூகம் சார்ந்தது. (தொடரும்)

# கழகத்தின் சாதி ஒழிப்பு பரப்புரைப் பயணம்

*தூத்துக்குடி மாவட்டத்தில் அம்பேத்கர் பிறந்த நாளில் எழுச்சியோடு நடைபெற்றது சாதி ஒழிப்பு பரப்புரை பயணம்.*

தூத்துக்குடி மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் அம்பேத்கரின் 118வது பிறந்த நாளை முன்னிட்டு ஏப்ரல் 14, 2008 இல் தூத்துக்குடி முதல் திருச்செந்தூர் வரை சாதி ஒழிப்பு பரப்புரை பயணம் மேற்கொள்ளப் பட்டது. பெரியார் திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற இந்த பரப்புரை பயணத்தில் ஆதித் தமிழர் பேரவை, புரட்சிகர இளைஞர் முன்னணி தோழர்களும் பங்கெடுத்தனர். பரப்புரை பயணம் சென்ற இடங்களில் மக்கள் ஜனநாயக கட்சி, தமிழ் தேசிய இயக்கம், திராவிட முன்னேற்ற கழகத் தோழர்கள் வரவேற்று பரப்புரை பயணம் வெற்றியடைய ஆதரவளித்தனர். சாதி ஒழிப்பு பரப்புரை பயண தொகுப்பு:

ஏப்ரல் 14, 2008 காலை 8 மணிக்கு தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையம் முன்புள்ள அம்பேத்கர் சிலையிலிருந்து தொடங்கியது. மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு தலைமையில் மன்னை இராம. முத்துராமலிங்கம் சாதி ஒழிப்பு பிரச்சாரப் பாடலுடன் சி.ஆ.காசிராசன் முன்னிலையில், ஆதித் தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் க. கண்ணன் பரப்புரை பயணத்தை தொடங்கி வைத்தார். பரப்புரை பயணத்தை விளக்கி பெரியார் திராவிடர் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் பால் பிரபாகரன் விளக்க உரையாற்றினார். பயணத்தின் தொடக்கத்தில் விடுதலை சிறுத்தைகள், பகுஜன் சமாஜ் கட்சி, நத்தமிழ் இயக்கம், தி.மு.க. பன்னாட்டு தமிழுறவு மன்றத் தோழர்கள் மற்றும் பொது மக்கள் திரளாக கூடியிருந்தனர். முன்னதாக புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன், மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு ஆகியோர் மாலை அணிவித்தனர். மாவட்டச் செயலாளர் ச.கா. பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

### சாயர்புரம்

கிறித்துவ மக்கள் அதிகமாக வாழும் சாயர்புரம் பகுதியில் மன்னை இராம. முத்துராமலிங்கம் இசை நிகழ்ச்சியோடு தொடக்கிய பரப்புரை பயணத்தில் பொறிஞர் சி. அம்புரோசு தலைமையுரையாற்ற ஆதித் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் ரா.வே. மனோகர் பேசும்போது, தனக்கு கீழாக ஆதிக்கம் செலுத்த ஒரு சாதி இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை மக்கள் ஒழிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். இறுதியாக தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் பேசும் போது 1956 இல் சாதியத்தைத் தூக்கிப் பிடிக்கும் அரசியல் சட்டப் பிரிவை எரிக்கும் போராட்ட வரலாற்றினை எடுத்துக் கூறி, நாம் எல்லாம் இந்துக்கள் என வளம் வரும் இந்துத்துவ அமைப்புகள், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்றால் எதிர்ப்பு தெரிவிப்பதும், கல்வி வேலை வாய்ப்பில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என கேட்டால் எதிர்ப்பு தெரிவிப்பதும், அவர்களின் சாதி மேலாண்மையை வெட்ட வெளிச்சமாக்குகிறது. என்றும் இந்த கோரிக்கையை முன் வைக்கும் போது இவர்கள் இந்துக்களாக தெரியவில்லையா? என விளக்கி உளுந்தூர் பேட்டை எரையூரில் தலித் கிறித்துவர்கள் மீதான சாதி ஒடுக்குமுறையை விளக்கமாக எடுத்துக் கூறினார். இந்து மதமும், கிறித்துவமதமும், எந்த மதமும் சாதியை ஒழிக்காது. மக்கள் மன மாற்றமே சாதியை ஒழிக்கும் என தமிழர்களே சாதி ஒழிப்பிற்கான மனமாற்றத்திற்கு வாருங்கள் என




அழைப்பு விடுத்தார். இறுதியில் ச.கா.பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

(தொடரும்)

## நன்கொடை

- 13.2.2008 அன்று பெண்ணாகரம் அ. சந்தோசு குமார் - இ. பரிமளா வாழ்க்கை ஒப்பந்தத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்தி வைத்தார். மணமக்கள் சார்பில் கழக ஏட்டுக்கு ரூ.2000 நன்கொடை வழங்கப்பட்டது.
- மேட்டூர் கெம்பிளாஸ்ட் நிறுவனத்தில் பணியாற்றும் தோழர் காதர்பாட்சா கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடையை கழகத் தலைவரிடம் வழங்கியுள்ளார்.
- திருப்பூர் கழகத் தோழர் மனிதசக்தி ஆறுமுகம் அவர்களின் 'பெரியார் இல்லம்' மற்றும் வணிக வளாகத்தை மாவட்டத் தலைவர் சு. துரைசாமி திறந்து வைத்தார். கழகத் தோழர்கள் அங்ககுமார், முகில்ராசு, சிவசாமி, அகிலன், சுசீலா, கேசவன், வேலுச்சாமி உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். விழா நினைவாக கழக ஏட்டுக்கு ரூ.1000, மனித சக்தி ஆறுமுகம் வழங்கினார்.
- 18.2.2008 அன்று பெதம்பட்டியில் கழகப் பொதுச்செயலாளர் கோவை. இராமகிருட்டிணன் தலைமை ஏற்று நடத்தி வைத்த பல்லடம் ஒன்றிய கழக செயலாளர் கி.விசயன்-சி.செயசாந்தி மணவிழாவையொட்டி மணமக்கள் கழக ஏட்டுக்கு ரூ.500 நன்கொடை வழங்கினர்.

நன்கொடைகளை நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (-ஆர்)

முதல் பக்கத் தொடர்ச்சி

இது தொடர்பான தகவல்களைத் தெரிவித்துள்ளார். தற்போது 6 இடங்களில் துவங்கப்பட்டு நடைபெற்று வரும் அர்ச்சகர் பயிற்சி நிலையங்களில் மொத்தம்207 பேர் அர்ச்சகர் பயிற்சி பெற்று வருகின்றனர். இதில் இடஒதுக்கீட்டுக் கொள்கையின்படி பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 76 பேரும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 55 பேரும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 34 பேரும் பயிற்சியில் சேர்க்கப்பட்டுள்ளனர். வரும் ஜுன் திங்களோடு பயிற்சி முடிந்து, கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்று கூறியுள்ளார்.

10 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த 15 முதல் 24 வயதுள்ள இளைஞர்கள் பயிற்சியைப் பெற்று வருகிறார்கள். திருவள்ளூர் மாவட்டம் நரசிங்கப்புரத்தைச் சார்ந்த கோகுலகிருஷ்ணன் என்ற பயிற்சி பெறும் இளைஞர் கூறுகையில் "நான் தீட்டுப்படும் சாதி; மாமிசம் சாப்பிடுகிறவன்" என்று கூறி, எனது ஊர்கோயிலில் நான் பூசாரியாக இருக்கக்கூடாது என்று, சாதி வெறியர்கள் என்னை விரட்டி அடித்தனர். இப்போது நான் முறையாக பயிற்சி பெற்று, நீதிமன்ற அதிகாரத்துடன் அர்ச்சகர் பயிற்சிப் பெற்றுள்ளேன். மீண்டும் அதே கிராமத்தில் அர்ச்சகர் ஆக வேண்டும் என்பதே எனது விருப்பம்" என்று கூறுகிறார்.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் நடக்கும் அர்ச்சகர் பயிற்சி வகுப்பில் - அனைத்து சாதிகளையும் சேர்ந்த 32 இளைஞர்கள் மிகவும் ஆர்வத்தோடும், அர்ப்பணிப்போடும் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்று, இந்து அறநிலையத்துறை இணை ஆணையர் பி.ஜெயராமன் கூறுகிறார். இவர்கள் அனைவரும் அசைவம் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, சைவமாகிவிட்டதோடு, பூணூலையும் அவர்களாகவே போட்டுக் கொண்டு விட்டார்களாம். தமிழ்மொழி வழியாகவே அவர்களுக்கு பாடல்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. கோயில் நுழைவுக்கே போராட்டம் நடத்த வேண்டியிருந்த சமூகத்தில் கோயில் நுழைவு உரிமைச் சட்டம் 1947 இல் வந்தது. இப்போது தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் கோயில் அர்ச்சகர்களாகும் உரிமை பெற்று அர்ச்சகர்களாகும் நிலை - தமிழ்நாட்டில் உருவாகியிருக்கிறது. இது பார்ப்பன வர்ணாஸ்ரமத்தின் மீது விழுந்த மரண அடியாகும்.

ஆள்பவனிடம் பேசும் உரிமை - தங்களுக்கும், தங்களது சமஸ்கிருதத்துக்கு மட்டுமே உண்டு என்ற பார்ப்பன இறுமாப்பு, தகர்க்கப்பட்டுள்ளது. பெரியார் கொள்கைக்கு கிடைத்த மாபெரும் வெற்றி.

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

குறைந்துவிட்டது. 1988 இல் அய்.நா. நடத்திய ஆய்வில் தூக்குத் தண்டனை விதிப்பதால் குற்றங்கள் தடுக்கப்படுகின்றன என்ற கருத்துக்கு ஆதாரங்களே இல்லை என்று கண்டறியப்பட்டது. 1976 ஆம் ஆண்டு முதல் அமெரிக்க உச்சநீதிமன்றம் மீண்டும் தூக்குத் தண்டனையை அறிமுகப்படுத்தியது. அதற்குப் பிறகு 500 பேர் அந்த நாட்டில் தூக்கில் போடப்பட்டனர். இதே காலகட்டங்களில் பல ஆண்டுகாலமாக சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருந்த 75 பேர். இவர்கள் அப்பாவிகள். தவறாக சிறைப்படுத்தப்பட்டுவிட்டனர் என்று கூறி விடுதலை செய்யப்பட்டனர். இரண்டு சம்பவங்களும் ஒரேகால கட்டத்தில் நிகழ்ந்தவை. தூக்கில் போடப்பட்ட 500 பேரில் எத்தனையோ அப்பாவிகள் இருந்திருக்கலாமே! 7 பேருக்கு தூக்கு என்றால் - தவறாக சிறை வைக்கப்பட்ட ஒருவருக்கு விடுதலை என்ற வீதத்தில் - இது நடந்து முடிந்திருக்கிறது.


குற்றம்சாட்டப்பட்டவருக்கு, சட்டத்தின் தரமான உதவிகள் சமமாக கிடைப்பதில்லை. வசதி படைத்த ஒருவர் நல்ல பணம் கொடுத்து சிறந்த வழக்கறிஞரை நியமித்துக் கொண்டு தூக்குத் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கான சட்ட நுணுக்கங்களை தனக்காக வாதிடச் செய்ய முடியும். இதுவே ஏழையாக இருந்தால், இந்த வாய்ப்புகள் கிடைக்குமா? ஏழைகள் தூக்குத் தண்டனையைத்தான் சந்திக்க வேண்டும். இந்தியாவில் தண்டனை வழங்கும் செயலமைப்பு - சீர்மையாக இல்லை. எனவே தூக்குத் தண்டனை சட்டத்தில் இருப்பதே - நீதிக்கு எதிரானது.

உலகமே - இப்போது தூக்குத் தண்டனைக்கு எதிராக குரல் கொடுத்து வருகிறது. 2007 நவம்பரில் அய்.நா.வின் பொது அவை - உலகநாடுகள், தூக்குத்தண்டனை விதிப்பதை நிறுத்தி வைத்து, படிப்படியாக தூக்குத் தண்டனையை சட்டத்திலிருந்து நீக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தது. இத்தீர்மானத்தை எதிர்த்து இந்தியா ஓட்டளித்தது. மீண்டும் 2008 இல் அய்.நா. பொது அவை முன் இதே தீர்மானம் வரவிருக்கிறது. அப்போது, இந்தியா, தனது நிலையை மாற்றிக் கொண்டு, மனித உரிமைகளைப் பேணும் நாடாக தன்னை அடையாளப்படுத்த வேண்டும், என்கிறார், நீதிபதி இராஜேந்திர சச்சார்! (கட்டுரை - 'டைம்ஸ் ஆப் இந்தியா', ஏப்.26)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 1st May 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 மே 8, 2008 புரட்சி 7 முழக்கம் 19 விலை : ரூ.2.50


## கழக முயற்சி வெற்றி!

### அச்சகப் பணியாளர் தேர்வு நிறுத்தம்

கோவை பெரியநாயக்கன் பாளையம் வீரபாண்டி ஊராட்சியில் அமைந்துள்ள மத்திய அரசு அச்சகத்திற்கு பணியாளர்கள் தேர்வு செய்யும் பணி நடந்து வந்தது. பணியாளர்களை தேர்ந்தெடுக்கும் குழுவில் 3 பேருமே கேரள மாநிலத்தை சார்ந்தவர்களாக இருப்பதால் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று தேர்வுக் குழுவை மாற்றி தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பெரியார் திராவிடர் கழகம் தலைமையில் தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், தே.மு.தி.க., லோக் ஜனசக்தி, புரட்சிகர இளைஞர் முன்னணி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகள் தொடர்ந்து போராட்டங்கள் நடத்தி வந்தன. மத்திய அமைச்சர் ஜெய்பால் ரெட்டி அவர்களுக்கு 1000 தந்திகளும் கொடுக்கப்பட்டன.

இந்நிலையில் மத்திய அரசு அச்சகத்தில் நடந்து வந்த பணியாளர் தேர்வுக்கான நேர்காணல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்துக் கட்சிகளின் கோரிக்கையை ஏற்று தமிழர்களை புறக்கணித்து நடத்தி வந்த நேர்காணல் தேர்வை நிறுத்தி வைத்த அச்சகத் துறை சார்ந்த மத்திய அமைச்சர் ஜெய்பால் ரெட்டி அவர்களுக்கு அனைத்துக் கட்சிகளின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கி பணியாளர்களை தேர்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் என்று கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### மயிலை காவல்நிலையத்தில் பூசை

மயிலாப்பூர் கபாலீசுவரன் கோயில் உண்டியலைத் திருடியவர்கள் யார் என்பதை, கண்டுபிடிக்க முடியாத காவல்துறை, கடைசியில் – கடவுளிடமே, தலையிடுமாறு மனு போட்டுள்ளது. மயிலாப்பூர் காவல் நிலையத்தில் ஏப்.28 ஆம் தேதி விடியற்காலை 4 புரோகிதர்களை அழைத்து ‘சாந்தி பூஜை’ நடத்தியுள்ளார்கள். நள்ளிரவுக்குப் பின் தொடங்கிய பூஜை, ஒரு மணி நேரம் நீடித்தது. காவல்துறையினர் பூட்சுகளை கழற்றிவிட்டு பயபக்தியுடன் வந்தனர். புரோகிதர் பூஜைக்குப் பிறகு ‘ஆரத்தி’ எடுத்தார். பிறகு காவல் நிலையம் முழுதும் புரோகிதர் ‘புண்ணிய தீர்த்தத்தை’ தெளித்தார். ஆனாலும் – பூஜை எந்தப் பலனையும் தரவில்லை. அதே காவல்நிலையத்தில் குற்றப் பிரிவு ஆய்வாளராக பணியாற்றிய ஜி. சுப்ரமணியம், பூஜைக்குப் பிறகு கடுமையாக நோயுற்று, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

– ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு ஏப்.29

## கலால் வரித் துறையில் மலையாளிகள் ஆதிக்கம்: கழகம் போர்க்கொடி



மத்திய அரசின் சுங்கம் மற்றும் கலால் வரித்துறையின் கோவை - சேலத்திற்கான மண்டல அலுவலகம் கோவையிலுள்ளது. இங்கு குரூப் டி - சிப்பாய் (பியூன்) பணிக்கான தேர்வு 30 காலியிடங்களுக்காக நடைபெற்று வருகிறது. இந்த பணியிடங்கள் கோவை, சேலம் அலுவலகங்களுக்கானவை. இந்த பணியிடங்களுக்கு கேரளாவிலிருந்து நூற்றுக் கணக்கான மலையாளிகள் விண்ணப்பித்து தற்போது நாள்தோறும் நேர்காணலுக்கு வந்து கொண்டு இருக்கிறார்கள். ஏற்கனவே உள்ள கலால் வரித்துறையில் 320 பணியாளர்களில் 100க்கும் மேல் மலையாளிகள் உள்ளனர். ஒரு வருடத்திற்கு முன்பு வரை உயர் அதிகாரிகள் மலையாளிகளாக இருந்ததால் அனைத்து முக்கிய பதவிகளிலும் மலையாளிகள் அமர்த்தப்பட்டனர்.

அதனால் கண்காணிப்பாளர், இன்ஸ்பெக்டர், ஓட்டுனர் சங்கங்கள் அனைத்தும் மலையாளிகள் ஆதிக்கத்தில் உள்ளது. சிப்பாய் தேர்வில் மலையாளிகளை சேர்க்க இந்த சங்கங்கள் நிர்வாகத்தை பணியவைத்து நிர்ப்பந்திக்கிறார்கள்.

குரூப் டி சிப்பாய் பதவிக்கு கர்நாடகத்தில் கன்னடர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஆனால் தமிழ் நாட்டில் பாதிக்கும் மேல் மலையாளிகளை தேர்ந்தெடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சேலம் - கோவை மாவட்டத்திற்கு மட்டுமான பதவியிது. எனவே வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் மூப்பு அடிப்படையில் உள்ளூர் மக்களை தேர்வு செய்ய கோரி பெரியார் திராவிடர் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

3.5.2008 சனிக்கிழமை மாலை 4 மணி அளவில் கோவை செஞ்சிலுவை சங்கம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமை தாங்கினார். செயற் குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி முன்னிலை வகித்தார். கோவை வடக்கு மாவட்ட தலைவர் சு. துரைசாமி, ம.ரே.ராசு குமார், வெ. கோபால், சா. கதிரவன், இ.மு. சாஜித் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி அரசியல் கட்சித் தலைவர்களான மருத்துவர் இராமதாசு, தொல். திருமாவளவன், வைகோ உள்ளிட்ட அனைத்து தலைவர்களுக்கும், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மத்திய அமைச்சர்களுக்கும் கழக சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மத்திய இணை அமைச்சர் பழனி மாணிக்கம் அவர்களுக்கும் கழகப் பொதுச்செயலாளர் கோவை இராம கிருட்டினன் கடிதம் அனுப்பியுள்ளார்.

**செய்தி : இ.மு. சாஜித்**

## விடுதலைப்புலிகளை மதிக்கும் பகத்சிங்கின் வாரிசுகள்

மாவீரன் பகத்சிங், பிரிட்டிஷ் ஆட்சியாளரால் தூக்கிலிடப்பட்டபோது, அவரது இளைய சகோதரர் ரன்பீர்சிங்கின் வயது 6. ரன்பீர்சிங்கும், பகத்சிங்கை போலவே கொள்கை உறுதி கொண்டவர். ரன்பீர்சிங்கின் மகன் இயேனான் சிங் - இப்போது இந்திய ராணுவத்தில் உயர் அதிகாரி. ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் பணி புரிகிறார். பகத் சிங் தம்பி மகன் தான் இயோனன் சிங். பிரதமர் மன்மோகன்சிங் - ஜம்மு காஷ்மீர் சென்றபோது அவரது கவனத்துக்கு இது கொண்டுவரப்பட்டது. உடனே பிரதமர் அவரை அழைத்துப் பேசினார். இந்த இயோனன் சிங் - ஈழத் தமிழர்களை அழித்தொழிக்கச் சென்ற, “இந்திய அமைதிப் படையில்” ஒருவராக ஈழம் சென்றவர். யாழ்ப்பாணத்தில் ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்தவர். இதற்காக - இவருக்கு இந்திய அரசு ‘வீர சக்கரா’ விருது வழங்கியது. ஆனால் மகன் விருது பெறும் விழாவில் அவரது தந்தையும், பகத் சிங்கின் இளைய சகோதரருமான ரன்பீர்சிங் பங்கேற்க மறுத்து விட்டார். இதற்கான காரணத்தை விருது பெற்ற மகன் இப்போது ஒரு பேட்டியில் கூறியுள்ளார்:

“என் தந்தை எனது பெரியப்பா பகத்சிங்கைப் போலவே சிறந்த லட்சியவாதி. சுதந்திரம் பெற்ற பிறகே திருமணம் செய்வேன்; அதுவும் ஒரு விதவைப் பெண்ணையே திருமணம் செய்வேன். என்று உறுதி எடுத்து, அதை நிறைவேற்றியவர். விடுதலைப்புலிகளின் உறுதியான போராட்டத்தையும், துணிவையும் எனது தந்தை மிகவும் மதிப்பவர். லட்சியத்துக்காக, உயிரையும் இழக்கும் இந்தப் போராளிகளின் தியாகம் மதிக்கப்பட வேண்டும் என்று கருதினார். அந்த தியாகமும், வீரமும், மதிக்கப்படாததைக் கண்டு வேதனையடைந்தார். அதனால் தான் ஈழத்தில் ‘அமைதி’ படையில் நான் பங்கேற்று நடத்திய “வீரச் செயலுக்கு” விருது வழங்கும் விழாவை அவர் புறக்கணித்தார்” என்று கூறியுள்ளார்.

பகத்சிங்கின் வாரிசு - அவரது வழியிலேயே சிந்திக்கிறார். தாய் நாட்டின் விடுதலைக்கு பகத்சிங் போராடி வீரமரணம் தழுவியதில் உள்ள நியாயத்தை தமிழ் ஈழத்துக்காகப் போராடும் விடுதலை புலிகளிடமும் அவர் பார்க்கிறார். எனவே விடுதலைப்புலிகளைக் கொன்றதற்காக மகனுக்கு விருது கிடைத்தாலும் - அதில் மகிழ்ந்து நிற்க அவர் தயாராக இல்லை.

## அய்.அய்.டி.யின் பார்ப்பன பண்ணயம்

சென்னை கிண்டியில் - பார்ப்பன ‘அக்கிரகாரமாக’ திகழும் அய்.அய்.டி. நிறுவனம் உள்ள இடம் தமிழக அரசுக்கு உரிமையானது. 50 ஆண்டுகளுக்கு முன்பு - இந்த இடம் 99 ஆண்டு குத்தகைக்கு அய்.அய்.டி. தொடங்க தமிழக அரசால் வழங்கப்பட்டது. அய்.அய்.டி.யை சுற்றியுள்ள வனப்பகுதிக்கும், வன விலங்குகளுக்கும் சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது என்ற நிபந்தனையோடுதான் இடம் குத்தகைக்கு விடப்பட்டது. ஆனால் கடந்த 12 ஆண்டுகளில் 200 கோடி ரூபாய் செலவில், புதிய கட்டிடங்களை எழுப்பியுள்ள அய்.அய்.டி. நிர்வாகம் அதற்கான அனுமதி எதையும் சென்னை பெருநகர வளர்ச்சி நிறுவனத்திடம் பெறவில்லை. பேராசிரியர் முரளீதரன் - தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விளக்கம் கேட்டதற்கு பெருநகர வளர்ச்சி நிறுவனம், இந்தப் பதிலை தந்துள்ளது. ‘பார்ப்பன பண்ணயம் கேட்பாரில்லை’ என்ற தான்தோன்றித்தனத்தையே இது காட்டுகிறது.

அண்மையில் - உச்சநீதிமன்றம் 27 சதவீத இடஒதுக்கீட்டை ஏற்று தீர்ப்பளித்தவுடன், சென்னை அய்.அய்.டி. இயக்குனரான ஆனந்த் என்ற பார்ப்பனர், இதை உடனே சென்னையில் அமுல்படுத்த முடியாது என்றார். மாணவர்கள் கூடுதலாக சேர்க்கப்படும்போது, கட்டமைப்பு வசதிகளை அதிகப்படுத்த வேண்டும் என்றும், அப்படி அதிகப்படுத்தினால் வளாகத்தின் வனப்பகுதி சுற்றுச் சூழல் பாதித்துவிடும் என்றும் கூறினார். இந்த யோக்கியர்கள் தான், கடந்த 12 ஆண்டுகாலமாக சுற்றுச் சூழல் வனப்பகுதியை பாதிக்குமளவுக்கு ரூ.200 கோடி செலவில் கட்டடங்களையும், ஓய்வு மாளிகைகளையும், நீச்சல் குளங்களையும் கட்டி எழுப்பி, உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வந்திருக்கின்றனர். அதுவும், தமிழக அரசின் அனுமதி பெறாமலே!

தலையங்கம்

## பெரியார் கொள்கையின் வெற்றி!

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்வி, வேலை வாய்ப்பு உரிமைகளுக்காக பெரியார் தொடர்ந்து நடத்திய போராட்டத்தின் வெற்றிகளை இப்போது கண்கூடாக காண முடிகிறது. அய்.ஏ.எஸ். தேர்வுகளில் நாடு முழுதிலிருந்தும் தேர்வு செய்யப்படும் பிற்படுத்தப்பட்ட வேட்பாளர்களில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் பிற்படுத்தப்பட்டவர்களே அதிகம் என்ற விவரங்கள் வெளிவந்துள்ளன. ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு (மே 5) இது பற்றிய விரிவான செய்தி ஒன்றை முதல் பக்கத்தின் தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளது. ‘ரிசர்வ் தொகுதிக்கான மொத்த இடங்களில் தமிழ்நாடு 85 சதவீதத்தைக் கைப்பற்றியுள்ளது’ என்ற தலைப்பில், அந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் நாட்டைப் போல் இரு மடங்கு மக்கள் தொகைக் கொண்ட உ.பி.யை பின்னுக்குத் தள்ளிவிட்டு தமிழ்நாடு முதலிடத்தில் நிற்கிறது.

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோரில் 2004 ஆம் ஆண்டில் 29 பேரும் (118 பேர் தேர்வு பெற்ற பிற்படுத்தப்பட்டோர்), 2005 ஆம் ஆண்டில் 25 பிற்படுத்தப்பட்டோரும் (தேர்வு பெற்ற 104 பிற்படுத்தப்பட்டோரில்), 2006 ஆம் ஆண்டில் 22 பேரும் (தேர்வு பெற்ற 144 பிற்படுத்தப்பட்டோரில்) தேர்வு பெற்றுள்ளனர். இத்தனைக்கும் மத்திய தேர்வாணையம் இந்த ஆண்டுகளில் திறந்த போட்டியில் தேர்வு பெற தகுதியுள்ள பிற்படுத்தப்பட்டோரையே அதில் சேர்க்காமல், பிற்படுத்தப்பட் டோர் ஒதுக்கீட்டின் கீழ் முறைகேடாக சேர்த்தது. உண்மையில் தகுதியுள்ள பிற்படுத்தப்பட்டோரை, திறந்த போட்டியில் சேர்த்திருந்தால் – மேலும் பிற்படுத்தப்பட்ட அய்.ஏ.எஸ்.களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கும். அதேபோல் ஷெட்யூல்டு மாணவர்களில் 2004 இல் 8 பேரும் (மொத்தம் தேர்வு பெற்ற 64 பேரில்), 2005 இல் 5 பேரும் (மொத்தம் தேர்வு பெற்ற 46 பேரில்), 2006 இல் 10 பேரும் (மொத்தம் தேர்வு பெற்ற 80 பேரில்) தமிழ் நாட்டிலிருந்து தேர்ச்சி பெற்றுள்ளனர்.

முதல் 200 இடங்களைப் பெற்றுள்ள வேட்பாளர்களில் கடந்த 2 ஆண்டுகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த பிற்படுத்தப் பட்ட மாணவர்கள்தான், கூடுதலான இடங்களைப் பிடித் துள்ளனர். 2005 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச் சார்ந்த 11 பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், 2006 இல் 9 பேர் என்று முதல் 200 பேரில் இடம் பிடித்து, தமிழகத்தின் தனிச் சிறப்பை நிலைநாட்டியுள்ளனர். உ.பி. மகாராஷ்டிரா, டெல்லியிலிருந்து கூட இந்த எண்ணிக்கையில் பிற்படுத்தப்பட்டோர் இடம் பிடிக்க முடியவில்லை என்று, அந்த ஆங்கில நாளேடு சுட்டிக் காட்டியுள்ளது.

தமிழக ஓய்வு பெற்ற அய்.ஏ.எஸ். அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் பி.சங்கர், இந்த சாதனை பற்றி கூறுகையில் தமிழ்நாட்டின் இந்த வெற்றிக்காக பெரியாருக்கு நன்றி கூற வேண்டும் என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்.

வாய்ப்புகள் வழங்கப்பட்டால் சாதனை படைக்க முடியும் என்றும், கல்விக்கான ‘தகுதி’யும், திறமையும் பார்ப்பன உயர்சாதியினருக்கே உண்டு என்பது மோசடி வாதம் என்றும், பெரியார் கூறியதோடு, பார்ப்பனர் பேசிய ‘தகுதி திறமை’ கூப்பாட்டையும் தொடர்ந்து அம்பலப்படுத்தினார். பெரியாரியம் சமூகநீதித் தளத்தில் மகத்தான வெற்றிகளைக் குவித்திருப்பதை மறுக்க முடியாது. ஆனாலும் சாதி எதிர்ப்பு தீண்டாமை ஒழிப்பு தளத்திலும், பெண்ணுரிமை தளத்திலும் பெரியாரியலை சரியாகக் கொண்டு சென்றால், சமூக மாற்றத்தில் தமிழகம் முன்னணியில் நிற்கும் காலம் வந்தே தீரும். ஆனால் – பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டில் பெரியாரியலுக்கு ஆதரவு தரும் சக்திகள் தலித் உரிமையிலும், பெண்ணுரிமையிலும் பெரியாரியலைப் புறந்தள்ளிவிடுகின்றனர். இந்தத் தடைகளைத் தகர்த்து உண்மை பெரியாரிய சக்திகள், மக்கள் ஜனநாயக சக்திகள், அம்பேத்கரிய சக்திகள், முன்னேறிச் செல்ல வேண்டும். அதற்கான உறுதியான களம் அமைக்க வேண்டும். இதுவே இந்த சாதனைகளிலிருந்து, பெரியாரியல்வாதிகள் உணர வேண்டிய பாடமாக இருக்க முடியும்.

# தோழர் பத்ரியின் நினைவிடத்தில் செயல்வீரர்கள் உறுதி ஏற்றனர்



பெரியார் திராவிடர் கழக முன்னாள் ஆட்சிக் குழு உறுப்பினரும் கழக செயல்வீரருமான மறைந்த தோழர் செ. பத்ரி நாராயணன் நான்காம் ஆண்டு நினைவு நாளான 30.4.2008 புதன் காலை 8 மணி அளவில் செ. பத்ரியின் நினைவிடத்தில் கழகத் துணைத் தலைவர் ஆனூர் கோ. செகதீசன், கழகப் பொதுச்செயலாளர்விடுதலை இராசேந்திரன் ஆகியோர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். உடன் 200-க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள், உணர்வாளர்கள் கலந்து கொண்டனர். நினைவிடத்தில், ‘பெரியார் லட்சியத்தில் அர்ப்பணித்து செயல்படுவோம்’ என உறுதி மொழியை தோழர்கள் எடுத்தனர்.

பத்ரியின் நினைவிடத்தில் கழகத் துணைத் தலைவரும், கழகப் பொதுச்செயலாளரும் நினைவுரையாற்றும் போது வார்த்தைகள் வெளிவர முடியாமல் சோகத்தில் கலங்கியதை பார்த்த தோழர்கள் உணர்வுற்ற நிலையில் உறைந்து போயினர்.

தோழர் பத்ரியின் நினைவு நாளை முன்னிட்டு தென் சென்னை மாவட்ட கழக முன்னாள் செயலாளர் செ. குமரன், 55 தோழர்களுக்கு கருப்புச் சட்டை வழங்கினார்.

மாலை 6 மணி அளவில் சைவ முத்தையா 5வது தெருவில் செ. பத்ரி நாராயணன் நினைவு நாள் பெரியார் கொள்கை விளக்கக் கூட்டம் நடைபெற்றது. சு. ஆனந்தன் வரவேற்புரையாற்ற, ச. சபரி தலைமையேற்றார். கழக வழக்கறிஞர் சு. குமாரதேவன், பத்ரியின் போராட்ட குணங்களையும், அதை வழி நடத்திய பாங்கினையும் விளக்கிக் கூறினார். கழக துணைத் தலைவர் ஆனூர் கோ. செகதீசன் தமது உரையில் ஒவ்வொரு ஆண்டும் பத்ரியின் நினைவை போற்றும் வகையில் கழகத் தோழர்களின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது, அதன் வளர்ச்சியை எண்ணும் போது பத்திரியின் உழைப்பு வீணாகவில்லை என்பதை உணர முடிகிறது. தோழர்களை உருவாக்க எந்த அளவுக்கு பக்குவப்படுத்தி, தயார்படுத்தி இருக்க வேண்டும். தோழர்களை அரவணைத்து, கொள்கை வீரர்களாக உருவாக்கியதோடு ஒரு இயக்கத்திற்கே தலைமையேற்கும் தலைமைப் பண்புகளையும், அவரால் உருவாக்கப்பட்ட தோழர்கள் பெற்றுள்ளனர். நாம் பத்ரியைத்தான் இழந்திருக்கின்றோம். அவர் உழைப்பின் விளைச்சல்களை பார்க்கிறோம் - என்றார்.

கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றுகையில் - பத்ரி தத்துவம் - களப்பணி, இரண்டிலும் தலை சிறந்து விளங்கியதை நினைவு கூர்ந்தார். திருவல்லிக்கேணி பகுதியில் பத்ரி உருவாக்கி வைத்திருந்த இளைஞர்களைக் கொண்டுதான், 1996-ல் சென்னையில் பெரியார் திராவிடர் கழகம் தொடங்கப்பட்டது. தலித் மக்கள் மீதான சாதி ஒடுக்குமுறைகளுக்கு, உரிய அழுத்தம் தரப்பட வேண்டும் என்று பெரியார் திராவிடர் கழகம் முடிவெடுப்பதற்கு, முக்கிய உந்து சக்தியாக விளங்கியவர் பத்ரி. அய்.அய்.டி. பார்ப்பன ஆதிக்கத்தை அன்று முதன்முதலாக வீதிக்கு பெரியார் திராவிடர் கழகம் கொண்டு வந்த போது - அதில் பத்ரியின் பங்கு மகத்தானது. திருவல்லிக்கேணி பகுதியில் அனைத்து அரசியல் கட்சியினரிடமும் நல்லிணக்கத்தையும், தோழமையும் கொண்டு, அவர்களின் உதவிகளை இயக்க வளர்ச்சிக்கு எருவாக்கினார் பத்ரி.

ராயப்பேட்டை பகுதியில் பெரியார் சிலையை அனைத்துக் கட்சியினர் ஆதரவோடு அவர் அமைத்தார். பொங்கல் விழாவை கட்சிகளைக் கடந்த தமிழக கலாச்சார விழாவாக முன்னின்று நடத்தினார். அவரது நேர்மையும், நாணயமும் உண்மையான உழைப்பும், கொள்கை உறுதியும், கட்சிகளைக் கடந்த நன்மதிப்பை அவருக்கு உருவாக்கியது. எல்லாவற்றுக்கும் மேலாக இயக்கத்துக்கு உழைப்பை மட்டுமே வழங்கி தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாத ‘விளம்பர மறுப்பு’ பண்பு அவரின் தனித்தன்மையாகவே மிளிர்ந்தது. அந்தப் பண்பை தன்னால் உருவாக்கப்பட்ட தோழர்கள் உள்ளத்திலும் பத்ரி ஆழமாக பதிய வைத்தார். இராயப்பேட்டை பகுதி கழகச் செயல்வீரர்களிடையே அந்த உயர்ந்த பண்பு, இப்போதும் உறுதியாகப் பின்பற்றப்பட்டு வருவதை பார்க்கிறோம் - என்றார் விடுதலை இராசேந்திரன்.

முன்னதாக எ. கேசவன், தி.மு.க. மாமன்ற உறுப்பினர் ஆர்.என்.துரை, அன்பு தனசேகர், சோமு, இரா. உமாபதி ஆகியோர் உரையாற்றினர். பா. விஜி நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் கழக மூத்த வழக்கறிஞர் செ. துரைசாமி, வழக்கறிஞர் இளங்கோ ஆகியோர் கலந்துக் கொண்டனர். திருவல்லிக்கேணி பகுதி சார்பாக நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் புலால் உணவு வழங்கப்பட்டது.

# நளினி விடுதலை மனுவை தள்ளுபடி செய்தது சரியா?

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, தண்டனைக் குறைப்பின் கீழ் வேலூர் சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினி, 17 ஆண்டுகாலம் சிறையில் இருந்து வருகிறார். அண்மையில் காங்கிரஸ் தலைவர் சோனியாவின் மகள் பிரியங்கா - நளினியை சென்னை சிறையில் சந்தித்ததைத் தொடர்ந்து, நளினியின் விடுதலைப் பிரச்சனை விவாதத்துக்கு வந்துள்ளது. 15 ஆண்டுகள் சிறையில் இருந்த ஆயுள் கைதிகளை, கடந்த ஆண்டு கலைஞர் ஆட்சி விடுதலை செய்தது. அதில் நளினி இடம் பெறவில்லை. கைதிகளை விடுதலை செய்வது தொடர்பான ஆலோசனை வாரியம் நளினியின் விடுதலை கோரிக்கை மனுவை தள்ளுபடி செய்து விட்டது. இப்போது நளினியை விடுதலை செய்யுமாறு - உயர்நீதிமன்றத்தில் நளினியின் வழக்கறிஞர் எஸ். துரைசாமி தாக்கல் செய்த மனுவை நீதிபதி ஜோதிமணி ஏப்.30 ஆம் தேதி விசாரணைக்கு ஏற்றுள்ளார். நளினியின், மனுவை தள்ளுபடி செய்த, ஆலோசனை வாரியம் சிறைவிதிகளுக்கேற்ப நியமிக்கப்பட்டதல்ல என்று வழக்கறிஞர் சுட்டிக் காட்டியதை, நீதிபதி ஏற்றுக் கொண்டார். சிறைவிதிகளின்படி முறையான எண்ணிக்கையில், முறையான அதிகாரிகளைக் கொண்டிராத ஆலோசனை வாரியம், நளினியின் மனுவை நிராகரிப்பதற்கு முன்பு, வேலூர் சிறை அதிகாரிகளிடமோ, மனநல மருத்துவர்களிடமோ, மருத்துவ அதிகாரிகளிடமோ, கருத்துகளைக் கேட்டிருக்க வேண்டும். அப்படி கேட்காமலே மனுவை தள்ளுபடி செய்துள்ளது. வாரியம் - இந்த முடிவினை எடுத்தபோது, அந்தக் கூட்டத்தில் இதற்கான பொறுப்பு அதிகாரியும் பங்கேற்கவில்லை. பொறுப்பு அதிகாரி நளினியை கடும் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யலாம் என்றே பரிந்துரை செய்திருந்தார்.

ஆனாலும் வாரியம் - விடுதலை கோரிக்கையை நிராகரித்து எடுத்த முடிவில் அதற்கான ஒப்புதல் கையெழுத்தை அதற்குப் பிறகு தான் பொறுப்பு அதிகாரியிடம் கேட்டுப் பெற்றுள்ளது. இவ்வளவு குறைகளையும் கவனத்தில் எடுத்தக் கொள்ளாமல், உள்துறை செயலாளர் அக்.30, 2007 இல் நளினியின் விடுதலை கோரிக்கையை நிராகரித்து, ஆணை பிறப்பித்துள்ளார். நளினியின் தூக்குத் தண்டனையை, ஆயுள் தண்டனையாக தமிழக அரசு குறைத்த போதே மத்திய அரசை கலந்து ஆலோசித்துதான் முடிவெடுத்தது. எனவே இப்போது விடுதலை செய்வதற்கு மத்திய அரசின் ஆலோசனை பெற வேண்டிய அவசியம் இல்லை என்பதை வழக்கறிஞர் துரைசாமி சுட்டிக்காட்டினார். நீதிபதி வழக்கு விசாரணையை ஜூன் 10 ஆம் தேதி தள்ளி வைத்துள்ளார். வழக்கறிஞர் துரைசாமியுடன், வழக்கறிஞர் இளங்கோவும் வழக்கில் ஆஜரானார்.

## முன்னாள் ‘ரா’ அதிகாரி கூறுகிறார்

# விடுதலைப் புலிகளை வீழ்த்த முடியாது!

*இந்திய உளவு நிறுவனமான ‘ரா’வில் உயர் அதிகாரியாகப் பணியாற்றியவர் பி. இராமன். இலங்கைப் பிரச்சினைப் பற்றியும், ராணுவ நடவடிக்கைகள் பற்றியும் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக கட்டுரைகளை எழுதிவரும் அவர், கடந்த ஏப்.24 ஆம் தேதி முகமாலைப் பகுதியில் சிறீலங்கா ராணுவம் சந்தித்த கடுமையான பின்னடைவை ஒப்புக் கொண்டுள்ளார். சிறிலங்கா ராணுவம் – இனி எந்தக் காலத்திலும் தரை வழியாகபுலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நுழையும் வாய்ப்பே இல்லை என்று, உறுதியாகக் கூறும் அவர், விரக்தியின் விளிம்புக்குப் போய் பிரபாகரன் மரணமடைந்தால்தான் சாத்தியம் என்கிறார். தென்னாசிய ஆய்வுகளுக்கான இணையத் தளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (25.4.08) பி.இராமன் எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம்:*

தமிழீழ விடுதலைப்புலிகளின் மரணப் பொறியில் இரண்டாவது முறையாக சிறிலங்காப் படையினர் சிக்கிக் கொண்டுள்ளனர்.

கடந்த 23 ஆம் நாள் முகமாலையில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகளின் காரணமாக 150 படையினர் கொல்லப்பட்டதுடன், பாரியளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகளுக்கு தாரை வார்த்துக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 ஆம் நாள் இதே பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்நகர்வுகளின் காரணமாக சிறிலங்காப் படைத் தரப்பு பாரிய இழப்புகளைச் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

2006 ஆம் ஆண்டு முகமாலைத் தாக்கதல்களின் போது 139 படையினர் கொல்லப்பட்டனர். முதலில் இந்தத் தகவல்களை சிறிலங்கா அரசாங்கத் தரப்பு நிராகரித்த போதிலும் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டது.

2006 ஆம் ஆண்டு முகமாலைத் தாக்குதல்களின் போது 400-க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டிருக்கலாம் என அமெரிக்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மகிந்தவின் சகோதரரும், சிறிலங்காவின் பாதுகாப்பு அமைப்பின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்சவின் அவசர முடிவினாலேயே இந்த இழப்புக்கள் ஏற்பட்டதாக அமெரிக்காவில் சிறிலங்கா இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்திருந்ததாக நம்பகத் தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் 23 ஆம் நாள் ஏற்பட்ட மோதல்களைத் தொடர்ந்து 43 படையினர் கொல்லப்பட்டதாகவும், 33 படையினரைக் காணவில்லை எனவும் சிறிலங்கா இராணுவம் தகவல் வெளியிட்டிருந்தது.

எனினும், சி.என்.என். செய்திச் சேவை மற்றும் ஏ.எஃப்.பி. ஆகிய செய்தி நிறுவனங்கள் 100-க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியிட்டிருந்தன. சிறிலங்கா காவல் துறையினரின் மதிப்பீட்டின்படி 150-க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட் டுள்ளனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் 3000 விடுதலைப் புலி உறுப்பினர்களே எஞ்சியிருப்பதாக படைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்திருப்பதாகவும், இது வரையில் கொல்லப்பட்ட புலி உறுப்பினர்களின் எண்ணிக்கையே 3,105 எனவும் ஏ.எஃப்.பி. செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியிருந்தது. அவை உண்மையல்ல என்பது இப்போது அம்பலமாகியுள்ளது.

இந்த ஆண்டு தொடக்கம் முதலே சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சகத்தின் தரப்பு உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டு வருகின்றது. நாள்தோறும் ஏதாவது ஒரு இடத்தில் படை நடவடிக்கை அல்லது விடுதலைப் புலிகளுக்கு பாரிய இழப்பு என்ற தகவல்களே பாதுகாப்புத் தரப்பின் செய்தியின் உட்கிடக்கையாக வெளிப்பட்டு வருகின்றது. இந்தத் தகவல்களின் மூலம் சிறிலங்காப் படையினர் மற்றம் சிங்கள மக்களின் மனோ வலிமையை அதிகரிக்க சிறிலங்கா அரசாங்கம் முயற்சித்தது.

படைத்தரப்பின் இத்தகைய செயற்பாடுகளின் மூலம் விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் பலவீனப்படுத்தப்படுவார்கள் எனவும் சிறீலங்கா அரசாங்கம் கருதியது.

புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் விடுதலைப் புலிகளின் படைத்தளங்கள் மற்றும் முக்கிய கட்டடங்கள் மீது வெற்றிகரமாக வான் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் கடற்படை அழிக்கப்பட்டுள்ளதாகவும், வடக்கில் விடுதலைப் புலிகளின் பிரதேசங்களை கைப்பற்றி இந்த ஆண்டு இறுதிக்குள் வடக்கை பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் எனவும் கூறப்படுகின்றது.

தமதுசொந்த மண்ணின் மக்களுக்கு பிழையான தகவல்களை வழங்குவது போர்த் தந்திரோபாய மாகவோ அல்லது பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையாகவோ அமையாது.

மாறாக இந்த நிலைமை சொந்தப் படையினர் மற்றும் மக்கள் மத்தியில் தேவையற்ற எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தும். தமக்குப் பொய்யான தகவல்களை வழங்கியே போர்க்களத்திற்கு அனுப்பப்பட்டதாக படையினர் உணர்ந்ததால் அது அரசியல்வாதிகளுக்கும், உயர் படைத் தளபதிகளுக்கும் கடும் எதிர்விளைவுகளை உண்டு பண்ணும்.

தமிழீழ விடுதலைப் புலிகளும், இலங்கைத் தமிழ் ஆதரவாளர்களும் வட போர்முனையின் போர்க்கள நிலவரங்களை நன்கு உணர்ந்தவர்களாக காணப்படுகின்றனர்.

எனவே இந்த உண்மைக்குப் புறம்பான தகவல்கள் அவர்களை எந்த வகையிலும் பாதிக்காது என்பதனை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

உண்மையில் இந்தப் பிழையான தகவல்களின் மூலம் சிறிலங்காப் படையினரும் சிங்கள மக்களுமே ஏமாற்றப்படுகின்றனர்.

2006 ஆம் ஆண்டிலும் இன்றும் அதே நிலைமையே நீடிக்கின்றது.

2006 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் என்ன செய்தார்களோ அதனையே மீண்டும் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் நாள் புலிகள் மேற் கொண்டனர்.

ஒரு கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விட்டு தப்பியோடுவதனைப் போன்று பாசாங்குசெய்து, படையினரை குறித்த பிரதேசத்திற்குள் நுழையச் செய்து பின்னர் நாலாபுறமும் சூழ்ந்து தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற் கொண்டனர்.

இந்தத் திடீர்த் தாக்குதல் பற்றி சிந்திப்பதற்கு முன்னர் படையினர் மீது சராமாரியான தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர்.

இந்த வெற்றி விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மற்றும் போராளிகளுக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது. இந்தப் போர் வெற்றி வட களமுனையில் விடுதலைப்புலிகள் பலம் பொருந்தியவர்கள் என்பதனை மீண்டும் பறைசாற்றி நிற்கின்றது.

23 ஆம் நாள் அடைந்த போர் வெற்றி ஓரளவு திருப்தி அளிக்கக்கூடிய போதிலும், அதனை ஒரு திருப்திகரமான நிலையாக கருத முடியாது.

போராளிகளின் அர்ப்பணிப்பும், தியாக சிந்தனையும் போற்றத்தக்களவு உயர்நிலையில் காணப்படுகின்றமை மறுக்கப்பட முடியாது உண்மை.

வட போர்முனையை இலகுவாக தரை வழியாகக் கடப்பது என்பது ஒரு பகல் கனவாகவே தென்படுகின்றது.

வான் தாக்குதல்களின் மூலம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அழித்தால் மாத்திரமே முன்நகர்வுகளை மேற்கொள்ள முடியும்.

ஒருபுறத்தில் சிறிலங்கா வான் படை பிரபாகரனை இலக்கு வைத்து பல தாக்குதல்களை மேற்கொள்கின்றது. மறுபுறத்தில் சிறிலங்கா வான்படையின் வானூர்திகளைச் சுட்டுவீழ்த்த புலிகள் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இதில் எதுவுமே இதுவரையில் சாத்தியப்படவில்லை.

மத்திய அமைச்சர் ஆ. இராசாவின் உரை அடுத்த இதழில்

## ஆற்றில் விழுந்த நரிகளின் ஓலம்!

சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்த்து வழக்கு தொடுத்துள்ள சுப்ரமணியசாமி உச்சநீதிமன்றத்தில் வாதாடும்போது அங்கும் தனது வழக்கமான பொய் மூட்டைகளை அவிழ்த்துவிட்டிருக்கிறார்! ‘ராமன் சேது பாலம் இந்துக்கள், வழிபடுகிற பாலம்; அதை இடிக்கக் கூடாது’ என்று ‘சு.சாமி’ கூறியவுடன், நீதிபதிகளாலே, அதற்கு மேல் இந்த பொய்களை பொறுக்க முடியவில்லை.

“ராமன் சேது பாலம் எப்படி வழிபடக்கூடிய இடமாக இருக்க முடியும்? அது நடுக்கடலில் இருக்கிறது. கடலுக்குள் போய், மக்கள் பூசை செய்கிறார்களா? இப்படியெல்லாம் வாதாடக் கூடாது” என்று பதிலடி தந்திருக்கிறார், தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன். மறறொரு நீதிபதியான ஆர்.வி. ரவீந்திரனும், இதை ஆதரித்துள்ளார்.

சு. சாமி உடனே என்ன சொல்லியிருக்க வேண்டும், “இல்லை; இல்லை; ராமன் சேது பாலத்தில் பூசைகள் நடக்கின்றன. அர்ச்சனை செய்யும் அர்ச்சகர்கள் - பூணூல் மேனியுடன் கடலில் குதித்து - நீந்தி ஒவ்வொரு நாளும் பாலத்தை அடைந்து, அங்கே மந்திரங்களை ஓதுகிறார்கள். நானும் நாளும் கையில் சூடம் சாம்பிராணியோடு - அப்படியே கடலில் குதித்து, காலால் நீச்சலடித்து மூச்சை தம் பிடித்து ராமன் பாலம் போய் பூசை செய்கிறேன்” என்றல்லவா கூறியிருக்க வேண்டும். அப்படியெல்லாம் கூற வில்லை.

பார்ப்பன பொய் அம்பலமானவுடன் - சு.சாமி, தனது வழக்கமான ‘புண்படுத்தும்’ ஆயுதத்தை கையில் எடுத்துக் கொண்டு, “நீதிபதி பேசுவது நாத்திகப் பேச்சு. கோடிக்கணக்கான மக்களின் உணர்வுகளை நீதிமன்றம் புண்படுத்தக் கூடாது” என்று மிரட்டத் தொடங்கிவிட்டார்.

‘800 மில்லியன் இந்தியர்களின் நம்பிக்கைச் சின்னம் ராமன் சேது பாலம்’ என்று ராமனுக்காக வாதாட வந்த வழக்கறிஞர்கள் கூறியிருக்கிறார்கள்.

800 மில்லியன் இந்தியர்கள் சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்க்கிறார்கள் என்பதற்கு இவர்கள் நாடு தழுவிய கணக்கெடுப்பு நடத்தினார்களா? அது பற்றிய தகவல்கள், புள்ளி விவரங்கள் இவர்களிடம் உண்டா? 27 சதவீத இடஒதுக்கீடு வழக்கு விசாரணைக்கு வந்தபோது பிற்படுத்தப்பட்டோர் எத்தனை சதவீதம் பேர் என்று கணக்கெடுப்பு நடந்ததா? என்றும் 1930 களில் நடந்த கணக்கெடுப்பை ஏற்க முடியுமா? என்றும் இதே கூட்டம் தான் கேள்விகளைக் கேட்டது. அதே கூட்டம் 800 மில்லியன் இந்தியர்களையும் தனது ஆதரவாளர்களாக இப்போது மாற்றிக் கொண்டு உச்சநீதிமன்றத்தையே மிரட்டுகிறது! மக்களின் பிரதிநிதிகள் உருவாக்கிய சட்டமன்றம், மற்றும் நாடாளுமன்றங்களின் ஒப்புதல்களோடு வரும் திட்டத்தை, நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கு எதிரான திட்டம் என்று, இந்தச் கூட்டம் சாதிக்கப் பார்க்கிறது!

ஆற்றில் விழுந்த நரி, ‘உலகமே அழியப் போகிறது, என்னைக் காப்பாற்றுங்கள்’ என்று கூக்குரல் போட்டதாம். ஒருவன் ஓடி வந்து தூக்கிக் கரையில் போட்டபோது, ‘ஆபத்து எனக்குத்தான் வந்தது’ என்று கூறி நரி ஓட்டம் பிடித்ததாம். அதே கதைதான் இந்த பார்ப்பன இந்துத்துவா கும்பலின் கதையாகவும் இருக்கிறது.

உலகத்தில் ஒவ்வொரு கண்டுபிடிப்பையும், அறிவியல் வளர்ச்சியையும் இந்த மத வாதம் எதிர்த்தே வந்திருக்கிறது என்பது வரலாறு. அப்போது அவர்கள் செய்ததுகூட அறியாமையினால்தான்! ஆனால் - இப்போது பார்ப்பனர்கள் அதே ‘மத நம்பிக்கை’ எனும் கொடுவாளைத் தூக்கிக் கிளம்பியிருப்பது அறியாமையினால் அல்ல; அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்காக! அதற்காக தேவைப்படும் மற்றொரு ‘ராமனை’ உருவாக்குவதற்காக!

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. © 2451 2857

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# மேட்டூரில் அம்பேத்கர் விழா; ‘தலித் முரசு’ இதழுக்கு சந்தா



*சேலம் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம்*

21.4.08 அன்று மாலை 7 மணி அளவில் மேட்டூர் சதுரங்காடி திடலில் அம்பேத்கர் 118-வது பிறந்த நாள் பொதுக்கூட்டம் மாவட்டத் தலைவர் கி.முல்லைவேந்தன் தலைமையில் புத்தர் கலைக் குழுவினரின் பறை முழக்க தப்பாட்ட நிகழ்ச்சியுடன் துவங்கியது. டைகர் பாலன், நங்கவள்ளி அன்பு உரைக்குப்பின் மக்கள் கண்காணிப்பகம் இயக்குநர் ஹென்றிடிபேன் அதிரடிப் படை காவல்துறையால் பாதிக்கப்பட்ட பழங்குடியின மக்களின் நீதி கேட்டு நெடும் பயணம் குறித்த விளக்கவுரைக் குப் பின் ‘தலித் முரசு’ இதழ் ஆசிரியர் புனிதபாண்டியன் சிறப்புரையாற்றினார். ‘தலித் முரசு’ இதழ் ஆண்டு சந்தா ரூ.118; ஆயுள் சந்தா ரூ.18, ‘தலித் முரசு’ இதழ் வளர்ச்சி நிதியாக ஆசிரியர் புனிதபாண்டியனிடம் வழங்கப்பட்டது. பின்னர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரைக்குப் பின் குமரப்பா நன்றியுரை கூற கூட்டம் சிறப்பாக முடிவுற்றது. கூட்டத்தில் காவலாண்டியூர், கொளத்தூர், நங்கவள்ளி, நிதிபுரம், மேட்டூர் ஆர்.எஸ்., இளம் பிள்ளை, உக்கம் பருத்திக்காடு ஆகிய பகுதியிலிருந்து தோழர்கள் கலந்து கொண்டனர்.

### சேலம் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம்

24.4.08 அன்று சேலம் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் உக்கம் பருத்திக்காடு படிப்பகத்தில் காலை 11 மணிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கடவுள் மறுப்பு, ஆத்மா மறுப்பு தத்துவங்கள் கூறி, நங்கவள்ளி அன்பு தொடக்கவுரையோடு ஆரம்பிக்கப்பட்டது. இக்கலந்துரையாடல் கூட்டத்தில் புதிய மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

பொறுப்பாளர் : சேலம் மாவட்டத் தலைவர் - மார்டின், மேட்டூர்; துணைத் தலைவர் - செழியன், ஊஞ்சக்காடு; செயலாளர் - சக்திவேல், மேட்டூர் ஆர்.எஸ்.; துணைச் செயலாளர்கள் - முத்து மாணிக்கம், இளம்பிள்ளை, பெருமாள், ஏற்காடு; பொருளாளர் - கோவிந்தராசு, மேட்டூர்; அமைப் பாளர்கள் - கி. முல்லைவேந்தன், மேட்டூர்; டைகர் பாலன், கொளத்தூர்; சீ. அன்பு. நங்கவள்ளி; அண்ணாதுரை, மேட்டூர்; இளைஞரணித் தலைவர் - கோகுலக் கண்ணன், இளம்பிள்ளை; செயலாளர் - விசயகுமார், காவலாண்டியூர்.

மதியம் 2 மணிக்கு அனைத்து தோழர்களுக்கும் கோழி இறைச்சி உணவு வழங்கப்பட்டது. மதியம் 3 மணிக்கு இயக்கத்தில் தோழர்கள் பங்களிப்பு, கொள்கை வழி செயல்பாடுகள், பெரியார் தொண்டர்களின் தனித்துவம் ஆகிய தலைப்புகளில் கழகத் தலைவர் உரையாற்றினார். ஒன்றிய செயலாளர் காவை. இளவரசன் நன்றி கூற மாலை 5 மணிக்கு கூட்டம் முடிவுற்றது. கூட்டத்தில் சென்னம்பட்டி, கொளத்தூர் பகுதியிலிருந்து புதிய தோழர்கள் 20 பேர் கழகத்தில் இணைந்து கொண்டனர்.

# தாழ்த்தப்பட்டோர் நல வாரியத்திலும் பார்ப்பனீயம்

ஷெட்யூல்டு பிரிவினருக்கான தேசிய ஆணையம் என்ற அமைப்பு - ஷெட்யூல்டு பிரிவினருக்கு விரைந்து நீதி வழங்கவும், அவர்களின் அரசியல் சட்ட உரிமைகளை உறுதி செய்யவும், உருவாக்கப்பட்ட அமைப்பு. அப்படி ஷெட்யூல்டு பிரிவினரைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட அமைப்பின் அதிகாரிகளே சாதிப் பாகுபாடு கண்ணோட்டத்தோடு செயல்படுகிறார்கள். ஷெட்யூல்டு மக்களிடமிருந்து வந்த ஏராளமான புகார்கள் இந்த ஆணையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மலைபோல் குவிந்து கிடக்கின்றன.

அரியானா மாநிலம் கர்னல் மாவட்டத்திலுள்ள சிறிய கிராமம் பிபிபூர். இந்த ஊரில் வாழும் தலித் மக்கள் தாங்கள் வழிபடும் முனிவர் ரவிதாசுக்கு கோயில் ஒன்றைக் கட்டினர். கோயில் கட்டப்பட்ட இடம், கிராமப் பள்ளிக்கூடத்துக்கு சொந்தமானது என்று கூறி பார்ப்பனரும், ஆதிக்க சாதியினரும், கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டனர். அதே பள்ளிக்கு சொந்தமான இடத்தில் பார்ப்பனர்கள் மூன்று கோயில்களை கட்டியுள்ளனர். ஆனால், அவை இடிக்கப்படவில்லை. வித்யா சுப்ரமணியம் என்ற செய்தியாளர் இந்த கிராமத்துக்கு நேரில் சென்று செய்திகளைத் திரட்டி, ‘இந்து’ நாளேட்டில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். நிலமில்லாத தலித் மக்கள் நாங்கள் வேறு எங்கே கோயில் கட்டுவது என்று கேட்கிறார்கள். தங்களது இயற்கைக் கடன்களை கழிக்க பார்ப்பன உயர்சாதியினர் நிலங்களைத்தான் தாழ்த்தப்பட்ட பெண்களும், ஆண்களும் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் - அப்படி இயற்கைக் கடன் கழிக்க வந்தவர்களை அடிப்பதும், அவமதிப்பதும், ஆடையை அவிழ்த்து நிர்வாணமாக ஓட விடுவதும் - சாதி வெறியர்களின் வழக்கமாகிவிட்டது. அதேபோல் - பார்ப்பனர்கள் கட்டியுள்ள மூன்று கோயில்களுக்குள்ளும் தலித் மக்களை பார்ப்பனர்கள் அனுமதிப்பதில்லை. தங்கள் மீது தீண்டாமையை திணித்து, வன்முறையை ஏவி, மானபங்கம் செய்து, இழிவுபடுத்தும் பார்ப்பனர்கள், உயர்சாதியினர் பற்றி அவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, காவல் நிலையத்தில் பல புகார்கள் தரப்பட்டுள்ளன. ஆனால், காவல் நிலையம் எந்த வழக்கையும் பதிவு செய்யவில்லை. பெயர் குறிப்பிட்ட குற்றவாளிகளைகூட யாரென்றே அடையாளம் தெரியவில்லையென்று காவல்துறையினர் கூறுகிறார்கள். ஷெட்யூல்டு பிரிவினரின் தேசிய ஆணையத்துக்கும் புகார்கள் தரப்பட்டன. ஆனால், ஆணையத்தில் செயல்படும் பார்ப்பன உயர்சாதி அதிகாரிகள், எல்லாவற்றையும் மூடி மறைப்பதில் தான் ஆர்வம் காட்டுகிறார்கள். பார்ப்பனர்கள் தங்களை சமூகப் புறக்கணிப்பு செய்து, தொடர்ந்து இடையூறுகளை உருவாக்கி வருவதாக காவல் துறைக்கு தலித் பெண்கள் தந்த புகாரை காவல்நிலையமே ஏற்க மறுத்துவிட்டது. ஷெட்யூல்டு மக்களுக்கான தேசிய ஆணையம் - தலித் மக்கள், பள்ளிக்கூட இடத்தில் கோயில் கட்டியது சட்ட விரோதம் என்று கூறுகிறதே தவிர, அதே இடத்தில் பார்ப்பனர்கள் கட்டியுள்ள மூன்று கோயில்களைப் பற்றி வந்த புகார்களைப் பதிவு செய்யாமலே இருந்து வருகிறது. ‘பொதுவிடங்களில் தலித் கோயில் கட்டுவதை யாரால் அனுமதிக்க முடியும்?’ என்ற கேள்வியையே மீண்டும் மீண்டும் ஆணைய அதிகாரிகள் தம்மிடம் கேட்டார்கள் என்று எழுதுகிறார், அந்த செய்தியாளர்.

ஷெட்யூல்டு மக்களின் உரிமைகளுக்காக ஏராளமான சட்டங்கள், சட்டப் புத்தகங்களை நிரப்பிக் கொண்டிருக்கின்றன அதை அமுல்படுத்தக்கூடிய இடத்தில் பார்ப்பனர்களும், ஆதிக்க சாதியினருமே இருப்பதால், எந்த சட்டமும் செயல்பட மறுக்கிறது. நண்டை சுட்டு நரியைக் காவல் வைத்த கதைதான்.

உ.பி.யில் மாயாவதி என்ற தலித் பெண் முதலமைச்சராக உள்ளார். அவரது ஆட்சியில் பார்ப்பனர்களே கொடிகட்டிப் பறக்கிறார்கள். பெரியார் சிலைகளை வைக்க பார்ப்பனர் எதிர்ப்பு தெரிவித்ததால், மாநிலத்தில் எந்த இடத்திலும் பெரியார் சிலைகளை வைக்கக் கூடாது என்று தடை விதித்து விட்டார் மாயாவதி. பெருமைக்குரிய தலைவர்கள் என்று மாநில அரசின் பட்டியலில் இருந்த பெரியார் பெயரை நீக்கச் சொல்லிவிட்டார். இராமாயணத்தை விமர்சித்து எழுதிய நூலுக்கும் தடை போட்டுவிட்டார். தலித் மக்களுக்காவது பாதுகாப்பு இருக்கிறதா என்று கேட்டால், அது பற்றி வரும் செய்தியும் அதிர்ச்சியாகவே உள்ளது. உ.பி.யில் மதுரா மாவட்டம் கரோலி கிராமத்தில நடந்துள்ள ஒரு சம்பவம் அதிர்ச்சியில் உறைய வைக்கிறது. கிராமத்தில் - ஒரு உயர்சாதி வீதியில் 6 வயது தலித் பெண் நடந்து சென்றாள் என்பதற்காக அந்தப் பெண்ணை அதே வீதியைச் சார்ந்த ஒரு உயர்சாதி இளைஞன் எரியும் நெருப்பில் தூக்கி வீசியிருக்கிறான். ஊரில் குப்பைகளைக் கொட்டி எரிக்கப்படும் தீ அது. பலத்த காயத்துடன் சிறுமி உயிருக்கு போராடுகிறாள். எட்டவா மாவட்டத்தில் 10 ரூபாய் கடன் தரவேண்டும என்பதற்காக ஒரு ஆதிக்கசாதி கடைக்காரர் தலித் இளைஞன் மீது தீ வைத்து சாகடித்திருக்கிறான். 10 ரூபாயைவிட மதிப்பிழந்து விட்டானா ஒரு தலித் இளைஞன்?

தமிழ்நாட்டில் வேண்டுமானால் நிலைமை அவ்வளவு மோசமில்லை என்று சொல்லிக் கொள்ளலாமே தவிர, இன்னமும் தீண்டாமையின் கொடுமைகள் பல்வேறு வடிவங்களில் உயிர்த் துடிப்புடன் இருந்து வருகிறது.

மதுரை மாவட்டம் உத்தப்புரம் கிராமத்தில் தலித் மக்கள் வாழும் பகுதியில் 15 அடி உயரத்தில் 600 அடி நீளத்தில் ஆதிக்க சாதியினர் தடுப்புச் சுவரை எழுப்பி, தாங்கள் வாழும் பகுதிக்குள் நுழையாமல் 18 ஆண்டுகளாக தலித் மக்களை தடுத்து வைத்துள்ள கொடுமை இப்போதுதான் வெளியே தெரிய வந்துள்ளது. 1989 ஆம் ஆண்டு நடந்த சாதிக் கலவரத்தில் ஏழு பேர் மரணமடைந்ததைத் தொடர்ந்து ஆதிக்க சாதியினர் இந்த சுவரை எழுப்பினார்களாம். ‘எங்கள் கோயில் திருவிழாவின்போது பட்டாசு வெடிக்க - ஆதிக்க சாதியினர் தடை போட்டு வருகிறார்கள். இதைவிட கொடுமை, எங்கள் பகுதியில் ஒரு பேருந்து நிழல்குடை அமைக்கக்கூட அனுமதிக்க மறுக்கிறார்கள்’ காரணம், நிழல்குடை அமைத்துவிட்டால், அங்கே தலித் மக்கள் உட்கார்ந்துவிடுவார்கள் என்பதுதான் என்கிறார், சங்கரலிங்கம் என்ற அந்த கிராமத்தைச் சார்ந்த தலித் (55).

கோயிலில் வழிபட தலித் மக்கள் அனுமதிக்கப்படாததையொட்டி 1989 இல் நடந்த கலவரத்தில் தலித் மக்கள் கிராமத்தை விட்டே வெளியேறியிருந்த காலத்தில் இந்த தடைச் சுவரை ஆதிக்க சாதிகள் கட்டியுள்ளனர். கலவரம் வரக் கூடாது என்ற நோக்கத்தில்தான், இந்தத் தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டது என்கிறார், மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.எஸ். ஜவகர். இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் ‘தலித்’ ஆக இருந்தாலும், எப்போதும் பக்திப் பழமாக இந்துத்துவா வாதியாக தன்னை அடையாளம் காட்டிக் கொள்பவர். கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள ஜெயேந்திரர் - நாகை மாவட்டம் வந்தபோது அவரது காலில் விழுந்து வணங்கி ஆசி பெற்றவர். அந்தப் படம் நாளேடுகளிலும் வெளி வந்தது. தடுப்பு சுவரை எடுக்க மாட்டார்களாம். சுவரின் உயரத்தை இறக்கலாமா? அல்லது சுவருக்குள்ளே ஏதேனும் பாதை அமைக்கலாமா என்பது பற்றி, இரு தரப்பினரும் கூடிப் பேச அமைதிக் குழு அமைக்கப் போகிறதாம் அரசு நிர்வாகம்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவு தலைவர் சம்பத், ‘சுவரை உடைப்போம்’ என்று அறிவித்துள்ளார். சுவர்கள் உடைக்கப்பட்டு சுக்கு நூறாக்கப்பட வேண்டும். மனிதனாகப் பிறக்க மனிதனாக வாழ விரும்பும் எவன் ஒருவனும் இத்தகைய சுவற்றை அனுமதிக்கவே மாட்டான்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 8th May 2008


பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 மே 15, 2008 புரட்சி 7 முழக்கம் 20 விலை : ரூ.2.50

### ரூ.1000 கோடி விண்வெளிக் கல்வி நிறுவனம்

# கேரளாவுக்கு பறி போகும் தமிழகத் திட்டம்!

விண்வெளி ஆய்வு நிறுவனமான 'இஸ்ரோ' மலையாளிகள் ஆதிக்கத்தில் அவர்களின் கட்டுப்பாட்டிலேயே செயல்படுகிறது. இதில் உயர் அதிகாரிகளாக இருக்கும் ஆறு அதிகாரிகளும் மலையாளிகள். அதுவும் மலையாளிகளின் உயர்சாதிப் பிரிவினர். இந்த நிலையில், தமிழ்நாட்டில் நெல்லையில் இஸ்ரோ சார்பில் 'விண்வெளிக் கல்வி நிறுவனம்' ஒன்று தொடங்க திட்டமிடப்பட்டு, ஆயிரம் கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டது. இந்த நிலையில், இந்தப் பெரும் திட்டத்தை தமிழ் நாட்டிலிருந்து கேரளாவுக்கு கொண்டு போய்விட்டனர் 'இஸ்ரோ' வின் மலையாள உயர் அதிகாரிகள். இந்த அதிர்ச்சியான தகவலை 'குமுதம் ரிப்போர்ட்டர்' ஏடும் பதிவு செய்துள்ளது. அந்த ஏடு - வெளியிட்டுள்ள செய்தியை (20.4.2008) இங்கு வெளியிடுகிறோம்.

'நெல்லையில் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைய இருந்த விண்வெளிக் கல்வி நிறுவனத்தை, சத்தமே இல்லாமல் கேரளாவுக்கு லவட்டிக் கொண்டு போய்விட்டார்கள் இஸ்ரோவில் உள்ள கேரள அதிகாரிகள்' என்றொரு பகீர் குற்றச்சாட்டைச் சொல்லி சூடு கிளப்பி வருகிறது நாடார் மகாஜன சங்கம்.

அண்மையில் நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களின் மூலை முடுக்குகளிலெல்லாம் பளீரிட்டது அந்த சுவரொட்டிகள். நாடார் மகாஜன சங்கம் சார்பில் ஒட்டப்பட்டிருந்த மூன்று வகையான சுவரொட்டிகளும், பொது மக்களை மட்டுமல்ல உளவுத்துறை போலீசாரையும்கூட சற்று உற்றுப் பார்க்க வைத்தது. 'இந்திய அரசே.. விண்வெளித் துறையே.. திட்டமிட்ட ஆயிரம் கோடி 'ஐ.ஐ.எஸ்.டி. மத்திய பொறியியல் கல்லூரி'யை நெல்லை, குமரி மக்கள் பயன் பெற மகேந்திரகிரி இஸ்ரோ வளாகத்தில் தொடங்கு' என்ற முதல் சுவரொட்டி அனைவரையும் அதிர வைத்தது.

'இஸ்ரோவில் ஆறு உயர் அதிகாரிகள் மலையாளிகள். தமிழர்கள் இப்பதவிக்கு வர முடியாத காரணம் என்ன? வெள்ளை அறிக்கை வெளியிடு' என்கிற அதிர்ச்சித் தகவல் இன்னொரு சுவரொட்டியிலும், 'தகுதி, திறமை, சீனியாரிட்டி உள்ள தமிழ் விஞ்ஞானி டாக்டர் ஆதி மூர்த்தி ஒரு தலித் என்பதால் இயக்குனர் ஆவதைத் தடுக்காதே! அரசியல் கட்சிகளே குரல் கொடுங்கள் என்கிற சாதிப் பிரச்சினை மூன்றாவது சுவரொட்டியிலும் இருக்கவே, ஆடிப்போனது உளவுத் துறை. அவசரம் அவசரமாய் அந்த சுவரொட்டிகளைப் புகைப்படம் எடுத்து கோட்டைக்கு அனுப்பியுள்ளார்கள் அவர்கள்.

சுவரொட்டிகள் விவகாரம் நமது கவனத்துக்கும் வரவே, அதை ஒட்டிய கருங்கல் ஜார்ஜைத் தொடர்பு கொண்டு பேசினோம். 'நெல்லை-குமரி மாவட்ட எல்லையான காவல் கிணறு - மகேந்திர கிரி - மலையடிவாரத்தில் மத்திய விண்வெளித் துறையின் திரவ இயக்கத்திட்ட மையம் (எல்.பி.எஸ்.சி.) உள்ளது.

இங்கு ராக்கெட்டுகளில் பொருத்தப்படும் கிரையோஜெனிக் இன்ஜின்கள் சோதனை செய்து பார்க்கப்படுகின்றன. பாதுகாக்கப்பட்ட பகுதியான இங்கு இந்திய விண்வெளித் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றை புதிதாய்த் தொடங்க திட்டமிடப்பட்டு, அதற்கென்று ஆயிரம் கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டது.

இந்நிலையில், இங்கு மெஜாரிட்டியாக இருக்கும் கேரள அதிகாரிகள், அக்கல்வி நிறுவனத்தை கேரளாவுக்குக் கொண்டு போகத் திட்டமிட்டு, அதற்கான பணிகளை மேற்கொண்டு வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். விண்வெளி ஆராய்ச்சி பற்றி மட்டுமே சொல்லிக்கொடுக்கப்படும் இக்கல்வி நிறுவனத்தில் சேரும் மாணவர்களை, இந்திய விண்வெளித் துறை அப்படியே வேலையில் சேர்த்துக் கொள்ளும்.

உலகத் தரம்வாய்ந்த இக்கல்வி நிறுவனத்தில் வகுப்பறைகள்கூட ஏ.சி. செய்யப்பட்டிருக்கும். இக்கல்வி நிறுவனம் தமிழ்நாட்டில் மகேந்திரகிரியில் அமைந்தால் நெல்லை - குமரி மக்களுக்கு பெரும்பயனாய் இருக்கும். ஆனால், எல்.பி.எஸ்.சி. மட்டுமல்ல; இஸ்ரோ முழுக்க மலையாளிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. நாயர்களின் ஆட்சி கொடிகட்டிப் பறக்கிறது.

மலையாளிகள் இஸ்ரோவை தங்கள் குடும்பச் சொத்தாக மாற்றிவிட்டார்கள். எனவே, மகேந்திரகிரியில் போதிய இடமில்லை என்று சொல்லி கேரளாவில் தற்போது தாற்காலிகமாய் இயங்க ஒரிடத்தைத் தேர்வு செய்திருக்கிறார்கள். ஆயிரம் கோடி மதிப்பிலான விண்வெளிக் கல்லூரியைப் பற்றி நமது அரசியல்வாதிகள் யாருக்கும் தெரியாது.

மத்திய அமைச்சர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அவர்களோ காவிரி, முல்லைப் பெரியாறு, நெய்யாற்றின் கரை, இப்போது ஒகேனக்கல் என அண்டை மாநிலங்களுடன் தீர்க்க முடியாத பிரச்சினைகள் இருக்கும் போது, மேலும் ஒரு பிரச்சனையாக இதை ஆக்க வேண்டாம் என்று ரகசியம் காக்கிறார்கள் போலிருக்கிறது.

எனவே, விண்வெளிக் கல்லூரி நமக்கு வேண்டும். நாட்டு மக்களுக்கு இப்பிரச்சினை தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் சுவரொட்டிகளை ஒட்டினேன். மகேந்திரகிரியைச் சுற்றியுள்ள ஊர்களில் விழிப் புணர்வு பிரசாரம் செய்யவும் தீர்மானித்திருக்கிறேன். அரசியல் கட்சிகள் இப்பிரச்சினையைக் கையிலெடுத் தால் கல்லூரி நிச்சயம் நமக்குக் கிடைக்கும்' என்றார் அவர். - இவ்வாறு 'குமுதம் ரிப்போர்ட்டர்' செய்தி வெளியிட்டுள்ளது.

**'அய்.எஸ்.ஆர்.ஏ.'வின்**
**6 உயர் அதிகாரிகள்**

**தலைவர் : மாதவன் நாயர்**

**இயக்குநர் : எம்.கே.ஜி. நாயர்**

**இணை இயக்குனர் :**
**குஞ்சி குமரன் நாயர்**

**உதவி இயக்குனர் : சசீதரன் நாயர்**

**நிர்வாக அதிகாரி :**
**சோம சேகரன் நாயர்**

**வி.எஸ்.எஸ்.சி. இயக்குனர் :**
**ராதா கிருஷ்ணன் நாயர்**

*அகில இந்திய நிறுவனமான இஸ்ரோ மலையாளிகளின் சொத்தா?*

### புலிகள் மூழ்கடித்த ஆயுதக் கப்பல்

# தாக்குதல் நடந்தது எப்படி?

80 மீட்டர் நீளமுள்ள சிறீலங்காவின் ஆயுதக் கப்பலான 'எம்.வி. இன்விசிபில்' என்ற கப்பலை சனிக்கிழமை விடியற்காலை 2.30 மணியளவில் விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் தகர்த்து மூழ்கடித்துள்ளனர். இந்தக் கப்பல் முழுதும் சிறீலங்கா ராணுவத்துக்கான ஆயுதங்கள் இருந்தன. கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்கும், அங்கிருந்து கொழும்புக்கும் தமிழர்களைக் கொன்றொழிக்கும் சிங்கள ராணுவத்துக்கு ஆயுதங்களை ஏற்றிச் செல்லும் இந்தக் கப்பல், திரிகோணமலை துறைமுகத்தில் அஸ்ரப் துறை எனுமிடத்தில் நங்கூரம் அடித்து நிறுத்தப்பட்டிருந்த 2 மணி நேரத்தில் நீரில் மூழ்கியது.

திடீரென்று குண்டு வெடிப்பு சத்தம் கேட்டவுடன், திரிகோணமலை துறைமுகத்தில் நின்றிருந்த படைப் பிரிவினர், விடுதலைப் புலிகள் விமானத்திலிருந்து குண்டு வீசுவதாகக் கருதி, வானத்தை நோக்கி, தங்கள் துப்பாக்கிகளைத் திருப்பினர். அதன் பிறகுதான், கப்பல் தகர்க்கப்பட்ட செய்தி அவர்களுக்கு தெரிய வந்தது. கொழும்பிலிருந்து வெளி வரும் 'லக்பீம்' என்ற ஆங்கில நாளேடு வெளியிட்டுள்ள செய்தியில் இந்தக் கப்பல் தகர்ப்பு சிறீலங்கா ராணுவத்தை கடும் குழப்பத்துக்கு உள்ளாக்கியிருப்பதாக கூறியுள்ளது. கடலுக்கு அடியில் வெடி வைத்து தகர்த்து, கப்பலை மூழ்கடிக்கும் கடல் போர் முறை இது வரை, எங்கும் நடக்காதது. இது எப்படி முடிகிறது என்று, சிறீலங்கா ராணுவம் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது. 2006 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் தேதி, பி.438 என்ற இலங்கையின் டோராக் கப்பலை, இதேபோல் தான் விடுதலைப்புலிகளால் கடலில் மூழ்கடிக்கப்பட்டது. அப்போது கடலுக்கு அடியில் காந்த சக்தி மிகுந்த வெடிகுண்டு துகள்கள் கண்டெடுக்கப்பட்டன. எனவே காந்தத்தைப் பயன்படுத்திய வெடி குண்டுகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று, சிறீலங்கா ராணுவம் முடிவு செய்தது. இது தவிர கடலுக் கடியில் செல்லக்கூடிய ஸ்கூட்டர்களைப் பயன்படுத்தி, கடற்புலிகள் அந்த ஸ்கூட்டரில் வெடிகுண்டுகளை ஏந்திக் கொண்டு, கடலுக் கடியில் பயணம் செய்து இத் தாக்குதலை நடத்தியிருப்பதாக, சிறீலங்கா ராணுவம் கருதுகிறது என்று, அந்த ஏடு செய்தி வெளியிட்டுள்ளது. மிகவும் எடை குறைவான இந்த ஸ்கூட்டர்கள் கடலுக்கடியில் மிக வேகமாக செல்லக் கூடியவை. ஒரு மணி நேரம் வரை, கடலுக்கடியில், இந்த ஸ்கூட்டரில் இருக்கலாம். டென்மார்க் நிறுவனம் ஒன்றிலிருந்து விடுதலைப் புலிகள், இந்த ஸ்கூட்டர்களை வாங்கியுள்ளனர் என்றும், அந்த கொழும்பு ஏடு சிறீலங்கா ராணுவத்தை மேற்கோள் காட்டி, செய்தி வெளியிட்டுள்ளது.

மூழ்கடிக்கப்பட்ட கப்பல் - பாகிஸ்தானுக்கு சொந்தமானதாகும். 2003 ஆம் ஆண்டு பாகிஸ்தானைச் சார்ந்த 264 பேரை சட்ட விரோதமாக ஏற்றிக் கொண்டு, இந்தக் கப்பல், இத்தாலிக்கு பயணமானபோது, இலங்கைக் கடற்பரப்பில், இலங்கைக் கப்பல்படை, இந்தக் கப்பலை சுற்றி வளைத்துப் பிடித்தது. இலங்கை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், இந்தக் கப்பலை இலங்கை ராணுவம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அந்தக் கப்பலை, சிங்கள ராணுவத்துக்கு ஆயுதம் வழங்குவதற்கு சிறீலங்கா ராணுவம் பயன்படுத்தி வந்தது. அந்தக் கப்பல் தான், இப்போது புலிகளால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. லெப்டினன்ட் கேனல், கங்கை அமரன் தலைமையிலான கரும்புலிப் படைப் பிரிவு இத் தாக்குதலை நடத்தியதாக தமிழ் நெட், இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது. இந்தத் தாக்குதல் - சிறீலங்கா ராணுவத்திடம் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

தலையங்கம்

# மாநகராட்சிப் பள்ளி மாணவர்களின் சாதனை

‘பிளஸ் டூ’ தேர்வில் இவ்வாண்டும் வழக்கம் போல் மாணவிகளே சாதனை படைத்துள்ளனர். 87.3 சதவீதம் மாணவிகளும், 81.3 சதவீதம் மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர். பெண்களுக்கு கல்வி உரிமையையே மறுத்ததுதான் பார்ப்பன - இந்து மத தர்மங்கள்!

“அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?” என்று ஆணாதிக்க சிந்தனையில் உதித்த பொன்மொழியை சுக்கு நூறாக உடைத்துத் தள்ளியிருக்கிறார்கள் - மாணவிகள்!

சென்னை, திருச்சி, கோவை போன்ற பெரும் நகரங்களில் செல்வாக்கும், வசதி வாய்ப்புகளும் உள்ள பள்ளிகளில் படித்த மாணவ மாணவிகளைவிட, கிராமப்புறப் பள்ளிகளில் படித்த மாணவ மாணவியர்கள் கூடுதல் மதிப்பெண்கள் பெற்று சாதனைப் படைத்திருப்பதையும் குறிப்பிட வேண்டும்.

இவை எல்லாவற்றையும்விட சிறப்பாக ஒன்றை சுட்டிக் காட்ட வேண்டும். அதுதான், சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் நிகழ்த்தி வரும் சாதனை. பல்லாயிரம் ரூபாய் பணத்தை வாரி இறைத்து, நவீன தரத்துடன் உயர்ந்த கட்டமைப்புகளோடு சென்னை நகரில் - ஏராளமான தனியார் பள்ளிகள், தங்கள் கல்வி வணிகத்தை நடத்தி வருகின்றன. இந்தப் பள்ளிகளில் தங்கள் குழந்தை படிப்பதில் தான் தங்களது குடும்பத்தின் செல்வாக்கும், பெருமையும் அடங்கியிருக்கிறது என்ற உளவியலில், இந்த வணிக நிறுவனங்களில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சேர்த்து வருகிறார்கள். இந்த சமூகப் பின்னணிகளுக்கு முற்றிலும் மாறாக ஏழை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வீட்டுப் பிள்ளைகளுக்காக கதவுகளைத் திறந்து வைத்திருப்பவைதான் மாநகராட்சி பள்ளிகள். மாநகராட்சிப் பள்ளிகளிலே தங்கள் பிள்ளைகள் படிக்கிறது என்று கூறுவதற்கே பெற்றோர்கள் தயங்கக்கூடிய பார்ப்பனிய உளவியல்தான், இங்கே கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் - “நாங்கள் எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல” என்று மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவியரும் நிரூபித்துக் காட்டியுள்ளனர். கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் பிளஸ் டூ தேர்வில் 81 சதவீதம் பேர் தேர்வு பெற்றுள்ளனர். இதிலும் மாணவர்களைவிட மாணவிகளே முன்னணியில் நிற்கிறார்கள். தண்டையார்பேட்டை அப்பாசாமி வீதியிலுள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் 100 சதவீத மாணவர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். புரசை கங்காதீசுவரர் வீதி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் 99 சதவீதமும், விருகம்பாக்கம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் 94.4 சதவீதமும் மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாதவரம் நெடுஞ்சாலையிலுள்ள எச்.எல்.எல். மாநகராட்சிப் பள்ளியைச் சார்ந்த மாணவி கல்பனா, 1,143 மதிப்பெண்களைப் பெற்று முதலிடம் பெற்றுள்ளார். 1000 மதிப்பெண்களுக்கு மேல், 151 மாணவர்கள் பெற்றுள்ளனர். முதலிடம் பெற்றுள்ள கல்பனா, 10 ஆம் வகுப்பிலும் மாநகராட்சிப் பள்ளியில் படித்து முதலிடம் பெற்றவர். சென்னையில் ‘உயர்தரமுள்ள’ தனியார் பள்ளிகள், கல்பனாவுக்கு, இலவசமாக கல்வி வழங்கிட போட்டி போட்டு அழைப்பு விடுத்தாலும், அதை நிராகரித்து, என்னை இதுவரை உருவாக்கிய மாநகராட்சி பள்ளியில்தான் எனது பிளஸ் டூ கல்வியும் தொடரும் என்று உறுதியாக அறிவித்து சாதித்தும் காட்டியிருக்கிறார். சபாஷ் கல்பனா! ஏழைக் குடும்பத்தில் பிறந்த கல்பனாவின் தந்தை ஒரு போலீஸ்காரர்.

ஒவ்வொரு நாளும் மக்களை நேரடியாக சந்தித்து, மக்கள் பணியில் தன்னை முழுமையாக்கிக் கொண்ட, எளிமையான ஒரு தொண்டர் சென்னை மாநகராட்சியின் மேயராக வந்திருப்பது, சென்னை நகரத்துக்கே பெருமை சேர்ப்பதாகும். ஒடுக்கப்பட்ட சமூகத்திலே பிறந்து முதல் தலைமுறையாக உயர் பதவியை அலங்கரிக்கும் சமூக நீதியிலும் பெரியார் கொள்கையிலும் ஆழ்ந்த பிடிப்புள்ள மரியாதைக்குரிய மேயர் மா. சுப்ரமணியம், மாநகராட்சி பள்ளிகளின் வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தி வருவது பாராட்டுக்குரியதாகும்.

தமிழை இரண்டாவது பாடம் எடுத்த மாணவர்கள்தான், மாநிலத்திலே முதல், இரண்டாவது இடத்துக்கு வர முடியும் என்று தமிழக அரசு ஆணை தெளிவாக இருந்தும், சிலர் பிரஞ்சு, சமஸ்கிருதம் போன்ற மொழிகளை இரண்டாவது பாடமாக எடுத்து, அதில் 200க்கு 200 மதிப்பெண்களையும் வாங்கி, கூடுதல் மதிப்பெண் பெறுகிறார்கள். ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ போன்ற நாளேடுகள் இவர்களைத் தான் முதல் மதிப்பெண் வாங்கிய மாணவர்களாக படம் பிடித்து முதல் பக்கச் செய்தியாக வெளியிட்டு தங்கள் பார்ப்பன உணர்வை வெளிப்படுத்துகின்றன.

இந்தச் சூழலில் உண்மையான அறிவும், ஆற்றலும், ‘தகுதி’யும், ‘திறமை’யும் கொண்ட மாணவர்களாக இந்த மாநகராட்சிப் பள்ளியில் படித்து சாதனை புரிந்த மாணவ மாணவிகளைத்தான் நாம் பார்க்கிறோம். உச்சிமோந்து பாராட்டுகிறோம்; மாணவச் செல்வங்களே! சமூகத் தடைகளையும் சூழல்களையும் வென்று நிற்கும், உங்கள் சாதனைகள் தொடரட்டும்!

# கா.க. புதூருக்கு தனி ஊராட்சி மன்றம் கோரி கழகப் பொதுக்கூட்டம்

பொள்ளாச்சி வட்டம் ஆனைமலை ஒன்றியத்திற்குட்பட்ட கா.க.புதூர் கிராமம். சுமார் 5000 மக்கள் தொகை கொண்ட இந்த கிராமத்திற்கென்று தனியாக ஊராட்சி மன்றம் கிடையாது. பக்கத்திலுள்ள ஆத்துப் பொள்ளாச்சி ஊராட்சிக்குள் தான் கா.க.புதூர் கிராமம் அடங்கிக் கிடக்கிறது. இதனால் கிராமத்தின் வளர்ச்சிப் பணிகள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகின்றன.

சமீபத்தில் முழு சுகாதார கிராமங்களுக்கு மத்திய அரசு வழங்கும் நிர்மல் கிராமம் புரசுகார் விருதுக்கு ஆத்துப் பொள்ளாச்சி ஊராட்சியை தேர்வு செய்திருந்தனர். ஆனால் ஊராட்சிக்கு உட்பட்ட கா.க. புதூர் கிராமத்தில் சுற்றுப்புற சுகாதாரம் முழு அளவில் சீர்கெட்டுக் கிடக்கிறது. இதை சரி செய்யாத ஊராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து கழகம் சார்பில் ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது. இப்படி எல்லாவிதமான வளர்ச்சிப் பணிகளும் புறக் கணிக்கப்பட்டு மாற்றாந் தாய் மனப்பான்மை யுடன் நடத்தப்படுவதை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது என்ற சூழலில் தான் கா.க. புதூர் கிராமத்திற்கு தனி ஊராட்சி மன்ற நிர்வாகம் அமைக்கப்பட்டே தீர வேண்டும் என்று கா.க. புதூர் பெரியார் திராவிடர் கழகம் கிளை மக்களைத் திரட்டும் முயற்சியில் களமிறங்கியுள்ளது. இதன் முதற்கட்டமாக “தன்னாட்சி உரிமை” எனும் தலைப்பில் கழகப் பொதுக் கூட்டம் 26.4.2008 அன்று சனி மாலை 7 மணி அளவில் கா.க.புதூர் பெரியார் திடலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கழக ஒன்றியத் தலைவர் பழ. ஆதி தலைமை தாங்கினார். ஒன்றியத் துணைச் செயலாளர் சம்பத், கிளை செயலாளர் தி.பெ.சின்னு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் ஆனைமலை ஒன்றிய செயலாளர் ருக்மணி, பொள்ளாச்சி நகர செயலாளர் வே.வெள்ளிங்கிரி, பகுத்தறிவாளர் பேரவை அமைப்பாளர்கள் சி. விஜயராகவன், இரா. மோகன், பொள்ளாச்சி வட்ட செயலாளர் கா.சு. நாகராஜன் ஆகியோர் பேசியதற்குப் பின்னால் வழக்கறிஞர் கடலூர் அழகரசன் சுமார் ஒன்றரை மணி நேரம் சிறப்பான நிறைவுரையாற்றினார்.

பொள்ளாச்சி ஆனைமலை பகுதிகளைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட கழகப் பொறுப் பாளர்களும், தோழர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தந்தை பெரியாரின் கிராம சீர்திருத்தம் மற்றும் தமிழர்களை சுரண்டும் பார்ப்பன பனியா கும்பல்களின் சதி, தன்னாட்சி உரிமை, தமிழீழ விடுதலை உள்ளிட்ட பல்வேறு செய்திகளை எளிமையாகவும், நகைச்சுவை யுடனும் அழகரசன் பேச சுமார் 200-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இரவு 10.30 மணி வரை காத்திருந்து கழகப் பொதுக் கூட்டத்தை முழுமையாக கேட்டனர். கழகத் தோழர்களுக்கு கா.க.புதூர் கிராம மக்கள் கட்சி, சாதி எல்லைகளைக் கடந்து வந்து ஆதரவும், பொருளுதவியும் வழங்கினர். தொடர்ந்து கா.க.புதூருக்கு தனி ஊராட்சி அமைக்க கழகம் எடுக்கும் அனைத்து முயற்சி களுக்கும் உறுதியோடு துணை நிற்பதாகவும் பொதுமக்கள் உறுதியளித்துள்ளனர்.



## கோவையில் கழகம் எடுக்கும் “பெரியாரின் போர்வாள் எம்.ஆர். இராதா நூற்றாண்டு விழா”

**மே 17, 2008 சனி மாலை 6 மணி**

**கோவை வி.கே.கே.மேனன் சாலை, சித்தாபுதூர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **வெ. ஆறுச்சாமி** |
| வரவேற்புரை | : | **ம.ரே.ராசக்குமார்** |
| சிறப்புரை | : | **கொளத்தூர் மணி**<br>**திருச்சி என். செல்வேந்திரன்**<br>**நடிகர் ராதாரவி**<br>**இயக்குநர் சீமான்**<br>**விடுதலை க. இராசேந்திரன்**<br>**கு. இராமகிருட்டிணன்** |

**வழக்கறிஞர் சு. குமாரதேவன், குடந்தை சிற்பி இராசன் மற்றும் கழகத் தோழர்கள்**

**சமர்ப்பா குழுவினரின் எழுச்சி இசை**

*நூல்கள் வெளியீடு :*

**திருச்சி செல்வேந்திரன்** எழுதிய

**“பெரியார் தொண்டர் புரட்சி நடிகர் எம்.ஆர்.ராதா”**

**எம்.ஆர்.இராதா** எழுதிய

**“சரித்திரம் திரும்பி விட்டது” நூல் தொகுப்பு**

“பெரியாரின் போர்வாள் எம்.ஆர்.ராதா” -

**நூல் ஆசிரியர் ச. சோமசுந்தரம் அவர்களுக்கு பாராட்டு - சிறப்பு**

## தமிழர்களே, வாரீர்!

நிகழ்ச்சி ஏற்பாடு:

**பெரியார் திராவிடர் கழகம், கோவை மாநகரம்.**

## மத்திய அமைச்சர் ஆ. இராசா ஆய்வுரை (4)

# இந்துயிசத்தின் 5 கோட்பாடுகள் என்ன?

*22.2.2008 அன்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பெரியார் உயராய்வு மையமும், மகளிரியல் துறையும் இணைந்து நடத்திய 'பெரியார் அம்பேத்கர் : இன்றைய பொருத்தப்பாடு' என்ற தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவில் பங்கேற்று மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப துறை அமைச்சர் ஆ. இராசா ஆற்றிய உரையின் தொடர்ச்சி:*

அறிவியல் பூர்வமாக அணுகி கடவுள் இல்லை என்று சொல்வது வேறு. பெரியார் சொல்கிறார்:

*மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது, கண்ணில் படக்கூடாது, தொட்டால் தீட்டு, நடந்தால் தீட்டு என்று சொல்லுகின்ற ஒரு நாட்டை பூகம்பத்தால் அழிக்காமலோ, சண்டமாருதத்தால் துகளாக்கப் படாமலோ, சமுத்திரம் பொங்கி எழுந்து அமிழச் செய்யாமலோ இருப்பதைப் பார்த்த பிறகும்கூட கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்றால் அதை எப்படி நான் நம்புவது?* - என்று கேட்டார். எனவே பிரச்சினை கடவுளுக்கும் பெரியாருக்கும் அல்ல. இந்த சமூகத்தின் மீது பெரியாருக்கு அக்கறை இருக்கிறது. ஜாதிப் பிரச்சினையைப் பெரியார் தொடுகிறபோது கடவுள் குறுக்கே வருகிறார். ஏன் காரணம் இப்படி இருக் கிறாய் என்று கேட்டபோது, இல்லை இப்படித்தான் சாஸ்திரம் சொல்கிறது என்ற விளக்கம் சொல்லப் பட்டது.

அதனால் தான் அம்பேத்கர் Annihilation of caste என்ற புத்தகத்திலே சொன்னார், You must take the stand that Buddha took; You must take the stand that Guru Nanak took; those leaders who not only denied the sastras and also the authorities of sastras.

*வேதங்களை மறுப்பது மட்டுமல்ல, வேதங்களுக்கு ஆதாரமாக இருக்கிற எல்லாவற்றையும் நீ அறுத்துவிடு என்று Annihilation of caste இல் சொல்லுவதற்குக் காரணம், இங்கேதான் அந்த மய்யப்புள்ளி இருக்கிறது.* அதனால்தான் பெரியார் சொன்னார்:

*நான் ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று விரும்புகின்றேன். நான் ஜாதியை ஒழிக்க விரும்புகிற இந்தப் போரில் உன்னுடைய கடவுளை, மதத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமென்று சொன்னால், காப்பாற்றிக் கொண்டு போ.*

நம்மால முடியலைங்கறது தானே பிரச்சனை. ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று முயற்சி செய்கிற போது அந்த ஜாதி எங்கே இருக்கிறது என்றால் வர்ணாஸ்ரமத்திலே இருக்கிறது. வர்ணாஸ்ரமம் எங்கே இருக்கிறது என்று சொன்னால், வர்ணாஸ்ரமத்தைப் படைத்தது நானே என்று கண்ணன் சொல்கிறான். ஆக, இந்துயிசத்தின் தத்துவம் என்று வருகிறபோது, அம்பேத்கர் தனியாகவே இதற்கென்று ஒரு சேப்டரே எழுதுகின்றார். பிலாசபி ஆப் இந்துயிசம் என்று வருகிறபோது தந்தை பெரியார் சொன்ன அந்தத் தத்துவத் தளத்திலேதான் அம்பேத்கர் நிற்கிறார். அம்பேத்கர் செய்த ஆய்விலேதான் தந்தை பெரியார் நிற்கிறார். இது இவர்களுக்கிடையிலே இருக்கிற ஓர்மை. சரி இந்துத்துவா என்னும் கொள்கை சொல்கிறோமே, இதனுடைய அடிப்படைக் கூறுகள் என்ன? முதல் கூறு, சமூகத்தை ஏற்றத்தாழ்வுள்ள படைப்புகளாக மாற்றுவது. Gradual graded inequality - the first character of the Hinduism, இந்துயிசத்தினுடைய தத்துவம் என்று அவர் நான்கு கூறுகளைச் சொல்லுகிறார். Graded Inequality வேற்றுமையைக்கூட ரொம்ப புத்திசாலித்தனமாக படிப்படியாக வைப்பது. Horizontal division வேறு Vertical division வேறு அம்பேத்கர் மிகத் தெளிவாகச் சொல்லுகிறார்.

Horizontal division என்று சொன்னால், கிடைநிலையில் பாகுபடுத்திக் கொண்டே போவது. இதிலே ஒரு கட்டையை எடுத்துவிட்டு இன்னொரு கட்டைக்குத் தாவலாம். ஆனால் ஏணிப்படியைப் போல வெர்டிக்கல் ஆக வைத்தால் ஒரு படியை விட்டு இன்னொரு படிக்குப் போக முடியாது. இந்தியாவில் சாதி எப்படி இருக்கிறது என்றால், படிக்கட்டைப் போல இருக்கிறது. வெர்டிக்கல் டிவிஷன் - வெர்டிக்கல் ஆக இருக்கிற காரணத்தினாலேதான் ஒரு ஜாதியிலிருந்து இன்னொரு ஜாதியை தாண்ட முடியாமல் போகிறது என்கிற ஆய்வினை அம்பேத்கர் வைக்கிறார். அதைத் தந்தை பெரியாரும் ஒப்புக் கொண்டு, ஜாதியை நாம் எடுக்க வேண்டுமென்று சொன்னால் மதத்தை ஒழித்தாக வேண்டும். மதத்தை ஒழிக்க வேண்டுமென்று சொன்னால் மதத்தைக் காப்பாற்றுகின்ற கடவுளை ஒழித்தாக வேண்டும் என்றார். இந்த இடத்திலே நான் ஒன்றைச் சொல்ல வேண்டும். அம்பேத்கர் தன்னை ஒரு ஆன்மீகவாதி என்று அடையாளப்படுத்திக் கொண்டவர். அதனால் தான் பெரியாரை நான் கவனமாகச் சொன்னேன். பெரியாரை நாம் நாத்திகனாகப் பார்ப்பது என்பது வேறு, அந்த நாத்திகத்துக்குள் அவர் சொல்லுவது நான் ஒரு தாராளவாதி என்று அவர் சொல்லுவதற்குக் காரணம், கடவுளை நேரடியாக வெறுக்க வேண்டிய அவசியம், எதிர்க்க வேண்டிய அவசியம் பெரியாருக்கு வந்ததற்குக் காரணம் வேறு. பகுத்தறிவு என்பது வேறு. ஆனால் பெரியாருடைய நாத்திகத்திற்குப் பின்னால் இருக்கிற சமூகம் சார்ந்த உணர்வும், அம்பேத்கர் உயர்த்திப் பிடித்த ஆன்மீகமும் ஒரு இடத்தில் சந்திக்கிறது. ஜாதி கூடாது, இறப்புக்குப் பிறகு ஒன்றும் கிடையாது. புத்தரிடத்திலே கேட்டார்கள், இறப்புக்கு சாவிற்குப் பிறகு மனிதன் எங்கே போகிறான் என்று கேட்டதற்கு அவர் சொன்னார்: "ஒரு விளக்கு அணைந்ததற்குப் பிறகு அந்த ஒளி எங்கே போகிறது என்று கேட்டால் நான் என்ன சொல்லுவேன்."

ரொம்ப எளிமையாகச் சொன்னார். ஒரு கால கட்டத்தில் அவர் இன்னும் தெளிவாகச் சொல்லுகிறார். அவர் எழுதிய இரண்டு புத்தகங்களைக் கல்லூரி மாணவர்கள், வரலாற்று மாணவர்கள் படித்தாக வேண்டும். *Who were the sudras? Why they have been called as sudras and termed as fourth varna in Indo-aryan society?* சூத்திரர்கள் யார்? அவர்கள் ஏன் நான்காவது வர்ணமாக ஆக்கப்பட்டார்கள்? என்று ஒரு புத்தகம். ஆய்வுக் கட்டுரை. இன்னொரு புத்தகம். *Who were the untouchables? Whey they have been called as untouchables?* அவர்கள் ஏன் தீண்டத்தகாதவர்களாக அழைக்கப்பட்டார்கள்? என்று சொன்னபோது சொல்கிறார், இந்தத் தீண்டாமை ஜாதி எல்லாம் எப்போ வருகிறது என்ற சொன்னால், கிறிஸ்து பிறந்ததற்குப் பின்பு 400 ஆண்டுகளில்; அதற்கு முன்பு கிடையாது. பாகியான் வருகிற பொழுது அதைக் குறிப்பிட்டுச் சொல்கிறார். கி.மு.400 வது ஆண்டு பௌத்தத்திற்கு ஏற்கனவே இருந்த ஆரிய சமூகத்திற்கும் நடந்த மோதலின் வெளிப்பாடுதான் இந்த ஜாதிகளெல்லாம் வருகிறதென்று அங்கே அவர் குறிப்பிட்டு ஒரு ஆய்வுக் கட்டுரை வைக்கிறார். அந்த ஆய்வை மறுதலிக்கிறவர்களும் இருக்கிறார்கள், ஏற்றுக் கொண்டவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால், எங்கே நாம் நிற்கிறோம் என்று சொன்னால், இந்த நான்கு குணங்கள் இருக்கிறதே, Graded Inequality-number one வேறுபாடுகளை ஏற்படுத்தி அந்த வேறுபாடுகளைக் கட்டாயமாக ஆக்குவது. இன்னொன்று, அப்படி வேறுபாடுகளை ஏற்படுத்தியதற்குப் பின்னால் பெரும்பான்மை சமூகத்திற்குக் கல்வியை மறுப்பது. இது ஒரு குணாம்சம். இந்துத்துவாவினுடைய குணாம்சத்தில் இதுவும் ஒன்று. மூன்றாவது, Prohibition of power அவன் அதிகாரத்திற்கு வந்துவிடக்கூடாது என்று கவனமாக இருப்பது. 1930 இல், 40 இல் எல்லாம் என்ன பண்ண முடியும்? உங்களுக்குத் தெரியாது. பல மாணவர்களுக்குத் தெரியாது. இன்றைக்கு இருக்கிற அரசியலில் மாணவர்கள் எங்கெங்கோ போய்க் கொண்டிருக்கிறார்கள். திருவிழாவிலே குழந்தைகளை ஒரு நிமிடம் இடுப்பிலேயிருந்து தாய்மார்கள் கழட்டிவிட்டால் கிலுகிலுப்பைக்காரர்கள் பக்கத்திலே ஓடிப்போகிற குழந்தைகளைப் போல் இன்றைக்கு இருக்கிற இளைஞர்கள் எங்கெங்கோ அரசியல் கட்சிக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் சொல்ல விரும்புகிறேன் 1931 வரை இந்த மண்ணில் சமஸ்கிருதம் படித்தால் மட்டும்தான் எம்.பி.பி.எஸ். - இல் அட்மிஷன். பார்ப்பதற்குப் பைத்தியக்காரத்தனமாக இருக்கும். அண்ணா எழுதுகிறார்:

அண்ணா நேரடியாகச் சொன்னால் எடுக்காது என்று சொல்லி வேறுவிதமாக எழுதுகிறார்: ரோமனசோ என்று ஒருவன் இருந்தான் ரஷ்யாவில். அவனுக்குத் தாய்மொழி இலத்தீன். ஆனால் இலத்தீன் படித்த அவனுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் மறுக்கப்பட்டது. அதனால் அவன் இலக்கியத்திலே பின்னால் பெரிய ஆளாகி பெரிய நோபல் பரிசு பெற்றான். ஆனால் அவன் அப்போது வருந்தினான். எனக்கு இரஷ்ய மொழி தெரியவில்லை என்பதற்காக எம்.பி.பி.எஸ். சீட் கொடுக்கவில்லையே என்று, உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும், ஒரு மொழி தெரியவில்லையே என்பதற்காக அந்த மண்ணிலே



வாழுகிறவனுக்கு எம்.பி.பி.எஸ் ஸிலே சீட் இல்லையா என்று கேட்கிறாய் தம்பி, இங்கு மட்டும் என்ன வாழ்ந்தது? 1931 வரை எந்த ஜாதிக்காரனாக இருந்தாலும் சமஸ்கிருதம் தெரிந்தவனுக்கு மட்டும்தான் எம்.பி.பி.எஸ்.ஸில் இடம் என்கின்ற சட்டத்தை உருவாக்கிய நாடு இந்த நாடு. எத்தனை மாணவர்களுக்குத் தெரியும்?

ஆக இது தெரியாமல் போன காரணத்தினால்தான் இன்றைக்கு நிழலிலே இருக்கின்றோம் என்கிற காரணத்தினால்தான் வெயிலின் வெப்பம் அறியாமல் நடந்து வந்த தலைவர்களையெல்லாம் நாம் மறந்து போகின்ற அவலத்திற்கு நாம் ஆளாகியிருக்கிறோம். ஆகவே இது மூன்றாவது இடம். Prohibition of power அதிகாரத்துக்கு வந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள். மூன்று Ban on property - சொத்து வாங்கக் கூடாது என்பது இந்துயிசத்தினுடைய தத்துவம். நான்கு பெண்களை சிறுமைப்படுத்துவது, பெண்களை அடக்கி வைப்பது, Suppression of women - மிகப் பெரிய குற்றச்சாட்டு ஒன்று இருக்கிறது, அம்பேத்கர் மீது! பெரியார் பேசிய அளவிற்கு, பெரியார் போராடிய அளவிற்கு அம்பேத்கரை ஒரு பெண்ணுரிமைப் போராளியாக அடையாளப்படுத்த முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். அம்பேத்கர் அதற்காகத் தனியாகக் குரல் கொடுக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், அவருடைய குரல் வேறுவிதமாக இருக்கிறது.

Rise and fall of Hindu women என்று ஒரு சிறு நூலை எழுதியிருக்கிறார். பெரியார் பெண் விடுதலையை பகுத்தறிவிலிருந்து பகுத்தறிவுத் தளத்திலிருந்து பார்த்தார். பெரியார் ஜாதி ஒழிப்பைப் பகுத்தறிவுத் தளத்திலேயிருந்து பார்த்தார். அம்பேத்கர் ஜாதி ஒழிய வேண்டுமென்று விரும்பினார், பெரியாரைப் போலவே ஆய்வு செய்தார், எழுதினார், எல்லாம் உண்மைதான். ஆனால், விடுதலையை ஒரு ஆன்மீகத் தளத்திலிருந்து பார்க்க விரும்பினார். பவுத்தத்திற்குப் போனார். பவுத்தத்தில் பெண்களுக்கு எல்லா உரிமையும் இருந்தது. அதைவிட அம்பேத்கரை நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒரு இடம். நான் அதற்குப் பின்னால் வருகிறேன். எந்த இடத்திலே பெரியார் செய்த காரியத்தை, பிரச்சாரம் செய்த காரியத்தை அம்பேத்கர் மிகச் சாதுர்யமாக அரசியல் சட்டத்திலே கொண்டு வர முயற்சி செய்தார் என்பதை நான் அடுத்த ஓரிரு நிமிடங்களில் சொல்ல இருக்கிறேன். இந்த இடத்திலே வரும்பொழுது Suppression of women ஆக Graded inequality, Prohibition of education, Prohibition of power, Ban on property, Suppression of women இதுதான். இந்த இந்துயிசம் இந்த ஐந்து கோட்பாடுகளை வைத்திருக்கிறதே இதனுடைய விளைவு இந்த சமூகத்தில் மட்டும் தானா? அரசியலில் கிடையாதா என்றால் அரசியலில் இந்த சமூகத்தினுடைய அமைப்பின் சார்ந்த சாரம் எல்லா இடங்களிலேயும் ஒரு மிகப் பெரிய சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நாட்டினுடைய விடுதலையை நான் குறைவுபடுத்தவில்லை. நான் இந்திய அரசாங்கத்தினுடைய அமைச்சர். என்னுடைய காரில் தேசியக் கொடி பறந்து கொண்டிருக்கிறது. எனக்கு தேசப்பற்று இருந்தாக வேண்டும். ஆனால் வரலாற்றைச் சொல்லுகிற பொழுது சரியாகச் சொல்ல வேண்டும் பெருஞ்சித்திரனார் சொல்லுகிறார்:

*நல்லவேளை வெள்ளைக்காரன் வந்தான், நம்மையெல்லாம் காப்பாற்றினான், அவன் மட்டும் வராமல் போயிருந்தால் நாமெல்லாம் நரியாக, பூனையாக ஊளைவிட்டுக் கொண்டிருந்திருப்போம்.*

இதை நாம் மறுப்பதற்கில்லை. அதனால்தான் பெரியார் மீதும் அம்பேத்கர் மீதும் ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டு - இவர்கள் வெள்ளைக்காரர்களுக்கு வால் பிடித்தார்கள். சுதந்திரம் வேண்டாம் என்று பெரியார் சொன்னார். அம்பேத்கர் இன்னும் வேகமாக ஒரு இடத்திலே சொன்னார் பெரியாருக்கும் அம்பேத்கருக்கும் இருக்கிற ஒற்றுமையைப் பார்க்க வேண்டும். பெரியார் சுதந்திரத்தைப் பற்றிப் பேசுகிறபோது, வெள்ளைக்காரர்கள் கொள்ளைக்கார பிராமணர்களுக்கு எழுதிக் கொடுத்த மேட் ஓவர்.

- இந்த வார்த்தையை அய்யா அப்படியே சொல்லியிருக்கிறார். (தொடரும்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## மேட்டூரில் நாத்திகர் விழா பேரணி

2008 மே 20 ஆம் தேதி பெரியார் திராவிடர் கழகம் சார்பில் நாத்திகர் விழா நடைபெறவிருக்கிறது.

மேட்டூர் தங்க மாபுரிப்பட்டணம், மேட்டூர் அணை ஆர்.எஸ். பகுதி வ.உ.சி. நகர் மைதானத்தில் மாலை விழா நடைபெறுகிறது.

மாலை 3 மணியளவில் மாபெரும் மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் பெரியார் நகரிலிருந்து புறப்படுகிறது.

மாலை 5 மணியளவில் டி.கே.ஆர். குழுவினரின் எழுச்சிப் பறை முழக்கம் - இசை நிகழ்ச்சியும் -

மாலை 6 மணியளவில் சிற்பி ராசனின் மந்திரமல்ல, தந்திரமே நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

தொடர்ந்து நடைபெறும் பொதுக் கூட்டத்துக்கு எஸ்.எம்.டி. பிரபாகரன் தலைமை தாங்குகிறார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், வெ. ஆறுச்சாமி ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

முன்னாள் சட்ட மேலவைத் தலைவர் புலவர் புலமைப் பித்தன் சிறப்புரையாற்றுகிறார்.

## சென்னை மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்ட முடிவுகள்

சென்னை மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம் 5.5.2008 திங்கள் மாலை 6.30 மணி அளவில் இராயப்பேட்டை சைவ முத்தையா 5வது தெரு தோழர் சபரியின் இல்லத்தில் நடைபெற்றது.

பெரியார் பெருந்தொண்டர் திருவாரூர் தங்கராசு அவர்களுக்கு சென்னையில் பாராட்டு விழா, குழந்தைகள் பயிலரங்கம், தொடர் தெருமுனைக் கூட்டம் பற்றி கலந்தாலோசனை நடத்தப்பட்டது.

கழக வழக்கறிஞர் சு. குமாரதேவன் தலைமையேற்றார். எ.கேசவன், அன்பு தனசேகர், தபசி குமரன், இரா. உமாபதி, கரு. அண்ணாமலை, டேவிட் பெரியார் உட்பட 20க்கும் மேற்பட்ட தோழர்கள் கருத்துகளை கூறினர்.

கலந்துரையாடல் கூட்டத்தில் புதிய கழகப் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

திருவல்லிக்கேணி : ச. குமரன் - தலைவர்; ஆ. தமிழ்ச்செல்வன் - செயலாளர்; கி. முருகன் - அமைப்பாளர்; சு. ஆனந்தன் - பொருளாளர்.

மயிலாப்பூர் : இராவணன் - தலை வர்; பொற்செல்வன் - செயலாளர்; தாய் ஓவியம் - பொருளாளர்.

அனுமந்தபுரம் : பாபு - தலைவர்; தம்பிதுரை - செயலாளர்.

மீர்சாகிப்பேட்டை : கோபி - தலைவர்; சத்யா - செயலாளர்.

சைவ முத்தையா தெரு : ச. சர வணன் - தலைவர்; பா. விஜி - செய லாளர்; கோ. சீனு - பொருளாளர்.

பாலாஜி நகர் : பாபு - தலைவர்; பிரகாஷ் - செயலாளர்.

முகலிவாக்கம் : சூ. ஆம்ரிக் - தலைவர்; செ. ஜீவா - துணைத் தலைவர்; வை. ரமேஷ் - செயலாளர்; நா. மதன் - துணை செயலாளர்; மு.விஜய் - பொரு ளாளர்.

கலந்துரையாடல் கூட்டத்திற்கு 20-க்கும் மேற்பட்ட புதிய தோழர்கள் பல பகுதிகளிலிருந்து வந்து கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

விநாயகம் நன்றி கூற 9.30 மணிக்கு நிறைவுற்றது. வருகை தந்த அனைவருக் கும் புலால் உணவு வழங்கப்பட்டது.

## தூத்துக்குடி சாதி ஒழிப்புப் பிரச்சாரப் பயணம்

தூத்துக்குடியில் கழகம் நடத்திய சாதி ஒழிப்புப் பிரச்சாரப் பயண செய்தி 1.5.08 இதழ் தொடர்ச்சி -

ஏரல், குறும்பூர், காயல் பட்டணம் போன்ற பகுதிகளில் சாதி ஒழிப்பு பரப்புரை பயணத்தை தொடர்ந்து திருச்செந்தூரில் பயண நிறைவு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மன்னை இராம. முத்துராமலிங்கம் பாடலுடன் தொடங்கிய கூட்டத்தில் ஆதித் தமிழர் பேரவை க.கண்ணன் புரட்சிகர இளைஞர் முன்னணி இரா. தமிழரசன், உலக தமிழர் பேரமைப்பு துரை. அரிமா, கழக மாவட்டத் தலைவர் பொறிஞர் அம்புரோசு, வே. பால்ராசு ஆகியோர் உரையைத் தொடர்ந்து கழக தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன், சாதி ஒழிப்பு பரப்புரை பயணத்தின் நோக்கத்தினை விளக்கி உரையாற்றினார். தி.மு.க. இலக்கிய அணி புலவர் மருத்துவர் செ. வெற்றிவேல் சிறப்புரையாற்றினார்.

கூட்ட முடிவில் 1.30 மணி நேரம் ஓடக்கூடிய 'உலகம் தோன்றியது; உயிரினம் தோன்றியது; மனிதன் தோன்றியது; மதம் தோன்றியது' போன்ற பொருள் குறித்து விஞ்ஞான ரீதியில் விளக்கும் சாதி ஒழிப்புக்கான ஆவணப் படம் போட்டுக் காண்பிக்கப்பட்டது.

தூத்துக்குடி முதல் திருச்செந்தூர் வரை நடைபெற்ற சாதி ஒழிப்புப் பரப்புரை பயணத்தில் ஆயிரக்கணக்கான துண்டறிக்கைகளை கோ. அ. குமார், பால். அறிவழகன், சா.த. பிரபாகரன், க. மதன், வ. அகரன், செ. செல்லத்துரை பொது மக்களிடம் வழங்கினர். இப்பரப்புரை பயணத்தில் மன்னை இராம முத்துராமலிங்கத்தின் சிறப்பான பாடல்கள் மக்களை திரும்பிப் பார்க்க வைத்தது. கழக தலைமை செயற்குழு உறுப்பினர் பால் பிரபாகரன் அந்தந்த பகுதி மக்களுக்கேற்ப கருத்துகளை கூறினார்.

### இருவப்பபுரம் மீட்பு போராளிகளுக்கு வாழ்த்து

சாதி ஒழிப்பு பரப்புரை பயணம் சென்ற பகுதியில் சாயர்புரம் பேரூராட்சியில் 1964 இல் இணைக்கப்பட்ட இருவப்பபுரம் ஊராட்சியை திரும்ப தரக் கோரி தலித் மக்கள் தொடர்ந்து 196 வது நாளாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். அந்த உண்ணாவிரதப் பந்தலில் பயணக்குழுவினர்கள் சென்று உண்ணாவிரதம் இருப்பது எங்களுக்கு ஏற்பு கிடையாது. எனினும் உங்கள் கோரிக்கை நியாயமானது. வெற்றி கண்டிப்பாக கிடைக்கும் என வாழ்த்து கூறினர். அந்த போராளிகள் பெரியார் திராவிடர் கழகம் தங்களுக்கு அளித்து வரும் ஆதரவை தொடர்ந்து அளிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

## மூடநம்பிக்கை மக்களிடம் எப்படி வருகிறது?

— சிற்பி இராசன் —

மூடநம்பிக்கை மற்றவர்கள் செய்வதைப் பார்த்தும், மற்றவர்கள் சொல்வதை அப்படியே நம்புவதாலும், நம்பியதை அவரவர் வசதிக்கு தகுந்தாற்போல மாற்றிக் கொண்டு செய்வதாலும், சிறிதும் பகுத்தறிவிற்கு வேலை கொடுத்து சிந்திக்காததனாலும் பரவுகிறது!

17 ஆண்டுகளுக்கு முன் என்னுடைய நண்பனுடன் திருப்பதிக்குச் சென்றிருந்தேன். அவனுடன் அவன் மனைவி மற்றும் 5 வயது பையனும் வந்திருந்தார்கள். திருமலைக்கு நடந்து போவதாக வேண்டிக் கொண்டதால் நடைபாதை வழியாக நடந்து போனோம். பாதி வழியில் அவனுடைய பையன் அவசரமாக மலம் கழிக்க வேண்டும் என்று சொன்னான்.

நண்பனோ இது கோவிலுக்குப் போகும் வழி, இங்கு அப்படிச் செய்யக் கூடாது என்று கண்டித்தான். சிறுவனால் அடக்க முடியவில்லை. நான் நண்பனிடம், பரவாயில்லை, சின்னப் பையன்தானே அவன் 'போன' பிறகு நாம் எடுத்தெறிந்து விடலாம் என்ற கூறினேன். சிறுவனும் ஓரமாக உட்கார்ந்து மலம் கழித்தான். இதைப் பார்த்த பக்தர்களில் பலர் எங்களைக் கண்டபடி பேசிவிட்டுச் சென்றார்கள். அந்த 'வேலை' முடிந்தவுடன் அதில் ஈக்கள் வந்து மொய்க்கத் தொடங்கின.

நான் பெருமாளுக்கு அர்ச்சனை செய்வதற்காக நண்பன் வாங்கியிருந்த பூவைக் கொஞ்சம் எடுத்துப் போட்டு மலத்தை மூடினேன்.

எங்களுக்குப் பின்னால் வந்த பக்தர்கள் இதைப் பார்த்துவிட்டு ஏன் என்று சிந்திக்காமல் இந்த இடத்தில் பூப் போட்டால் புண்ணியம் என்று எண்ணி அவர்களும் நான் போட்ட பூவின் மேல் பூவை எடுத்துப் போட்டார்கள்.

நாங்கள் இதைக் கொஞ்ச நேரம் வேடிக்கைப் பார்த்துவிட்டு மேலே போய் சாமியெல்லாம் கும்பிட்டுவிட்டுத் திரும்பி வர 7 மணி நேரம் ஆகிவிட்டது.

திரும்பி வரும்போது பூப்போட்ட இடத்தில் ஏகப்பட்ட கும்பல். அந்த இடத்தில் பூப்போடுவதற்காக ஆண்களுக்குத் தனி வரிசையும், பெண்களுக்குத் தனி வரிசையும் செய்து கொடுக்க 2 போலீஸ்காரர்களைக் கோயில் நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தது.

5 வயதுச் சிறுவன் வேறு வழியில்லாமல் அங்கு மலம் கழிக்கும்போது திட்டியவர்கள், அதன் மீது போடப்பட்ட மலரைப் பார்த்தவுடன் மதி கெட்டுப் போவது ஏன்? கொஞ்சம் சிந்தித்தால் இந்த அவல நிலை வருமா?

என் நண்பனும் கடவுள் நம்பிக்கை என்பது மூடத்தனம் என்பதை உணர்ந்தான்! இதைத் தான் பெரியார் அவர்கள் வாழ்நாள் முழுவதும் "யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பி விடாதீர்கள்! ஏன்? எதற்கு? என்று கேளுங்கள்" என்று கூறினார்.


ஒவ்வொரு மாதம் கார்த்திகைத் தினத்தன்று முருகன் கோயில்களில் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழியும். அர்ச்சனைத் தட்டுகள் விற்கும் கடைகள் அன்றைக்குத் தற்காலிகமாக நிறைய இருக்கும். கணவன், மனைவி, அம்மா ஆகிய மூன்று பேரும் அருகருகே தனித்தனியாக மூன்று கடைகளைப் போட்டு அர்ச்சனைத் தட்டுகள் விற்பார்கள். கணவன் 15 ரூபாய் என்பார்; அந்தக் கடையில் வாங்கவில்லையென்றால் மனைவி அதே சாமான்களை 12 ரூபாய் என்று விற்று விடுவார். அவரிடமும் வாங்கவில்லை எனில் அம்மா 10 ரூபாய்க்கு விற்று விடுவார். எப்படியோ வியாபாரம் நடந்துவிடும். மூன்றுபேருக்கும் சேர்த்து 1000 ரூபாய் லாபம் கிடைக்கும். இதற்காக ஒரு வாரம் அலைந்து தேங்காய், பழம், சூடம், ஊதுபத்தி, வெற்றிலை, பாக்கு, பூ இவற்றைச் சேகரிக்க வேண்டும். கடைக்காரர் சுயசிந்தனையுடையவர். யோசித்துப் பார்த்தார். ஒரு வாரம் அலைந்து 3 பேர் ரூ.1000 சம்பாதிப்பது முட்டாள்தனம். கோயிலில் அர்ச்சனை செய்பவர் எந்தப் பொருளுமே இல்லாமல் வெறும் மந்திரம் என்ற பெயரிலேயே 4000, 5000 ரூபாய் வரைச் சம்பாதிக்கிறார். நாமும் அதேபோல ஏதாவது செய்ய வேண்டும் என்றெண்ணி, ஒரு கார்த்திகை நாளன்று 1000 சூட வில்லைகளை மட்டும் வாங்கி வந்து, பஸ் நிற்கும் இடத்திற்குப் பக்கத்தில் ஒரு மேசையைப் போட்டு, அதன் மீது ஒரு வெள்ளைத் துணியைப் போட்டு, மேசையை மல்லிகைப்பூவால் அலங்கரித்து சூடத்தை மேசை மீது அழகாக அடுக்கி வைத்தார். தெருவோரமாகக் கிடந்த ஒரு கருங்கல்லைக் கொண்டு வந்து தரையில் போட்டு அதற்கு 3 பட்டைகள் போட்டு குங்குமமும் வைத்து, அதற்குப் பூப் போட்டு, ஒரு சூடவில்லையை ஏற்றி வைத்தார்.

பஸ்ஸைவிட்டு இறங்கியவர்களில் ஒருவர் வந்து, இங்கே என்ன விசேஷம்? ஏன் சூடம் கொளுத்தி வைக்கப்பட்டுள்ளது? என்று கேட்டார். கடைக்காரரோ இது எல்லோருக்கும் தெரியாது. இந்த ஊரிலேயே இந்தக் கல்லுக்குத்தான் மகிமை! இதைக் கும்பிடாமல் முருகனைக் கும்பிடுவதால் எந்தப் பலனும் இல்லை என்றார். உடனே அந்த நபர் ஒரு சூடத்தை வாங்கி ஏற்றி வைத்து கீழே விழுந்து கும்பிட்டார். இதைப் பார்த்த மற்றவர்களும் அதே போல் செய்யத் தொடங்கினார்கள்! விளைவு? 50 பைசா சூடம் 2 ரூபாய். 3 மணி நேரத்தில் விற்றுத் தீர்ந்தது. லாபம் ரூ.1500. பழம், தேங்காய் என்று அலையவும் தேவையில்லாமல் போயிற்று.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 15th May 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 மே 22, 2008 புரட்சி 7 முழக்கம் 21 விலை : ரூ.2.50


### ஆய்வுகள் வெளிப்படுத்தும் உண்மை

## பஞ்சாயத்துகளில் தலைவிரித்தாடும் தீண்டாமை

***‘எவிடென்சு’ என்ற அமைப்பு நடத்திய கள ஆய்வில், மதுரை மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் மீதே தீண்டாமை திணிக்கப்படுவதையும், செருப்பு போட்டு நடக்க முடியாத நிலையும், இரட்டை தம்ளர் முறையும் இருப்பதை அம்பலப்படுத்தியுள்ளது.***

‘எவிடென்சு’ அமைப்பு தமிழக அளவில் தீண்டாமை நடக்கக்கூடிய கிராமங்களை ஆய்வு செய்து அவற்றை அரசுக்கும், மனித உரிமை ஆணையங்களுக்கும், சிவில் சமூக குழுக்களுக்கும் எடுத்துச் சென்று, உரிய மனித உரிமை தர நிர்ணயங்களோடு, சமூக நீதி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஆய்வை மேற்கொண்டுள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டு முதற்கட்டமாக, பஞ்சாயத்துத் தலைவர் பதவி தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராமங்களில் ஆய்வு மேற்கொண்டது. ஒரு தலித்தே பஞ்சாயத்துத் தலைவராக இருக்கும் கிராமத்தில் தலித்துகளின் நிலைமை என்னவாக இருக்கிறது என்பதை ஆய்வு செய்தால், இதர பஞ்சாயத்து நிலவரங்களை எளிதில் புரிந்து கொள்ள முடியும் என்ற அடிப்படையில் மதுரை, சிவகங்கை ஆகிய இரு மாவட்டங்களில் ஆய்வு நடத்தி அது அறிக்கை அளித்துள்ளது.

மதுரை மாவட்டத்திலுள்ள 431 பஞ்சாயத்துகளில் 83 பஞ்சாயத்துக்களில் தலைவர் பதவி தலித்துகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அவைகளில் 50 பஞ்சாயத்துகளில் ஆண்கள் தலைவராகவும், 33 பஞ்சாயத்துகளில் பெண்கள் தலைவராகவும் உள்ளனர். சிவகங்கையில் 445 பஞ்சாயத்துகளில் 83 தலித்துகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் 80 பஞ்சாயத்துகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் 47 பஞ்சாயத்துகளில் ஆண்களும் 33 இல் பெண்களும் தலைவராக உள்ளனர். இந்த ஆய்வறிக்கையில் 20 பஞ்சாயத்துத் தலைவர்கள் பிரமாண வாக்குமூலம் அளித்துள்ளனர். அதில் தங்களது கிராமத்தில் தலித்துகளுக்கு எதிரான பாகுபாடுகளையும், பஞ்சாயத்துத் தலைவராக தங்களுக்கு ஏற்படும் அனுபவங்களையும் எடுத்துக் கூறியுள்ளனர்.

ஆய்வு மேற்கொண்டுள்ள இந்த கிராமங்களில் கீழ்க்கண்ட வகையான தீண்டாமைக் கொடுமைகளும், தடைகளும் உள்ளனவா என்று பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

1. டீக்கடைகளிலும், உணவு விடுதிகளிலும் தலித்துகளுக்கு எதிரான இரட்டை குவளை முறை பாகுபாடு இருக்கிறதா?
2. ஜாதி இந்துக்கள் குடியிருக்கும் பகுதிகளில் செல்லவும், அரசு மற்றும் பொது இடங்களைப் பயன்படுத்துவதிலும் கிணறுகள், குட்டைகள், குளங்கள், சுடுகாடு, இடுகாடு ஆகியவற்றைப் பயன்படுத்துவதிலும் பாகுபாடுகளும் தடைகளும் உள்ளனவா?
3. கோவில்களுக்குள் செல்வதிலும், திருவிழாக்களில் பங்கேற்பதிலும் தடை உள்ளதா?
4. நல்ல உடைகள், நகைகள் அணிவதில் தடைகள் உள்ளனவா?
5. குழந்தைகள் கொத்தடிமைகளாக பணியாற்ற கட்டாயப்படுத்தப்படுகிறார்களா?
6. கட்டைப் பஞ்சாயத்து மூலம் தலித்துகளுக்கு தண்டனை வழங்கப்படுகிறதா?
7. பள்ளி வளாகத்துக்கு உள்ளும் புறமும் குழந்தைகளை நடத்தும் விதத்தில் பாகுபாடு உள்ளதா?
8. தேர்தலில் போட்டியிடவும் பங்கேற்கவும் தடை அல்லது அச்சுறுத்தல் உள்ளதா?
9. இறந்த மிருகங்களை அப்புறப்படுத்தல், சாதி இந்துக்கள் இறந்து போனால் இழவுச் செய்தி சொல்லல், குழி தோண்டுதல், பறை அடித்தல் போன்ற வேலைகளைச் செய்யும்படி தலித்துகள் கட்டாயப்படுத்தப்படுகிறார்களா?
10. பேருந்துகளில் செல்லும்போது பாகுபாடு அல்லது தடைகள் உள்ளனவா?
11. தலித் பெண்களுக்கெதிராக வன்முறை உள்ளதா?
12. வயதான தலித் மக்களை அவமானப்படுத்தும் வகையில் சாதி பெயரை சொல்லி அழைப்பது நடைமுறையில் உள்ளதா?

இதுபோன்ற 30 வகையான பாகுபாடுகளும், தடைகளும் இருக்கின்றனவா என்று ஆய்வு மேற்கொண்ட கிராமங்களில் பரிசீலனை செய்யப்பட்டது.

மதுரை மாவட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 83 கிராமங்களில் அனைத்து கிராமங்களிலும் இந்த 30 வகையான பாகுபாடுகளில் பெருவாரியானவை இருப்பது தெரிய வந்துள்ளது. வாடிப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த கட்டகுளம் கிராமம், அலங்காநல்லூர் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆதனூர் பஞ்சாயத்து ஆகிய இரண்டு ஊராட்சிகளில் மட்டும் இந்த தடைகள் குறைவாக உள்ளன. ஆனால், இந்த ஊர்களிலும் பொதுக் கழிப்பறையை பயன்படுத்துதல், இழிவான வேலைகளை செய்யக் கட்டாயப் படுத்துதல்,ரேஷன் கடைகளைப் பயன்படுத்துவதில் இடர்பாடுகள் ஆகியவை இருப்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள 80 பஞ்சாயத்துகளில் நிலைமை மதுரையைவிட சற்றே பரவாயில்லை என்று சொல்லும்படியாக இருக்கிறது. இங்கு சுமார் 10-15 பஞ்சாயத்துக்களிலாவது ஜாதியக் கொடுமையும், பாகுபாடும் குறைவாக உள்ளது. இருந்தாலும் இந்த 30 வகையான தடைகளிலும் கொடுமைகளிலும் ஒன்று கூட இங்கு இல்லை என்று எந்த பஞ்சாயத்தாலும் சொல்ல முடியாது. மதுரை மாவட்டத்தில் 83 கிராம பஞ்சாயத்தில் 77 இல் இரட்டை குவளை முறை நடைமுறையில் உள்ளது. சிவகங்கையில் 80 பஞ்சாயத்துக்களில் 48- இல் இந்த முறை இருக்கிறது.

பள்ளிக்கூட வளாகத்தில் தலித் குழந்தைகள் பாகுபாட்டிற்குள்ளாகிறார்கள். இந்தக் குழந்தைகளை தனியாக உட்கார வைத்தல், அவர்களுக்கென்று தனி தண்ணீர் குடம், தனியான தண்டனை என்பதெல்லாம் நடைமுறையாக இருக்கிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் தலித்துகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையிலும் பாகுபாடு காட்டப்படுகிறது. அலட்சியமாகப் பேசுவது திட்டுவது, பிரசவம் பார்க்க மறுப்பது என்பது மதுரை மாவட்டத்தில் பரவலாகவும், சிவகங்கையில் சற்று குறைவாகவும் உள்ளது. தலித் குழந்தைகள் கொத்தடிமைகளாக இருப்பதும் அதிக அளவில் உள்ளது.

இந்த கொடுமைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் இருப்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் பஞ்சாயத்துத் தலைவர்களின் நிலை. பஞ்சாயத்துத் தலைவர் நாற்காலியில் ஜாதி இந்து வகுப்பைச் சேர்ந்த துணைத் தலைவர்களே உட்கார்ந்து கொள்கின்றனர் என்று பல பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்கள் வாக்கு மூலத்தில் கூறியுள்ளனர். காசோலையில் கையெழுத்துப்போடுவது, கூட்டம் நடத்துவது, குறிப்பு

4 ஆம் பக்கம்

## கடவுள் இல்லாத சர்ச்சுகள் வேண்டும்!

‘மதம், கடவுள்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை’ என்ற இந்த நம்பிக்கைதான், அமெரிக்காவில் இப்போது வேகமாகப் பரவி வருகிறது. இது பற்றி ‘ஜீண்மெக்னேஸ்’ எனும் நியூயார்க் பத்திரிகை கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. கடந்த பிப்ரவரி மாதம் மத நம்பிக்கை தொடர்பாக நிறுவனம் ஒன்று கணக்கெடுப்பு நடத்தியது. அதில் 16 சதவீத அமெரிக்கர்கள், தங்களுக்கு மதத்தில் நம்பிக்கை கிடையாது என்று கூறியுள்ளனர். 18-லிருந்து 29 வயதுள்ள இளைஞர்களில் 25 சதவீதம் பேர் தங்களை மத மற்றவர்கள் என்றும், எந்த மதத்திலும் நம்பிக்கை கிடையாது என்றும் கூறியுள்ளனர். 1986 ஆம் ஆண்டு இதே போல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் மத நம்பிக்கை இல்லை என்று 11 சதவீதம் பேர் மட்டுமே கூறியிருந்தனர். அமெரிக்காவில் நாத்திகர் குழுக்கள் - அரசும், சர்ச்சும், பிரிந்தே நிற்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வருகின்றன. கடந்த 13 ஆண்டுகளாக அமெரிக்க நாத்திக கழகத்தின் தலைவராக உள்ள எல்லன் ஜான்சன் கூறுகையில், “நாங்கள் சுதந்திரமானவர்கள்; எந்த அமைப்பிலும் நாங்கள் இணைத்துக் கொள்ள மாட்டோம்; அப்படி அமைப்பு தேவைப்பட்டால் நாங்களே உருவாக்கிக் கொள்வோம்” என்று கூறுகிறார். கடவுள் எதிர்ப்பு என்பதோடு மட்டும் நின்று விடாமல், டார்வின் பரிணாமக் கொள்கை மற்றும் பொது நெறிகளை மக்களிடையே பரப்ப வேண்டும் என்று அமெரிக்க நாத்திகர்கள் கருதுகிறார்கள்.


மதங்கள் இப்போதும் ஏன் உயிரோடு இருக்கின்றன? இந்தக் கேள்விக்கு அமெரிக்க நாத்திக சிந்தனையாளர்கள் கூறும் பதில் இது தான். அவர்களுக்கு நிறுவனங்கள், கல்வி நிலையங்கள், உடைமைகள், வாரிசுகள், சடங்குகள், பணம், மதப் பிரச்சாரகர்கள் மற்றும் இறப்புக்குப் பிறகு இருப்பதாகக் காட்டப்படும் உலகம் - இவைகள்தான் மதங்களை வாழ வைத்துக் கொண்டுள்ளன. இதனால் சர்ச்சுகள் - தேவைகளைப் பூர்த்தி செய்யும் மய்யங்களாக செயல்படுகின்றன. அதேபோல் நாத்திகர்களுக்கும் கலாச்சார மய்யங்கள் வேண்டும் என்கிறார், ஹார்டுவேர்டு பல்கலைக்கழக பேராசிரியரும் நாத்திகருமான கிரேக் எப்ஸ்டின். ‘விஞ்ஞானமும் பகுத்தறிவும் அவசியத் தேவை; ஆனால் இந்த சிந்தனைகள், மருத்துவமனைக்கு போய் ஆறுதல் சொல்ல உடன் வராது. எனவே மதமற்ற மனித சேவைகளுக்கான கலாச்சார மய்யங்கள் நாத்திகர்களுக்கு வேண்டும்’ என்று அவர் கூறுகிறார். பல நாத்திகர்கள் - “சர்ச் கட்டிடங்கள் நாத்திகர்களுக்கு தேவை. ஆனால், அதில் கடவுள் மட்டும் இருக்கக் கூடாது” என்று கூறுகிறார்கள். - இவ்வாறு அந்த அமெரிக்க பத்திரிகை கட்டுரை வெளியிட்டுள்ளது.

# சைவ–வைணவ மோதலும் – ‘தசாவதாரமும்’

நடிகர் கமலஹாசன் நடிக்கும் ‘தசாவதாரம்’ என்ற திரைப்படம் திரைக்கு வரவில்லை. சில நிமிடங்களே ஓடும் அதனுடைய டிரெய்லர் மட்டுமே வந்துள்ளதால், அதைப் பார்த்து ‘சர்வதேச ஸ்ரீ வைணவ தர்ம சம்ரக்ஷண’ என்ற வைணவ அமைப்பைச் சார்ந்த கோவிந்த ராமானுஜ தாசா என்ற பார்ப்பனர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து விட்டார். வைணவர்களின் குலதெய்வமான ஸ்ரீரெங்கநாதனை உடைத்து சின்னா பின்னப்படுத்துவதாகவும், பகவானை ஒரு மனிதருடன் கட்டி கடலில் வீசியதாகவும் படம் சித்தரிக்கிறது என்று, அந்தப் பார்ப்பனர் வழக்கில் கூறியுள்ளார். 11 ஆம் நூற்றாண்டில் வைணவர்களுக்கும், சைவர்களுக்கும் சமய மோதல்கள் நடந்ததாக கற்பனையாக படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது என்கிறார், இவர்! இது வைணவப் பார்ப்பனர் கருத்து என்றால், சைவ பார்ப்பனரான இராம.கோபாலனும் படத்தைத் தடை செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார். ஆனால் 11 ஆம் நூற்றாண்டில் சைவ - வைணவ மோதல் நடந்தது உண்மைதான். அது கற்பனை என்று கூற முடியாது. ஆனால், அது சின்ன சச்சரவுதான் என்கிறார் சைவப் பார்ப்பனர் ராம.கோபாலன்.

வழக்கு தொடர்ந்த வைணவப் பார்ப்பனரோ சைவ-வைணவ மோதல் நடந்தது என்று கூறுவதே கற்பனை என்கிறார். 11 ஆம் நூற்றாண்டில் சைவ-வைணவ மோதல்கள் கடுமையாக நடந்தது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

இப்போதும்கூட சைவ-வைணவப் பகை இருக்கவே செய்கிறது. இதை எழுத்தாளர் கி. ராஜநாராயணன், தனது ‘கரிசல்காட்டுக் கடுதாசி’ நூலில் நகைச்சுவையாகப் பதிவு செய்துள்ளார். கி.ராஜநாராயணன், பிறப்பால் வைணவப் பிரிவைச் சார்ந்தவர். தங்களது வீட்டிலேயே சைவ எதிர்ப்பு கடுமையாகப் பின்பற்றப்பட்டது என்கிறார். கி. ராஜநாராயணன். அவர் எழுதியுள்ள பகுதி இது:



“சிவனுடைய பெயரை யாரும் எங்கள் வீட்டில் மறந்தும் உச்சரிக்க மாட்டோம். அசந்து மறந்து சொல்லி விட்டால் சாட்டை அடி விழும். எங்கள் வீட்டில் வேலை செய்யும் வேலையாட்களின் பெயர்கள் கூட சிவப் பெயர் கிடையாது. இதில் எங்கள் அப்பா ரொம்ப ஜாக்கிரதை! நாங்கள் மணிகட்டு வைணவர்களின் பரம்பரை! மணிகட்டி வைணவர்களின் இரண்டு காதுகளிலும் சிறிய வெள்ளி மணிகள் கட்டித் தொங்கவிட்டிருக்கும். எங்காவது எவனாவது சிவனுடைய பெயரை அசந்து மறந்து சொல்லித் தொலைத்து விட்டால் உடனே வேகமாகத் தலையைக் குலுக்குவோம். இந்த மணிகள் ஒலித்து, சிவநாமத்தைக் காதினுள் நுழைய விடாமல் விரட்டி அடித்துவிடும்!”

இப்படியாக உள்ள மணிகட்டி வைணவரைக் கேலி செய்தும் கதைகள் உள்ளன.

(சைவர்களைக் கேலி செய்து வைணவர்களும் நிறையக் கதைகள் உண்டு பண்ணியிருக்கிறார்கள்; இப்படி ஏசல் கதைகளும், ஏசல் பாடல்களும் பரஸ்பரம் ஏராளம்.)

ஒரு சத்திரத்தில் மூணு சிவப் பண்டாரங்கள் வந்து தங்கியிருந்தார்கள். என்ன காரணம் என்று தெரியவில்லை; அதில் இரண்டு பண்டாரங்களுக்குள் பலத்த ‘அடிதடி’ நடந்தேறிவிட்டது. மூணாவது பண்டாரம் இதைப் பார்த்துப் பலத்த கூக்குரலிட்டார். சத்திரத்தின் கார்பாரி ஓடி வந்து அவர்களைப் பிடித்துக் கொண்டு போய் ஊர் நாட்டாண்மை நாயக்கரிடம் நிறுத்தினார். கிராமத்தின் நாட்டாண்மையும் விவகாரியுமான அவர் ஒரு மணி கட்டி வைணவர் என்பது அவர் காதுகளில் தொங்கும் மணிகளே சொன்னது!

சத்திரத்து அதிகாரியான கார்பாரி அந்தப் பண்டாரங்களைக் கொண்டு வந்து அவர் முன் நிறுத்தியதோடு விலகிக் கொண்டார். நடந்ததைப் பார்த்தவர் மூணாவது பண்டாரம் தான். அவர்தான் கண் கண்ட காட்சி. என்ன நடந்தது என்று ‘விவரித்தார்’ அவர்!

அந்த மூணாவது சிவப் பண்டாரம் மூச்சுக் காற்றை வெளியே விடும்போதும் சிவ; மூச்சுக் காற்றை உள்ளே இழுக்கும்போதும் சிவ! அப்படி ஒரு சிவயோக சிவப் பண்டாரம் அல்லது பண்டார சிவம்! அவர் தன்னுடைய சாட்சியத்தை ஆரம்பித்தார்:

முதல் பண்டாரத்தைச் சுட்டிக்காட்டி, “இச் சிவம் அச்சிவத்தை சிவ” அதாவது, இவர் - இந்தப் பண்டாரம் - அந்தப் பண்டாரத்தை ஓர் அடி வைத்தார் முதலில்.

பதிலுக்கு அவர் என்ன செய்தாராம்! “அச் சிவம் இச் சிவத்தை சிவ சிவ” - இரண்டாகப் பதிலுக்குத் திருப்பித் தந்தார். மேலும் என்ன நடந்தது?

“இச் சிவம் அச் சிவத்தை சிவ சிவ சிவ....” அவ்வளவுதான்; அதுக்குப் பிறகு நடந்ததை இப்படி வேகமாக விவரித்து முடித்தார். “இச் சிவம் அச் சிவம் இச் சிவம் சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ...”

பாவம், மணிகட்டி வைணவர் பாடு திண்டாட்டமாகப் போய்விட்டது! தலையை எப்படிக் குலுக்கியிருப்பார் என்று சொல்லத் தேவையில்லை. - என்று எழுதியுள்ளார் கி.ராஜ நாராயணன்.

## உடுமலை சாளரப்பட்டியில் அருந்ததியருக்கு உடனே நிவாரணம் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்

கடந்த பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதி உடுமலைப்பேட்டைக்கு அருகே உள்ள சாளரப்பட்டி கிராமத்தில் ஆதிக்க வன்னியர் சாதியினரின் வன்கொடுமைக்கு அருந்ததியர்கள் கடுமையாக தாக்கப்பட்டும், சொத்துக்கள் சூறையாடப்பட்டும், தீக்கிரையாக்கப்பட்டும் கொடூரமாக பாதிக்கப்பட்டனர். அதனை தொடர்ந்து மூன்று மாதங்களான பின்பும் பாதிக்கப்பட்டோருக்கு எந்த நிவாரண உதவியும் தமிழக அரசு செய்யவில்லை. அதனை கண்டித்தும் உடனே நிவாரண உதவி வழங்கக் கோரியும், சாதி ஒழிப்புக் கூட்டியக்கத்தின் சார்பில் 6.5.2008 அன்று மாலை 4 மணிக்கு கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமையில் உடுமலை மத்திய பேருந்து நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில், புரட்சிப் புலிகள் பொதுச்செயலாளர் நாகராசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உடுமலை நகர அமைப்பாளர் அப்துல் கரீம், ஆதித் தமிழர் பேரவை ஈழவேந்தன், அருந்ததியர் கலை இலக்கியக் கழகப் பொதுச்செயலாளர் தமிழ் முருகன், பகுஜன் சமாஜ் கட்சி ஆர்.எஸ்.ஆறுமுகம், தேசிய தாழ்த்தப்பட்டோர் நலவுரிமை இயக்கம் சசிகுமார், உடுமலை தமிழ்ச் சங்கம் கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். இறுதியில் நகர கழகச் செயலாளர் இரா.பாக்கியநாதன் நன்றி கூறினார்.

கழகத்தின் சார்பில் மாநில தகவல் தொடர்பாளர் ந.பிரகாசு, மாவட்ட செயலாளர் கா. கருமலையப்பன், நகரத் தலைவர் யாழ். நடராசன், ஒன்றியச் செயலாளர் விசு, ஒன்றிய பொருளாளர் அரிதாசு, மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர் சு.சிவானந்தம், காரத்தொழவு மயில்சாமி, கடத்தூர் காந்தி, கதிரவன், அய்யப்பன், ஜோத்தம்பட்டி மோகன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னையில் கழக சுவரொட்டி




## ராமன் பாலம் புரட்டு: ஆதாரங்களுடன் அம்பலம்

*மணல் திட்டுகளை ராமனின் பாலம் என்று சுப்ரமணிய சாமிகள் வாதாடுவதும் அதற்கு உச்சநீதிமன்றங்கள் தலையாட்டும் போக்கும் நிலவும் நேரத்தில் – ராமன் பாலம் என்ற புரட்டை பல்வேறு ஆதாரங்களுடன் விளக்குகிறார், ஆய்வாளரும் தமிழ்நாடு உயர்கல்வி மாமன்றத்தின் துணைத் தலைவருமான பேராசிரியர் ராமசாமி.*

பாலம் என்று குறிப்பிடும் இந்த மணல் திட்டு அங்கங்கே இடைவெளி விட்டு விட்டு 32200 மீட்டர் நீளத்துக்கு உள்ளது. இது நிரந்தரமான மணல் திட்டு அல்ல. அவ்வப்போது மாறும் தன்மையுடைய மணல் திட்டு ஆகும். இதில் 300 மீட்டர் தொலைவுக்கு சேதுக் கால்வாய் அமைப்பதால் யாருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. தமிழகத்துக்கும் இலங்கைக்கும் சேதுப் பாலம் இருந்ததாக 8 ஆம் நூற்றாண்டிலேயே இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. ராஜராஜ சோழனின் கல்வெட்டு, செப்பேடுகளிலும் அத்தகைய பாலம் இருந்தது குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், 17 லட்ச ஆண்டுகளுக்கு முன் அயோத்தியைத் தலைநகராகக் கொண்டு ராமர் ஆட்சி செய்தார் என்றும், அவர் தென் பகுதிக்கு வந்து பாலம் அமைத்து இலங்கை சென்றார் என்றும், புராணங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் வரலாற்று மேதை கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் கி.மு. 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வரலாற்றுக்கு முந்தைய காலமான கற்காலம் இருந்தது என்று குறிப்பிடுகிறார். இத்தகைய கருத்தை நிலவியல் அறிஞர் டி.என். வாடியா, வரலாற்றுப் பேராசிரியர்கள் வின்சென்ட் ஸ்மித், வாஷ்பர்ன் ஹாப்கின்ஸ், எச்.சி.ராய் சவுத்ரி ஆகியோரும் தெரிவித்துள்ளனர். இப்போதுள்ள உருவ அமைப்புகளில் மனிதன் தோன்றியதே பத்தாயிரம் வருடங்களுக்கு முன்பு தான்.

‘எ ஹிஸ்டரி ஆஃப் ஸ்ரீலங்கா’ என்ற நூலில் வரலாற்றாளர் கே.எம்.டி. சில்வா, ‘9 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்திய துணைக் கண்டத்திலிருந்து இலங்கை தனியாகப் பிரிந்தது’ என்கிறார்.

இந்தியாவிலிருந்து இலங்கை பிரிந்த பிறகு இடையில் உள்ள மிச்ச சொச்ச நிலத்தொடர்புதான் தனுஷ்கோடிக்கும், தலை மன்னாருக்கும் இடையில் உள்ள மணல், கற்கள் நிறைந்த மணல் திட்டு ஆகும். இது ஒரே நேர்க்கோடாக இருந்ததில்லை. கடல் நீரோட்டத்துக்கேற்ப மாறிக் கொண்டே இருக்கிறது. இதை ‘மேனுவல் ஆஃப் தி அட்மினிஸ்ட்ரேஷன் ஆஃப் தி மெட்ராஸ் ப்ரெசிடென்சி (வால்யூம் 21)’ நூல் குறிப்பிடுகிறது.

கி.பி.1765-ல் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியில் ராபர்ட் பாக் என்பவர், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கடல் பகுதியை அளவை செய்யும்படி உத்தரவிட்டார். அப்போது, நிலவியல் அளவையாளராக ஜார்ஜ் ஆடம் என்பவர் பணியாற்றினார். அங்குள்ள மணல் திட்டு, அவரது பெயரில்தான் ஆடம்பிரிட்ஜ் என அழைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

அப்பகுதி இயற்கையானதா, செயற்கையாகக் கட்டப்பட்ட பாலமா என்ற கேள்வி இன்று நேற்றல்ல, 200 ஆண்டுகளுக்கு முன்பே எழுப்பப்பட்டதுதான்.

ஜெர்மனி ஜீனா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜோன்ஸ் வால்டர் என்ற பேராசிரியர்தான் கள ஆய்வு செய்தார். அவர் வெளியிட்ட கட்டுரையில், மணல், மணல் கற்களால் அடித்து வரப்பட்டதையும் பல அடுக்குகளாகத் தங்கித் தங்கி திட்டுகள் உருவானதையும் கடலுக்கு வெயில் தெரிந்தும் தெரியாமல் இருந்ததையும் இடையிடையே கடல் நீரோட்டத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றையெல்லாம்விட பண்டைய தமிழ் மன்னர்கள் இலங்கைக்குத் தரை வழியாக (சேது பாலம்) சென்றதாகத் தகவல் இல்லை. மாறாக, கப்பலில்தான் அவர்கள் சென்றிருக்கிறார்கள். தமிழ் மன்னர்களுடன் போரிட்ட சிங்களப் படையினரும் அவ்வாறே கப்பலில்தான் வந்திருக்கிறார்கள்.

இவை ஒருபுறம் இருக்க, அப்பகுதியில் கப்பல் போக்குவரத்து செல்வதால் ஏற்படும் நன்மையை வரலாற்று மேதை கே.கே. பிள்ளை தனது ‘சௌத் இந்தியா அண்ட் ஸ்ரீலங்கா’ என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே, சேதுக் கால்வாய்த் திட்டம் யாருக்கும் எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படுத்தாது என்று பேராசிரியர் ராமசாமி கூறினார்.

# மத்திய அமைச்சர் ஆ. இராசா ஆய்வுரை (5)

# நாட்டையும் – மக்களையும் பிளவுபடுத்திய பார்ப்பனியம்

*22.2.2008 அன்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பெரியார் உயராய்வு மையமும், மகளிரியல் துறையும் இணைந்து நடத்திய ‘பெரியார் அம்பேத்கர்: இன்றைய பொருத்தப்பாடு’ என்ற தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவில் பங்கேற்று மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப துறை அமைச்சர் ஆ. இராசா ஆற்றிய உரையின் தொடர்ச்சி:*

சுதந்திரம் என்பது வெள்ளைக்காரர்கள் கொள்ளைக்கார பிராமணர்களுக்கு எழுதிக் கொடுத்த மேட் ஓவர். நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்றார். இதைச் சொல்கிறபோது 1947. ஆனால் இது 1937, 39-லேயே அம்பேத்கருக்கு ஒரு சங்கடம் வருகிறது. இரண்டாம் உலகப்போர் வந்தபோது அந்த இரண்டாம் உலகப்போரில் வின்சென்ட் சர்ச்சில் இங்கிலாந்தினுடைய பிரதமர். நம்முடைய நாடு அவருக்குக் கீழே இருக்கிறது. அவர் ஹிட்லரை எதிர்க்க வேண்டுமென்பதற்காக இந்தியத் துருப்புகளைப் பயன்படுத்துகிறார். யாருக்கு எதிராக? நாஜிப் படைகளுக்கு எதிராக. ஹிட்லருக்கு எதிராக இந்தியாவினுடைய துருப்புகளை அவர் பயன்படுத்துகிற பொழுது, காந்தி ஒரு கேள்வியை வைக்கிறார் காங்கிரஸ் சார்பில். என்ன கேள்வி என்றால், “வின்சென்ட் சர்ச்சில் அவர்களே, உங்களுக்கு எதிரி ஹிட்லர், எங்களுக்கு அல்ல. இந்தப் போரில் எங்களுடைய சிப்பாய்களை, எங்களுடைய துருப்புகளை, எங்களுடைய ஆயுதங்களை நீங்கள் பயன்படுத்தப் போகிறீர்கள். இந்த வெற்றிக்குப் பின்னால் எங்களுக்குக் கிடைக்கப் போவது என்ன?” என்று கேட்கிறார், What will be the benefit after the war, having deployed our soldiers? இது காந்தி வைக்கிற கேள்வி. காந்திக்கு வின்சென்ட் சர்ச்சில் ரொம்ப அமைதியாக பதில் சொன்னார்: To restore traditional Britain நான் என்னுடைய மரபு மிக்க தொன்மைமிக்க பெருமை மிக்க பிரிட்டனை நான் மீண்டும் பெறுவதற்காகத் தான் போராடப் போகிறேன். எவ்வளவு பெரிய கொழுப்பு? காந்தியாருக்குக் கோபம். என்னுடைய சகோதரன் இரத்தம் இழக்கிறான். என்னுடைய சகோதரன் வாழ்வை இழக்கப் போகிறான். குற்றுயிரும், குலை உயிருமாக இளம் மனைவிகளை இழக்கப் போகிற கணவனை என் கண்ணெதிரிலே பார்க்கிறேன். ஆனால் நீ சொல்லுகிறாய், To restore traditional Briton உன்னுடைய சிப்பாய்களை நான் கொல்லப் போகிறேன் என்று சொன்னால் இது உனக்குத் திமிரல்லவா என்று கேட்கிறார். இது யங் இண்டியாவில் வருகிறது.

அடுத்த நாள் அம்பேத்கர் கேட்கிறார். Yes, the question that was asked by Mr. Gandhi is legitimate. காந்தி கேட்கிற கேள்வி ரொம்ப நியாயமான கேள்வி. ஆனால், திரும்ப நான் கேட்கிறேன் காந்தியை. வின்சென்ட் சர்ச்சிலுக்கு சிப்பாயை அனுப்பிவிட்டு என்ன பயன் என்று கேட்கிறாயே? நான் கேட்கிறேன், இந்தியாவிற்கு சுதந்திரம் வேண்டுமென்று நீ கேட்கிறாயே, அந்த சுதந்திரத்திற்குப் பின்னால் எனக்கும் பிற்படுத்தப்பட்டவனுக்கும் பற, பள்ளனுக்கும் என்ன கிடைக்கப் போகிறது? What will be the social order after independence since you are fighting for independence? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு நீ அவனுக்குக் கேள் என்று அம்பேத்கர் கேட்ட போதுதான் காந்தி தடுமாறிப் போனார். இது வரலாறு. இதைத் தான் தந்தை பெரியார் வெள்ளைக்காரர்கள் கொள்ளைக்கார பிராமணர்களுக்கு எழுதிக் கொடுத்த மேட் ஓவர் என்று சுதந்திரத்தைச் சொல்கிறார்.

ஆக, இந்துயிசம் என்பதும்,இந்துயிசத்தினுடைய தத்துவம் என்பதும் இந்தியாவினுடைய இறையாண்மைக்கு ஊறு விளைவித்தது. இந்தியாவினுடைய சுதந்திரத்திற்குத் தடங்கலை ஏற்படுத்தியது. இதிலே பெரியாரையும், அம்பேத்கரையும் தனிப்பட்ட முறையில் குறை சொல்லிப் பிரயோசனம் கிடையாது. இன்னொன்றையும் நான் சொல்ல வேண்டும். அய்யா பெரியார் சொல்லியிருக்கிறார். கடைசியாக 1973-லே அவர் பேசும் போது சொல்லுகிறார்: இங்கு பிராமணியம்தான், இந்த இந்து மதத் தத்துவம்தான் இந்தியாவைப் பங்கு போட்டது, மக்களைப் பங்கு போட்டது, பிளவுபடுத்தியது.

உண்மை பல பேருக்குத் தெரியாது. 1940 வரைக்கும் ஜின்னா பாகிஸ்தான் கேட்கவில்லை. காங்கிரசுல என்னைக்கு 1906-லே ஒரு முதல் மாநாடு பாலகங்காதர திலகர் தலைமையிலே நடந்த பொழுது அவர் தான் மூஞ்செலி பிரச்சினையைக் கொண்டு வருகிறார். பிளேக் நோயால் பாதிக்கப்பட்டபோது வெள்ளைக்காரர்கள் எலியைக் கொல்லுகிறார் கள். எலியைக் கொல்லு கிறபொழுது பால கங்காதர திலகர், இது விநாயகனுடைய வாகனம். இதைக் கொல்லாதேன்னு சொல்றார். ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்ப சேது சமுத்திரத் திட்டம் ஏன் நிக்குது?



நான் அடிக்கடி சொல்லுவேன், ஒரு பெரிய நிகழ்ச்சியில் சென்னையில் சொன்னேன். என்னுடைய வீட்டில் என்னுடைய தாய் தந்தையர் என்னுடைய தாத்தா இன்னமும் சிவன் படத்தை மாட்டி வச்சிருக்காங்க. சிவன் தலையில் நிலா இருக்கு. நானும் நம்பினேன். சிவனுடைய தலையில் தான் நிலா இருக்கிறதென்று. நம்புவதில் தவறில்லை. நான் அதன் குறுக்கே வரவில்லை. இறை நம்பிக்கை தவறென்று சொல்லுகிறவனல்ல. நான் எப்போதும் திரும்பத் திரும்பச் சொல்லுவேன். உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன், கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனியமையும் குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தா நின் குறைகளற்கே கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே என்று பாடினால் பாடிவிட்டுப்போ, உனக்கு எதாவது வந்தால் போதும். ஆனால் அது எனக்கு உடன்பாடல்ல. ஊர் வேணாம், உற்றார் வேணாம், அண்ணன் தம்பி வேணாம், நீ மட்டும் இருந்தால் போதும்னா, அப்பறம் ஏன் நீ சமூகத்தில வாழ்றே? அதுதான் எனக்குக் கேள்வி. தெய்வ நம்பிக்கை இருந்துவிட்டுப் போகட்டும். எனக்குப் பிரச்சினை இல்லாது இருக்கிறவரை. அதே போல நீ அரங்கப் பெருமாளைப் பாடு. எதை வேண்டுமானாலும் பாடு. ஆனால் கடவுள் என்னுடைய உரிமைக்குக் குறுக்கே வருகிறபோதுதான் எங்களுக்குப் பிரச்சினை.

ஆக, சிவன் தலையிலே நிலா இருக்கிறது என்பது நம்பிக்கை. நானும் நம்பினேன் ஒரு காலத்தில். என்னுடைய தந்தை நம்பினார், என்னுடைய தாத்தா நம்பினார், என்னுடைய பாட்டன், பூட்டன் எல்லோரும் நம்பினார்கள். ஆனால் குறைந்தபட்சம் 1969 இல் ஆம்ஸ்ட்ராங் போய் நிலாவில் காலடி வைத்ததற்குப் பிறகு என்ன கதி? ஒரு வகுப்பிலே மாணவன் இருக்கிறான், தமிழாசிரியர் வருகிறார் முதல் வகுப்பில், பித்தா பிறை சூடி பெருமானேன்னாரு. பெரிய புராணப் பாட்டு. தமிழாசிரியர் இருந்தா தெரியும். பித்தா பிறை சூடிப் பெருமானேன்னா, நிலாவைத் தலையில் வைத்திருக்கிற பெருமானே வணக்கம்ங்கறாரு. முடிச்சர்றாரு. ரொம்ப நல்லா கேட்டுக்கிட்டு இருந்தான் பையன். மணியடித்தது. அறிவியல் ஆசிரியர் வந்தார். 1969 ஆம் ஆண்டு ஆம்ஸ்ட்ராங் நிலாவில் கால் வைத்தார்னாரு. அவர் சொல்கிறார்: இந்த புத்திசாலி மாணவன் கேட்டான், சிவன் தலையிலயா அவரு கால் வச்சாருன்னு கேட்டான். ஆக, சிவனுடைய தலையிலே நிலா இருக்கிறது என்பது நம்பிக்கை. ஆனால் ஆம்ஸ்ட்ராங் கால்வைத்துவிட்டான் என்பது அறிவியல். அறிவியல் வருகிறபோது நம்பிக்கை நகர்ந்து வழிவிட வேண்டும். நகர்ந்து விழவிடாத காரணத்தினால் சேது சமுத்திரம் நிற்கிறது. நம்பிக்கையா? அறிவியலா? இந்த நம்பிக்கையைச் சொல்லுகிறபோது, ஒரு கால கட்டத்தில் இந்தியாவைத் துண்டாடுவதற்குக் காரணமாக இருந்தது இந்த இந்துமத நம்பிக்கை தான். 1946 இல் கிளமெண்ட் அட்லிடங்கறவர் இங்கிலாந்துக்குப் பிரதமர். கிளமெண்ட் அட்லி என்ன பண்றார், இந்தியாவுக்குச் சுதந்திரம் எப்படித் தர வேண்டும் என்பதற்காக மூன்று பேரைக் கூப்பிடுகிறார். காங்கிரசுல இருந்து ஒருத்தர், முஸ்லீம் லீக்ல இருந்து ஒருத்தர், Princely States - சமஸ்தானங்களுக்கு ஒரு ரெப்ரசன்டேட்டிவ். இந்த மூணு பேர் போனார்கள். காங்கிரஸ் சார்பில் போனவர் அப்துல் கலாம் ஆசாத், முஸ்லீம். முஸ்லீம் லீக் சார்பாகப் போனவர் ஜின்னா, அவர் ஒரு முஸ்லீம். சமஸ்தானங்களின் சார்பாகப் போனவர் நவாப் ஆஃப், பீகார். இந்தியாவுக்குச் சுதந்திரம் வேணும்னு போனது மூணு முஸ்லீம். இந்துக்கள் அல்ல. ஆனாலும் இந்த நாடு பிரிவினைக்கு காரணம், ஜின்னாகிட்ட கேட்டாங்க, ஏம்ப்பா நாடு கேக்குறேன்னு கேட்டாங்க.

அவர் ஜுலியஸ் சீசர் நாடகம் தெரியுமான்னு கேட்டார். காந்திய நம்புங்கன்னு சொன்னப்ப அவர் சொன்னார், காந்தியை நான் நம்புகிறேன், ஆனால் காந்தியினுடைய இராமராஜ்யத்தை என்னால் நம்ப முடியாது. அவர் சொன்னார், புரூட்டஸ் சொல்லுவான் அந்த நாடகத்துல, Not that I love Ceaser less, but I love my country more. ஜுலியஸ் சீசரை கடைசியா புரூட்டஸ் குத்துகிறான். புரூட்டஸ் குத்துனதுக்குப் பிறகு சீசர் கேப்பான், “அய்யோ நண்பா நீயுமா குத்துனன்னு” கேப்பான். புரூட்டஸ் சொல்றான், “நண்பா உன்னை நான் நேசித்தது உண்மைதான், என்ன செய்வது உன்னைக் காட்டிலும் இந்த நாட்டைக் கூடுதலாக நேசித்து விட்டேன்”.

அது மாதிரி ஜின்னா சொன்னார், Not that I love Ceaser less, but I love my country more - காந்தியை எனக்குத் தெரியும், நேசிக்கிறேன். ஆனால் காந்தி வைத்திருக்கிறாரே இராமராஜ்ஜியம், அது ஜாதிய இராஜ்ஜியம், இந்த நாடு உருப்படாது. அதனால என்ன வெளிய விடுன்னாரு. ஆக, இந்த நாட்டைத் துண்டாடியது இந்துத்துவா, மறந்து விடாதீர்கள். ஆக, நாட்டினுடைய அரசியலிலிருந்து, சமூகத்திலிருந்து வருகிற வழியெங்கும் இந்த மண்ணிலே எல்லாவற்றிற்கும் நீங்கள் அரசியலைப் பார்த்தால், வெள்ளைக்காரர்கள் Untouchability Abolition Act, 1857 லிலேயே கொண்டு வந்தாங்க. அதுக்கு நேரடியா சொல்லல. Removal of disabilities act என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்த மண்ணில் நரபலியை ஒழித்தது வெள்ளைக்காரர்கள். உடன் கட்டை ஏறுவதை ஒழித்தது வெள்ளைக்காரர்கள். கைம்பெண் மறுமணத்தை கூடாது என்பதைத் தடை செய்தவர்கள் வெள்ளைக்காரர்கள். இப்படி எத்தனையோ சமூகக் கொடுமைகளை ஏற்றுக் கொள்ள முடியாமல் வெள்ளைக்காரர்கள் சட்டம் கொண்டு வந்தார்கள். ஆனால் இந்த சட்டத்தை கொண்டு வருகிறபோதெல்லாம், எதிர்ப்புத் தெரிவித்த இயக்கமாகவும், எதிர்ப்பு தெரிவித்த தலைவர்களாகவும் காங்கிரஸ்காரர்களும், காங்கிரசினுடைய தலைவர்களும் இருந்தார்கள் என்பது தான் மறுக்க முடியாத உண்மை.

எனவே அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இந்த இரண்டு வெவ்வேறு தலைவர்களையும் நாம் வெவ்வேறு தளங்களிலே பார்க்கிறபோது ஓர் ஒற்றுமை தெரிகிறது. பெரியார் இந்தியாவினுடைய சுதந்திரம் வேணான்னு சொன்னதற்கும், வின்சென்ட் சர்ச்சில் கிட்ட காந்தி பேசினபோது அம்பேத்கர் அது வேணான்னு சொல்றதுக்கும் என்ன காரணம்? இந்த சமூக அமைப்பு, இந்த சமூக அமைப்பை இந்துத்துவா சமூகம் எப்படி மாற்றியிருக்கிறது என்பதனால்தான். இதைவிட இன்னொன்று 1916-லேயே பெரியாருக்கு முன்பாகவே, இங்கே அவர் பேசினாரே கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அறிக்கை. ஒவ்வொரு தலைவர்களுக்கும் ஒரு அடையாளம் இருக்கிறது. மார்ட்டின் லூதர்கிங் என்று சொன்னால் March to Washington என்று சொல்வார்கள். ஒரு அடையாளம். மார்டின் லூதர் கிங் கடைசியா சொன்னது அதுதான். மார்ச் டு வாசிங்டன். அங்கே நான் உங்களுக்கு விடுதலை வாங்கித் தருகிறேன். ஆக, மார்டின் லூதர் கிங்னா மார்ச் டு வாசிங்டன். கம்யூனிஸ்ட் இயக்கத்தினுடைய தலைவர்கள் என்று சொன்னால் 1948-லே Manifesto of Communist Party. அதே மாதிரி இந்த Non-brahmin movement அல்லது இந்துத்துவத்திற்கு எதிரான சங்கதிகள் என்று வருகிறபோது 1916-லேயே பிராமணரல்லாதார் அறிக்கையிலே மிகத் தெளிவாக இருக்கிறது:

“நாங்கள் வெள்ளைக்காரர்களுக்கு விசுவாசிகள். அவர்களால் தான் எங்களுக்கு ஓரளாவது கல்வியும், சுகாதாரமும், மனித உரிமையும் இங்கே தரப்படுகிறது” என்பதை 1916-லேயே நம்முடைய அறிக்கை மிகத் தெளிவாகச் சொன்னது. ஆக, இந்திய நாட்டினுடைய பிரிவினைக்குக் காரணம் இதுதான். இந்தியாவினுடைய சாதி ஏற்றத் தாழ்வுக்கு இதுதான் காரணம். இப்படிப்பட்ட மோதல்கள் உள்ள ஓர் இடத்தில், இப்படிப்பட்ட சமூக ஏற்றத்தாழ்வுகள் இருக்கிற ஓர் இடத்தில் தீர்வாக தந்தை பெரியாரும் அம்பேத்கரும் எதை முன் வைக்கிறார்கள் என்றால், நான் முன்னமே சொன்னதை போல இது ஒழிய வேண்டுமென்று சொன்னால், இந்த நிறுவனம் இன்ஸ்டிடியூஷன் இந்து மதம் என்கின்ற நிறுவனம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான், இந்து மதம் ஒரு நிறுவனம். கண்ணுக்குத் தெரியல அவ்வளவுதான். பாரதிதாசன் யூனிவர்சிட்டி ஒரு நிறுவனம் கண்ணுக்குத் தெரியுது. ஆனால், ஒரு கிராமத்திற்குப் போய் ஆதி திராவிடர் தெருவில் இருக்கிறவன் ஒரு வன்னியத் தெருவில், அல்லது வன்னியர் தெருவில் இருக்கிறவன் ஒரு ரெட்டியார் தெருவில் இன்றைக்கும் வீட்டிற்குப் போக முடியாது. குடியிருக்க முடியாது. அல்லது இன்றைக்கும் வீடு வாடகைக்குப் போக முடியாது. சொந்தமாக இடம் வாங்க முடியாது என்று சொன்னால் கண்ணுக்கு தெரியாத ஒரு நிறுவனம் இருக்கிறது. எக்கனாமிக் புரபசர், ஹிஸ்டரி புரபசரா மாற முடியாது. இது இன்ஸ்டியூஷன். தெரியுது. உங்களுக்கு எக்கனாமிக் புரபசருக்குப் பதிலா ஹிஸ்டரி புரபசர் வந்தா நீ ஏன் வந்த? இன்னக்கி ஹிஸ்டரி வகுப்பு இல்லையேன்னு சொல்றிங்க. It is institution, ஆனா அங்க கண்ணுக்குத் தெரியாத ஒரு நிறுவனம் இருக்கிற காரணத் தினாலே தான் அந்த நிறுவனத்தைத் தகர்க்க வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு ஏற்பட்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதனால் தான் தந்தை பெரியார் அவர்கள், அவர்மீது தேசத் துரோகி எனப் பட்டம் சூட்டப்பட்டபோது, மிகத் தெளி வான ஒரு விளக்கத்தைத் தந்தார். என்ன விளக்கம்?

(தொடரும்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# நடிகவேள் நடத்திய நாடகப் புரட்சி

*(பெரியார் கருத்துகளை நாடகத்தின் வழியாகப் பரப்ப நடிகவேள் எம்.ஆர்.ராதா கடும் சவால்களை எதிர்கொண்ட வரலாறுகளை விளக்குகிறது இக் கட்டுரை. தோழர் மனா தொகுத்துள்ள "எம்.ஆர். ராதா, காலத்தின் கலைஞன்" நூலில் இடம் பெற்றுள்ள ஒரு பகுதி)*

1942-க்குப் பிறகு மறுபடியும் நாடக மேடைக்கே திரும்பினார் நடிகவேள் எம்.ஆர்.ராதா. பொன்னுச்சாமி பிள்ளை கம்பெனியில் சேர்ந்து நடிக்க ஆரம்பித்தார். இழந்த காதல் நாடகத்தில் அவருடைய சவுக்கடிக் காட்சிக்குத் தனிப் பெயர் கிடைத்தது. சிவாஜி பெண் வேடத்தில் நடித்த இந்த நாடகம் வெள்ளித் திரை தரத் தவறிய புகழைத் தந்தது. அண்ணா உட்படப் பலர் பாராட்டினார்கள். பெரியாரும், சம்பத்தும் வந்து மனப்பூர்வமாக வாழ்த்தினார்கள். பெரியாருடன் தொடர்பு கூடியது. 'திராவிட மறுமலர்ச்சி நாடக சபா' என்கிற பெயருடன் இயங்க ஆரம்பித்தார் ராதா.

"சுயமரியாதைக் கருத்துக்களை நான் ஆராய ஆரம்பித்த சில ஆண்டுகளிலேயே முழுவதும் அதன் வசமாகி விட்டேன்" என்று ராதாவே உணர்வுடன் சொல்லுமளவுக்கு திராவிட இயக்கக் கருத்துக்கள் அவருடைய நாடகங்களில் வெளிப்பட்டன.

விமலா அல்லது விதவையின் கண்ணீர் துவங்கி, லட்சுமி காந்தன், போர் வாள், தூக்கு மேடை, ராமாயணம், ரத்தக் கண்ணீர், தசாவ தாரம், கதம்பம் என்று பல நாடகங் களை அரங்கேற்றி னார். கலைஞர் கருணாநிதி, சி.பி. சிற்றரசு, திருவாரூர் தங்கராசு, குத்தூசி குருசாமி என்று பலர் இவருடைய நாடகங்களுக்கான வசனங்களை எழுதினார்கள். ஒவ்வொரு முறையும் இந்த நாடகங்கள் நிகழ்த்தப்படும் போதும்,



அன்றைக்குள்ள சமூக, அரசியல் குறித்த செய்திகள் நாடகத்தில் அலசப்படு வதின் மூலம் அந்த நாடகங்களுக்குச் சம காலத்திய அந்தஸ்து கிடைத்தது.

"பெரியார் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகிறாயே, அவர் என்னத்தைச் சாதிச்சார்?"

"உன் நெற்றியும், என் நெற்றியும் எந்தக் கோடும் இல்லாமல் சுத்தமாக இருக்கிறதே; இதற்குக் காரணம் பெரியார்தாம்ப்பா..." என்று ஒரு காட்சியிலும் கலைஞர் கருணாநிதியுடன் நடித்துக் கொண்டிருக்கும் போது "தளபதி தளபதி என்கிறீர்களே அண்ணா துரை எத்தனை போர்க்களங்களைச் சந்தித்தார்?" என்றும் கேட்பதற்கான துணிவு ராதாவிடம் இருந்தது. சில சாதிச் சின்னங்களைக் குறித்து -

"ஏம்ப்பா... நீ நெற்றியில் போட்டிருக்கியே... டபுள் ஒயிட். சிங்கிள் ரெட். அது என்னப்பா?"

"அது திருப்பதி வெங்கடாசலபதியின் பாதம்".

"சரி... திருப்பதி வெங்கடாசலபதியின் நெற்றியிலே இருக்கே ஒரு நாமம்... அது யார் பாதம்? என் பாதமா?" என்றெல்லாம் ராதா நாடகத்தில் பேசும் வசனங்கள் அந்தக் காலகட்டத்தில் எழுப்பிய அதிர்வுகள் அதிகம்.

1954 டிசம்பர் 11, 12 தேதிகளில் ராமாயணம் நாடகத்திற்குத் தடை விதிக்கப்பட்டபோது திருச்சியில் உள்ள தேவர் மன்றத்தில் "வராதே. என் நாடகத்தால் மனம் புண்படும் என்று கருதுகிறவர்கள் எவராயிருந்தாலும் அவர் எம்மதத்தினராக இருந்தாலும், அவர்கள் கண்டிப்பாய் வர வேண்டாம். அவர்கள் காசும் எனக்கு வேண்டாம். மீறி வந்து பார்த்தால் அவர்கள் மனம் புண்பட்டால் அதற்கு நான் ஜவாப்தாரியல்ல என்பதைக் கண்டிப்பாய் அறியவும். எம்.ஆர். ராதா." என்று தட்டியிலும், நோட்டீசிலும் விளம்பரம் செய்வதற்குப் பின்னுள்ள உணர்வைப் பற்றி ராதாவே (1964) இப்படிச் சொல்லியிருக்கிறார்.

"இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு சுயமரியாதைக் கொள்கைகளை நாடகங்களில் புகுத்தி நடிப்பதென்பது அத்தனை சுலபமான வேலையல்ல."

1946-ல் சென்னையில் போர்வாள் நாடகத்தை ராதா நடத்த முயன்ற போது அதற்குத் தடை, பிரகாசம் தலைமையிலான அரசிடமிருந்து, உடனே பெயரை மாற்றிச் சில காட்சிகளை மாற்றி அதே நாடகத்தை சர்வாதிகாரி, மகாத்மா தொண்டன், சுந்தர லீலா என்கிற பெயர்களில் நடத்தினார்.

மதுரையில் 1946 இல் நடந்த திராவிடர் கழக மாநாட்டுப் பந்தலில் தீ வைக்கப்பட்டபோது ராதா தங்கியிருந்த வீட்டிலும் தாக்குதல் நடந்தது. ஏழு வருடங்களுக்குப் பின் திரும்பவும் மதுரையில் ராமாயணம் நாடகம் நடத்தியபோது கலவரமானது. திருச்சி, குடந்தையிலும் இதே மாதிரியான கலாட்டாக்கள். அவருடைய நாடகப் படுதாவில் காட்டப்படும் 'உலகப் பாட்டாளி மக்களே ஒன்று சேருங்கள்' என்கிற வாசகத்திற்கும், அரிவாள் சுத்தியல் சின்னத்திற்கும்கூட எதிர்ப்பு வலுத்தது. கோவையில் நாடகம் நடத்தும்போது உருவான கலவரச் சூழலில் "உயிருக்குத் துணிந்தவர்கள் மட்டும் நாடகம் பார்க்க வரலாம்" என்று ராதாவே மைக்கில் அறிவிக்கும்படி ஆனது. கும்பகோணத்தில் தடையை மீறி ராமாயணம் நாடகத்தை நடத்திய ராதா ராமர் வேடத்துடனேயே கைது செய்யப்பட்டார்,.

நாடகத் தடைச் சட்டம் உருவாக்கப்பட்டு ராதாவின் நாடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டு காமராஜர் ஆட்சியில் மட்டும் ராதா கைது செய்யப்பட்டது 52 தடவைகள். தென்னிந்திய நடிகர் சங்கம் இதற்கு எதிராகக் குரல் கொடுக்கவில்லை என்கிற ஆதங்கம் ராதாவிடம் இருந்திருக்கிறது.

நிகழ்த்தப்பட்ட போதெல்லாம் பரபரப்பை ஏற்படுத்திய ராமாயணம் நாடகம் ராமனை உயர்த்திப் பிடிப்பதற்கு எதிராக சீதை மற்றும் அவர்களுடைய குழந்தைகளான லவன், குசனின் பார்வையிலிருந்து ராமனைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

"எங்கே எங்கே நீதி
ராமன் வாழ்விலே
ராமராஜ்யம் தன்னிலே. அது
அன்றும் இல்லை
இன்றும் இல்லை என்றே சொல்வீர்:
தெய்வம் ஆவானோ ராமன்"

"அநீதியிதே" என்று லவகுசர்கள் பாடுவதான பாடலுடன் முடிகிறது ராதா நடித்த 'ராமாயணம்' நாடகம்.

தனக்கு ஒரு சிலை வைத்து அதில் காறித் துப்புங்கள் என்கிறபடி முடியும் ரத்தக் கண்ணீர் நாடகம்.

8.4.1959 அன்று நடிகர், நடிகைகள் அஞ்சலி தேவி தலைமையில் ஆந்திர முதல்வர் சஞ்சீவ ரெட்டியைச் சந்தித்து 'இந்து நேசன்', 'கலைநேசன்' போன்ற மஞ்சள் பத்திரிகைகளுக்குத் தடை விதிக்கக் கோரிய போதும் ('நடிகன் குரல்' இதழ் 1959 மே) 'இந்து நேசன்' பத்திரிகையை நடத்தி வந்த லட்சுமி காந்தன் சென்னை புரசைவாக்கத்தில் ரிக்ஷாவில் செல்லும் போது கொலை செய்யப்பட்டு 1944 செப்டம்பர் 27 அன்று தியாகராஜ பாகவதரும், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனும் சிறைக்குச் சென்ற நிலையில் லட்சுமி காந்தனின் மறைவுக்கு மக்கள் வருந்துவதாக நாடகம் முடிந்தாலும், சிறையில் பாகவதரும், கலைவாணரும் வாடுவதையும், விடுதலை ஆக வேண்டும் என்பதையும் நாடகத்தில் காட்டியிருந்தார் ராதா. 'லட்சுமி காந்தன்' என்கிற தலைப்பில் 760 தடவை ராதா மேடையேற்றியிருப்பது சமூக மதிப்பீடுகளுக்கும் போர்த்தப்பட்டிருக்கும் மதிப்பீடுகளுக்கும் எதிரான விமர்சனக் குரல். தனக்கு ஏற்படுகிற சரிவுகளையோ, இழப்புகளையோ, எதிர்ப்புகளையோ பொருட்படுத்தாமல் கலகக் குரலாக வெளிப்படுத்தியதுதான் ராதாவுக்கான தனி அடையாளம்.

இந்தத் தனித்துவம்தான் - "இந்தத் தாழ்ந்த தமிழகத்தைத் தலை தூக்கி நிறுத்த நூறு திராவிடர் கழக மாநாடுகள் நடப்பதும் ஒன்று. ஒரேயொரு எம்.ஆர்.ராதா நாடகம் நடப்பதும் ஒன்று" என்று அண்ணாவைச் சொல்ல வைத்திருக்கிறது.

*முதல் பக்கத் தொடர்ச்சி*

நோட்டில் பதிவு செய்வது என்பதை எல்லாம் தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள் சுதந்திரமாகச் செய்ய முடியவில்லை.

சிவகங்கை மாவட்டத்தில் அவர்களது நிலை மிகவும் மோசமாக உள்ளது. துணைப் பஞ்சாயத்துத் தலைவர்களும் பஞ்சாயத்து எழுத்தர்களும், பஞ்சாயத்துத் தலைவர்களை தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைத்து அடிமைகள் போல் நடத்துகின்றனர்.

சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம் புணரி யூனியனில் உள்ள ஒரு பஞ்சாயத்தில் "அனைவருக்கும் கல்வி" திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட நிதி உதவியில் பள்ளிக்கூடம் கட்டுவதற்கான வேலையில் ஈடுபட்ட தலித் ஊராட்சித் தலைவிக்கு முன்னாள் தலைவரால் பல தடைகள் ஏற்பட்டுள்ளன. இதைத் தவிர பால் ரீதியான துன்புறுத்தல்களையும், பஞ்சாயத்து தலைவிகள் சந்திக்க வேண்டியுள்ளது. பலர் பஞ்சாயத்து அலுவலகத்திற்குள்ளே செருப்பு அணிந்து போக முடியவில்லை. ஜாதி இந்துக்கள் பஞ்சாயத்து அலுவலகத்திற்குள் வரும்போது எழுந்து நின்று கை கூப்பி வணக்கம் ொசால்ல வேண்டிய கட்டாயம் உள்ளது. பஞ்சாயத்துத் தலைவருக்கு பலவகையான மிரட்டல்களும் வருகின்றன. இவற்றைக் குறித்து புகார் செய்தால் காவல் துறை அதன் மேல் விரைவில் நடவடிக்கை எடுப்பதுமில்லை. புகார் கொடுப்பதற்கே பலரும் பயப்படுகிறார்கள். மதுரை மாவட்டத்தில் ஆய்வுக்கு எடுக்கப்பட்ட 83 கிராமங்களில் 16 கிராமங்களில் தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளன. 3 இல் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. 1 இல் சமரசமாகிவிட்டது. மீதி 9 இல் இன்னும் மேல் நடவடிக்கை நிலுவையில் உள்ளது.

எவிடன்ஸ் அமைப்பு வெளிக் கொணர்ந்துள்ள செய்திகளும் பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்களது பிரமாண வாக்குமூலங்களில் சுட்டிக் காட்டியுள்ள நிலையும், விடுதலை பெற்று 60 ஆண்டுகளுக்குப் பிறகும் இருப்பதைக் கண்டு நாம் மிகவும் வெட்கப்பட வேண்டும்; வேதனைப்பட வேண்டும். தலைகுனிய வேண்டும். இந்த நிலை தொடர்வது நாட்டிற்கும் நல்லதல்ல. நமது அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்றும்போது "மக்களாகிய நாம்" தனி மனிதனின் கண்ணியத்தையும் நாட்டின் ஒற்றுமையையும், கட்டிக் காப்பாற்றி நிலை நிறுத்த, அந்த சட்டத்தை இயற்றியிருக்கிறோம் என்று கூறியுள்ளோம். லட்சக்கணக்கான தலித் மக்களின் கண்ணியம் காப்பாற்றப்படா விட்டால் நாட்டின் ஒற்றுமைக்கே அது ஊறு விளைவிக்கும்.

நமது அரசியலமைப்புச் சட்டம் இறுதி வடிவம் பெற்று ஏற்கப்படும் பொழுது தனது முடிவுரையில் டாக்டர் அம்பேத்கர் 26.11.1949 அன்று இந்தப் பிரச்சனையை மிக அழகாகவும், தெளிவாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

"1950 ஜனவரி 26 ஆம் நாளன்று நாம் முரண்பாடுகள் நிறைந்த ஒரு வாழ்க்கையுள் நுழையப் போகிறோம். அரசியலிலே நம்மிடம் சமத்துவம் இருக்கும். ஆனால் சமூக பொருளாதார வாழ்வில் சமத்துவம் இருக்காது. அரசியலிலே ஒவ்வொரு நபருக்கும் ஓர் ஓட்டு, ஒவ்வோர் ஓட்டுக்கும் ஒரே மதப்பு என்ற கொள்கையை அங்கீகரிக்கப் போகிறோம். நம்முடைய சமுதாயப் பொருளாதார வாழ்வில், நம் நாட்டிலுள்ள சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புக் காரணங்களால் ஒவ்வொரு மனிதருக்கும் ஒரே மதிப்பு என்ற கொள்கையைத் தொடர்ந்து மறுக்கப் போகிறோம். எவ்வளவு காலத்திற்கு இந்த முரண்பாடான வாழ்க்கையைத் தொடர்ந்து வாழப் போகிறோம்? நமது ஜனநாயகத்தை பேராபத்துக்கு உள்ளாக்கினால் தான் இவ்வாறு தொடர்ந்து நீண்ட காலத்திற்கு இதை மறுக்க முடியும். இந்த முரண்பாட்டை உடனடியாக நாம் நீக்க வேண்டும். இல்லாவிட்டால் சமத்துவமற்ற நிலையினால் அல்லல்படும் மக்கள், இந்த அரசியல் நிர்ணய சபை அரும்பாடுபட்டு உருவாக்கிய, அரசியல் ஜனநாயக அமைப்பை தகர்த்து எறிந்து விடுவார்கள்."




திருப்பூரில் கழகக் கூட்ட எழுச்சி

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 22nd May 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 மே 29, 2008 புரட்சி 7 முழக்கம் 22 விலை : ரூ.2.50


## மதவெறியர் மிரட்டல்களை முறியடித்து மாநாடு போல் நடந்தது, நடிகவேள் நூற்றாண்டு விழா

# நாத்திக கருத்துகள்: மக்கள் மகிழ்ந்து வரவேற்பு



*மதவெறி சக்திகளின் மிரட்டலை முறியடித்து கோவையில் மாநாடு போல் நடிகவேள் எம்.ஆர். ராதா நூற்றாண்டு விழா நடந்தது. பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்ட கூட்டத்தில் நாத்திகக் கருத்துக்களை மக்கள் கைதட்டி வரவேற்றனர்.*

நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களின் நூற்றாண்டு விழாவும் - நாத்திகர் விழாவும் கோவை மாநகர பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் 17.5.08 சனி அன்று சிறப்பாக நடைபெற்றது.

கோவை மாநகர் முழுவதும் விழாவிற்காக சுவர் விளம்பரங்கள், பதாகை விளம்பரங்கள், சுவரொட்டிகள் என விளம்பரம் மக்களை ஈர்த்தது. இந்து முன்னணி அமைப்பினர் நாத்திகர் விழாவை தடை செய்ய வேண்டும் என காவல் துறையினரிடம் மனு கொடுத்தனர். அந்த செய்தியை தினமலர் பத்திரிகை நாத்திகர் திருவிழாவிற்கு தடை செய்க என தலைப்பிட்டு வெளியிட்டது. காவல்துறை மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்திற்கு அனுமதி மறுத்து பொதுக் கூட்டத்திற்கு மட்டும் அனுமதித் திருந்த நிலையில் விழா மேடை அமைக்கப்பட்டிருந்த கோவை சித்தாபுதூர் வி.கே.கே. சாலையில் மாலை 5 மணியிலிருந்தே கழக தோழர்களும், பொது மக்களும்கூட தொடங்கியதால் மாலை 5.45 மணிக்கே சமர்ப்பா குழு வினரின் இசை நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது. தொடர்ந்து திருமலையம் பாளையம் நண்பர்கள் குழுவினரின் பறை முழக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

மாநகர கழக செயலாளர் ராசுகுமார் வரவேற்புரை யாற்ற, ஆட்சிக்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி தலைமையேற்று உரை யாற்றினார். ஆட்சிக் குழு உறுப்பினர் பொள்ளாச்சி மனோகரன், கோவை வடக்கு மாவட்டத் தலைவர் திருப்பூர் துரைசாமி, குடந்தை சிற்பிராசன், வழக் கறிஞர் சு. குமாரதேவன், கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் ஆகியோர் உரைக்குப் பின் நடிகவேள் எம்.ஆர். ராதா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை "பெரியாரின் போர்வாள் எம்.ஆர்.ராதா" என்ற தலைப்பில் வெளியிட்ட நூல் ஆசிரியர் தஞ்சை சோமசுந்தரம் அவர்களுக்கு கழகத்தின் சார்பில் கழக தலைவர் கொளத்தூர் மணி சால்வை அணிவித்து சிறப்பு செய்



தார். தஞ்சை சோமசுந்தரம் அவர்கள் உரைய ாற்றினார்.

திராவிட முன்னேற்றக் கழக வெளியீட்டுச் செயலாளர் திருச்சி ந. செல்வேந்திரன் அவர்கள் எழுதிய "பெரியார் தொண்டர் புரட்சி நகர் எம்.ஆர். ராதா" என்ற நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட, திரைப்பட இயக்குநர் ஆ. சுந்தரராசன் பெற்றுக் கொண்டார். எம்.ஆர். ராதா அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் எழுதி வெளி வந்த நூல்களின் தொகுப்பு "சரித்திரம் திரும்பிவிட்டது" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. முதல் நூலை திரைப்பட நடிகரும், எம்.ஆர்.ராதாவின் புதல்வருமான ராதா ரவி அவர்கள் வெளியிட இயக்குனர் சீமான் பெற்றுக் கொண்டார். இரு நூல்களும் கோவை மாவட்ட பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து இயக்குனர் ஆர். சுந்தரராசன் கழக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், நடிகர் ராதா ரவி, இயக்குநர் சீமான் ஆகியோர் உரைக்குப் பின் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார்.

விழாவில் இரண்டு ஆண் குழந்தை களுக்கு பெயர் சூட்டப்பட்டது. ஒரு குழந்தைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் 'பிரபாகரன்' என்றும், மற்றொரு குழந்தைக்கு இயக்குநர் சீமான் அவர்கள் 'தமிழ்ச்செல்வன்' என்றும் பெயர் சூட்டியபோது கூடியிருந்த மக்கள் அனைவரும் கைகளை உயர தூக்கி கை ஒலியெழுப்பி ஆரவாரம் செய்து மகிழ்ச்சி தெரிவித்தார்கள். இறுதியில் மாநகர பொருளாளர் மணிமாறன் நன்றி தெரிவித்தார்.

நாத்திகர் விழா நடந்தால் சட்டம் ஒழுங்கு பாதிக்கும் என்றும், மேடை ஏறி கேள்வி கேட்போம் என்றும் இந்து முன்னணி மிரட்டல் விடுத்திருந்தது. அதனால் காவல்துறை விழாவிற்கு பலத்த பாதுகாப்பு வழங்கியிருந்தனர். மதவெறி யர்களின் மிரட்டலை அலட்சியப் படுத்தி ஆயிரக் கணக்கிலே பொது மக்களும், கழக தோழர்களும் கூடியிருந்தது அனைத்து தரப்பினரை யும் வியக்க வைத்தது. விழா மாநாடு போல் சிறப்பு பெற்றது. விழாவில் தோழர்கள் துண்டேந்தி வசூல் செய்ததில் ரூ.4330/- வசூலானது இது மக்கள் கழகப் பணிகளுக்கு கொடுத்த வரவேற்பாகவே உணர முடிகிறது.

# திருப்பூர் கழகத்தின் தீவிரப் பிரச்சாரம்

திருப்பூர் பகுதியில் தொடர்ந்து கழகப் பிரச்சாரப் பொதுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பிப்ரவரி இறுதி வாரத்திலிருந்து தொடங்கி மே முதல் வாரம் வரை மாஸ்கோ நகர், காட்டு வளவு, வெள்ளியங்காடு, அனுப்பர்பாளையம், அருள்புரம், சூசையாபுரம் பகுதிகளில் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றது. கூட்டங்களில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன், இயக்குநர் சீமான், கோபி வேலுச்சாமி, சிற்பிராசன், கீசகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்கள். மன்னை தங்கம், திருப்பூர் தியாகு ஆகியோர் பாடல்களை பாடினர். அங்ககுமார், மாவட்டத் தலைவர் துரைசாமி, அகிலன், முகில்ராசு, ஞா. கார்த்திகேசயன், சண்முகம், முத்து லட்சுமணன் மற்றும் கழகத் தோழர்கள் அனைத்து கூட்டங்களிலும் கலந்து கொண்டனர். அனைத்துக் கூட்டங்களிலும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## தலையங்கம்

# கழகத்தின் தொய்விலாப் பணிகள்

பெரியார் திராவிடர் கழகம் தொடர்ந்து தீவிரமான களப்பணிகளை, அடுக்கடுக்காய் மேற்கொண்டு வருகிறது... கடந்த பிப்ரவரி மாதம் 6 ஆம் தேதி டெல்லியில் ஈழத் தமிழர்களுக்காக மாபெரும் பேரணியை வெற்றியுடன் நடத்தி முடித்த பெரியார் திராவிடர்கழக செயல்வீரர்கள், டெல்லியிலிருந்து திரும்பிய பிறகு தொடர்ந்து, தீவிரமான களப்பணிகளில் இறங்கி யுள்ளனர். உடுமலைப்பேட்டை அருகே சாளரப்பட்டி என்னும் கிராமத்தில் அருந்ததி சமூகத்தினர் மீது ஆதிக்க சாதிகள் நடத்திய வன்முறை வெறியாட்டங்களை எதிர்த்து கழகம் களத்தில் இறங்கி போராடியது. தில்லை கோயிலில் தேவாரம் பாட எதிர்ப்பு தெரிவித்த தீட்சதப் பார்ப்பனர்களைக் கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்; குன்னூரில் ராணுவப் பயிற்சி பெற வந்த இலங்கை ராணுவத் தளபதிகளை எதிர்த்து கோவையில் போராட்டம்; இந்திய அரசு அச்சகத்தின் பணியாளர் தேர்வில் மலையாளிகள் ஆதிக்கத்தை எதிர்த்துக் கோவையில் கிளர்ச்சி; நாகை மாவட்டம் சீர்காழியில் கிராமம் கிராமமாக பகுத்தறிவு சமூக நீதிப் பிரச்சாரப் பயணம்; தூத்துக்குடியில் சாதி ஒழிப்புப் பிரச்சாரப் பயணம்; ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்துக்கு எதிர்ப்பைத் தொடங்கி வைத்த – கன்னட வெறியர் பா.ஜ.க. தலைவர் எடியூரப்பா, உருவ பொம்மை எரிப்பு, கருநாடகாவில் தமிழர்கள் தாக்கப்பட்டதற்கு பதிலடியாக சென்னையில் கருநாடக நிறுவனங்கள் மீது நடத்திய எதிர் வினை; சென்னை, கோவை, திருப்பூர், மேட்டூர் பகுதிகளில் கழகத்துக்கு ஆற்றல் மிகு வரவாக வந்துள்ள தோழர் சிற்பி ராசனின் சுமார் 50 பகுதிகளில் நடந்த மந்திரமா தந்திரமா நிகழ்ச்சிகள்; ஒகேனக்கல் குடிநீர் திட்டத்தை தள்ளி வைப்பதாக அறிவித்த, தமிழக அரசை எதிர்த்து பொள்ளாச்சி, ஆனைமலையில் ஆர்ப் பாட்டங்கள்; கலால் வரித் துறையில் மலையாளிகளின் ஆதிக்கத்தை எதிர்த்து, கோவையில் கிளர்ச்சி; அதே கோவையில் மாநாடு போல் நடந்த நடிகவேள் எம்.ஆர்.ராதா நூற்றாண்டு விழா; மேட்டூரில் நடந்த நாத்திகர் விழா; மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி; அதே மேட்டூரில் நடந்த அம்பேத்கர் விழா; தோழமை ஏடான 'தலித் முரசு'க்கு சந்தாக்கள் சேர்த்து வழங்கியது; சாளரப்பட்டியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்கக் கோரி உடுமலையில் ஆர்ப் பாட்டம்; சென்னையில் கழகக் குடும்ப சிறார்களுக்கு பயிற்சி முகாம்; அதே சென்னையில் நடைபெற உள்ள நாத்திகர் விழா; மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி; மூத்தத் தலைவர் திருவாரூர் தங்கராசுக்கு பாராட்டு விழா – என கழகச் செயல்வீரர்கள் பம்பரமாகச் சுழன்று, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கிடையே பெரியாரின் பேச்சு – எழுத்துக்களைத் தொகுத்து 'குடிஅரசு' தொகுதிகளை வெளிக்கொணரும் பணியில் கழகத் தோழர்கள் அமைதியாக ஆரவாரமின்றி மேட்டூரில் இரவும், பகலும் கழகத் தலைவரின் வழிகாட்டுதலோடு தொடர்ந்து உழைத்து வருகிறார்கள்.

மக்களிடம் சென்று சமூகநீதி, பகுத்தறிவு, பார்ப்பன எதிர்ப்பு, பெண்ணுரிமை, மூடநம்பிக்கை ஒழிப்பு, கடவுள், சாதி, மத மறுப்பு கருத்துகளை பரப்பிடும் களப்பணிகளில், தொடர்ந்து செயல்பட்டு வரும் அமைப்பாக பெரியார் திராவிடர் கழகம் நடைபோட்டு வருகிறது என்பது, ஏதோ, தற்புகழ்ச்சி அல்ல; நிகழ்ந்து வரும் உண்மை.

சொந்தப் பயன் ஏதுமின்றி – பதவி, அதிகாரம், போலி செல்வாக்கு என்ற மாயைகளில் சிக்கி விடாமல், பெரியாரை நேரிலேயே பார்த்திடாத ஏராளமான இளைஞர்கள், அந்தத் தலைவரின் சிந்தனைகளை நெஞ்சில் ஏந்தி, கொள்கை உரத்துடன், பெரியார் திராவிடர் கழகக் கொடியை தூக்கிக் கொண்டு, தங்கள் ரத்தத்தை சிந்தி, இந்த சமுதாயத்துக்காக உழைத்து வருவதை உண்மையான சமூக அக்கறை கொண்ட பலரும், உளம் குளிர பாராட்டி மகிழ்கிறார்கள்.

இனி, ஜூன் மாதம் முழுதும் கழகத்தின் பயிற்சி முகாம்கள் புதுவை மற்றும் சேலம், கோவை, ஈரோடு, நாகை மாவட்டங்களில் நடைபெற உள்ளன. அதற்கான களப் பணிகளில் கழகத் தோழர்கள் இறங்கிட வேண்டுகிறோம்.

பெரியாரியலை தலைமேல் சுமந்து, சமுதாயப் பணியாற்றும் பெரியார் அணியின் செயல் வடிவங்களே, தயாராவீர்!

# கழகக் குடும்பத்தின் சிறார்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி முகாம்




சென்னையில் கழகம் சார்ந்த மற்றும் கழக ஆதரவு குடும்பத்தைச் சார்ந்த 8 வயதிலிருந்து 15 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு, சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் ஒரு நாள் திறன் வளர்ப்பு சிறப்பு பயிற்சி முகாமை நடத்தியது. சென்னை மேற்கு சைதாப்பேட்டையிலுள்ள கலைஞர் பவள விழா சமூக நலக் கூடத்தில் காலை 8 மணிக்கு தொடங்கி, மாலை 6.30 மணி வரை பயிற்சி நீடித்தது. பகுத்தறிவுக் கலைஞர் கலைவாணன், வித்தியாசமான முறையில், இந்த முகாமை நடத்தினார். குழந்தைகள் பல்வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, குழுத் தலைவர் நியமிக்கப்பட்டு, அவர்களின் பங்கேற்புத்திறனை வளர்த்து, பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டார்கள். பேய், பிசாசு, மூடநம்பிக்கைகளை விளக்கும் கதைகள், அறிவியல் விளையாட்டுகள், ஓவியப் பயிற்சி என்று பல்வேறு வடிவங்களில் நடந்த இந்தப் பயிற்சி முகாமில், சிறார்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். காலை, மதியம் உணவும், மாலை சிற்றுண்டியும் வழங்கப்பட்டன. மதியம் அனைவருக்கும் கழக ஆதரவாளர் மோகன், பிரியாணி உணவு வழங்கினார். கழகப் பொறுப்பாளர்கள் தபசி. குமரன், உமாபதி, கேசவன், அன்பு தனசேகர் மற்றும் வழக்கறிஞர் குமாரதேவன் முன்னின்று ஏற்பாடுகள் செய்தனர். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்று, பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். முகாம் தொடக்கத்தில் பேசுவதற்கே தயங்கிய சிறார்கள், முகாம் நிறைவில், பேசுவதற்கு போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தனர்.



பயிற்சியை சிறப்புடன் நடத்திய தோழர் கலைவாணனுக்கு, விடுதலை இராசேந்திரன் கழக சார்பில் ஆடை போர்த்தினார்.

# பிரிகேடியர் பால்ராஜ் தேசத்தின் சுதந்திர மூச்சு



20.5.08 அன்று பிற்பகல் 2 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிகேடியர் பால்ராஜ் அவர்கள் மாரடைப்பால் சாவடைந்துள்ளார். 21, 22, 23.5.2008 ஆகிய 3 நாட்களும் தேசிய துயர நாட்களாக கடைப் பிடிக்கப்பட்டது. பிரிகேடியர் பால்ராஜ், தமிழீழ விடுதலைப் புலிகளால் 1991 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட முதலாவது மரபு வழிப் படையணியான சார்லஸ் அன்ரனி படைப் பிரிவின் முதலாவது கட்டளைத் தளபதி ஆவார். 1993 ஆம் ஆண்டு வரையும் 1995-1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளிலும் அவர் அப்பொறுப்பை வகித்தார்.

தமிழர்களின் போரியல் திறமையை உலகுக்கு அறிவித்த வரலாற்றுச் சிறப்புமிக்க 2000 ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமரில் முக்கிய பங்காற்றியவர். அமைதிப் பேச்சுக்களின் போது 2003 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் பிரிகேடியர் பால்ராஜுக்கு இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் 3 மாதங்கள் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். தனது உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் மன்னார் மற்றும் மணலாறு களமுனைகளில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் என்று விடுதலைப் புலிகள் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழீழத்தின் இதயபூமியான கொக்குத் தொடுவாயைச் சேர்ந்த பிரிகேடியர் பால்ராஜ், 1983 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டார்.

வன்னியில் மேஜர் பசீலனுடன் இணைந்து எதிரிகளுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தினார். இந்தியப் படை வல்வளைப்புக் காலத்தில் வன்னியில் செயற்பட்ட இவர், மேஜர் பசீலனுடன் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் இருந்த மணலாறு மண்ணில் இருந்தபோது அவர்களைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் மேஜர் பசீலனுடனும் தொடர்ந்து லெப். கேணல் நவத்துடனும் செயற்பட்டார். இந்தியப் படை வெளியேற்றத்தின் பின்னர் வன்னிக்கான தளபடிதியாகி வன்னியில் தடைக்கற்களாக இருந்த சிங்களப் படைத்தளங்களை துடைத்தழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

1990 ஆம் ஆண்டில் கொக்காவில் - மாங்குளம் கிளிநொச்சி ஆகிய வன்னியின் நடுப்பகுதியில் இருந்த சிங்களப் படைத்தளங்களை இவர் நடத்திய தாக்குதல் நடவடிக்கைகள் மூலம் தகர்த்தழிக்கப்பட்டன. முல்லைத் தீவை விரிவாக்கும் சிறிலங்காப் படையினரின் 'கடற்காற்று' எதிர் நடவடிக்கையையும் தலைமையேற்று வழி நடத்தினார். தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட முதல் சிறப்புப் படையணியான சார்ள்ஸ் அன்ரனியின் முதலாவது சிறப்புத் தளபதியாக இவர் நியமிக்கப்பட்டார்.

4 ஆம் பக்கம்

# மத்திய அமைச்சர் ஆ. இராசா ஆய்வுரை (6)

## பெரியார், அம்பேத்கர் மீது சுமத்தும் குற்றச்சாட்டுகள் சரியானவையா?

*22.2.2008 அன்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பெரியார் உயராய்வு மையமும், மகளிரியல் துறையும் இணைந்து நடத்திய 'பெரியார் அம்பேத்கர்: இன்றைய பொருத்தப்பாடு' என்ற தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவில் பங்கேற்று மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப துறை அமைச்சர் ஆ. இராசா ஆற்றிய உரையின் தொடர்ச்சி:*

*நான் தேசத் துரோகிதான். இந்த மண்ணில் பார்ப்பன சாதி, பற பள்ளு சாதி, சூத்திர சாதி என்கின்ற சாதிகளை ஒழித்துவிட்டு ஒரே சாதியாக ஆக்குகிற தொண்டினை மேற்போட்டுக் கொண்டு வாழுகிறவன். இப்படிச் செய்வது தான் தேசத் துரோகம் என்றால் நான் கடைசி வரை தேசத் துரோகியாகத்தான் இருக்க விரும்புகிறேன்.*

- என்று இந்த மண்ணிலே பதிவு செய்தவர் பெரியார்தான். இப்ப இன்னக்கி ஒரு குற்றச்சாட்டை வைக்கிறார்கள், என்ன குற்றச்சாட்டு? இதோட நான் முடிக்கணும். இந்த ஒரு குற்றச்சாட்டோடு நான் முடிக்கணும், ரொம்ப நேரம் பேசிட்டேன்னு நினைக்கிறேன். பெரியார் பேருல என்ன குற்றச் சாட்டை வைக்கிறான்? இவர் தாழ்த்தப்பட்டவர் களுக்கு எதையும் செய்யவில்லைன்னு வைக்கிறான். அம்பேத்கர் பேருல என்ன வைக்கிறான்? இவர் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தலைவர், பிற்படுத்தப் பட்டவர்களுக்கு ஒண்ணும் செய்யலங்கறான். இது இரண்டுக்கும் பதில் சொல்லிவிட்டு என்னுடைய உரையை நான் நிறைவு செய்ய விரும்புகிறேன்.

*தந்தை பெரியார் மிகத் தெளிவாகச் சொன்னார், பறையன் பட்டம் போகாமல் சூத்திரப்பட்டம் போகாது.*

சாதி என்பது தனி ஒரு வன்னியர் அல்ல, பறையர் அல்ல, ரெட்டியார் அல்ல, செட்டியார் அல்ல, இட்டிஸ் இன்ஸ்டிடியுஷன். இந்த இன்ஸ்டிடி யுஷனை முழுமையா அழிக்காம சாதி போகாது, ஒன்று. இதை எங்கே அவர் வெளிப்படுத்துகிறார் என்றால் எவ்வளவு தூரம் தாழ்த்தப்பட்டவர்களது விடுதலையிலே அக்கறை கொண்டிருக்கிறார் என்று வரலாறு சொல்லுகிறதென்றால், அவர் பேசியதை எல்லாம் எப்படி வேண்டுமானாலும் திரித்துப் பேசலாம். ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று ஒரு உச்ச இடம் இருக்கின்றது. வரலாற்றுப் பதிவிலே ஒரு உச்சமான இடம் இருக்கின்றது. அதில் அம்பேத்கர் தோற்றுப் போய்விடுகின்றார். அந்தத் தோல்வியை அவர் வேறு விதமாக ஒப்புக் கொள் கிறார். பூனா ஒப்பந்தம். அந்த பூனா ஒப்பந்தத்திலே என்ன சொல்லியிருக்கிறார்கள்? பல பேருக்குத் தெரியாது, பூனா ஒப்பந்தம்னா என்னன்னு.

இன்றைக்கு நான் பெரம்பலூர் ரிசர்வ் தொகுதியில் போட்டி போடறேன். ஆனா ரிசர்வ் தொகுதியில இரட்டை வாக்குமுறை இருந்தால் ஒரு தாழ்த்தப் பட்டவரும் போகலாம், ஒரு பிற்படுத்தப்பட்டவரும் அல்லது பொது சாதியினரும் போகலாம். என்ன காரணம் என்றால், அம்பேத்கர் அப்பொழுதே சொன்னார். ஒரு தனித் தொகுதியில இருக்கிற ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நபர் நாடாளுமன்ற உறுப்பினரோ, சட்டமன்ற உறுப்பினரோ முழுமை யாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமே செயலாற்ற முடியும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அவர் மற்றவரது வாக்கையும் பெற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். எனவே எங்களுக்கு இரட்டை வாக்குமுறை வேண்டும். தாழ்த்தப்பட்ட வர்களால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஒரு முறை வேண்டுமென்று இரண்டு வாக்குமுறையைக் கேட்டார். கேட்டது அம்பேத்கர், கொடுத்தவர்கள் வெள்ளைக்காரர்கள். எப்பொழுதுமே பிற்படுத்தப் பட்டவர்களது உரிமையில், தாழ்த்தப்பட்டவர்களது உரிமையில் அக்கறையையும் அனுதாபத்தையும் காட்டிய ஒரு சமூகம் உண்டென்று சொன்னால் அது வெள்ளைக்கார சமூகம் என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். அது நாடு, போட்டி என்று வருகிறபோது அடக்குமுறை என்பதெல்லாம் என்பது வேறு. அரசியல் என்பது வேறு. ஆனால் சமூகக் கண்ணோட்டத்தில் இது உண்மை.

ஆக, இரட்டை வாக்குமுறையை பூனா ஒப்பந்தம் என்கின்ற அந்த ஒப்பந்தத்திற்கு முன்பு



கொண்டுவந்தபோது காந்தி அதை எதிர்க் கிறார். என்ன சொல்லி எதிர்க்கிறார் என்றால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு விடுதலை வந்துவிடும் என்று சொல்லி எதிர்க்க வில்லை. அப்படிக்கூட நேரா வந்திருக்கலாம். ஆனால், காந்தி என்ன சொல்கிறார் என்றால், *"இது தாழ்த்தப்பட்டவர்களை இந்து மதத்திலிருந்து பிரிக்கின்ற ஒரு வேலையைச் செய்கிறது"*. அவருக்கு இந்து மதத்து மேலே ரொம்ப அக்கறை. தன்னை சனாதனி என்று ஒப்புக் கொண்டவர், பகவத் கீதைதான் தன்னுடைய வழி காட்டி என்று சொன்னவர், எந்த பகவத் கீதை? உன்னுடைய அப்பா செஞ்ச தொழிலையே நீயும் செய்யணும்னு சொன்ன பகவத் கீதையே என்னுடைய வழிகாட்டி என்று சொன்னவர். அந்த காந்தி இந்த இரட்டை வாக்குரிமையை ஏற்றுக் கொள்ள முடியாமல் உண்ணாவிரதம் இருக்கிறார். யார் பெற்ற மிகப் பெரிய இலட்சியம்? அம்பேத்கர் பெற்ற மிகப் பெரிய இலட்சிய உரிமையை எதிர்த்து, இரத்து செய்ய வேண்டுமென்று காந்தி போராடுகிறார், காந்தி உண்ணாவிரதம் இருக்கிறார், ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள், நான்கு நாள் காந்தி குற்றுயிரும், குலை உயிருமாக இருக்கிறார். காந்தியினுடைய துணைவி யார் அம்பேத்கரிடம் போய் என்னுடைய கணவரைக் காப்பாற்றுங்கள், எனக்கு மாங்கல்யப்பிச்சை அளியுங்கள் என்று சொல்லி, அம்பேத்கருடைய வீட்டிற்கு காந்தி துணைவியார் செல்லுகிறார். நாடெங்கும் கொந்தளிப்பு. காங்கிரஸ் தலைவர்கள் கொதித்துப் போய் இருக்கிறார்கள். ஒரு அம்பேத்கர் இந்த தேசத்தினுடைய பிதாவை இந்த நாட்டை இப்படி உலுக்குகிறாரே என்று. எல்லாத் தலைவர்களும் சம்மதித்து விட்டார்கள். Succumb to precedent என்று சொல்வார்களே, காந்தியைக் காப்பாற்றினால் போதும் என்று ஒரு கட்டாயத்திற்கு எல்லாத் தலைவர்களும் வந்துவிட்டார்கள். ஆனால் அம்பேத்கரே பயந்து போய்விட்டார். அம்பேத்கரும் கிட்டத்தட்ட கையெழுத்துப் போட உள்ள சூழ் நிலை. ஒரே ஒரு ஜீவன்,

*காந்தியினுடைய உயிர் பெரிதா? இந்த நாட்டில் இருக்கிற நான்கில் ஒரு பங்கு உள்ள தாழ்த்தப் பட்டவர்களின் உரிமை பெரிதா என்றால், காந்தி சாவதானாலும் சாகட்டும், கையெழுத்துப் போடாதே என்று ஒரு தந்தி போனதென்றால், அது தந்தை பெரியாரிடமிருந்து போன தந்தி.*

அம்பேத்கர் பயந்து கையெழுத்துப் போட்டு விட்டார். ஆனால் சரித்திரம் சொல்லுகிறது. காந்தி உயிரா? தாழ்த்தப்பட்டவர்களின் மானமா, உரிமையா என்று கேட்டால், காந்தி போனால் எத்தனையோ காந்தி வருவார்கள். ஆனால் நீங்கள் கையெழுத்துப் போடாதீர்கள் என்று அம்பேத்கருக்கு தந்தி கொடுத்த ஒரு மகத்தான தலைவன் தந்தை பெரியார். அவர் மீது இன்றைக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரியைப் போல சித்தரிப்பு. விவாதம் நடக்கட்டும். காந்தி ஒரு பெரிய கடவுளல்ல. பெரியார் ஒரு கடவுளல்ல. பெரியாரிடம் குறை காணலாம். குற்றம் காணலாம். தவறல்ல. ஆனால் ஆய்வு என்று வருகிறபோது இதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அம்பேத்கர் மீது இன்னொரு குற்றச்சாட்டு. அவர் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு எதையுமே செய்ய வில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு பெற்றுக் கொண்டார் என்று அவர் மீது ஒரு குற்றச்சாட்டு. பார்ப்பதற்குத் தோற்றத்திற்கு உண்மையைப் போல் தோன்றும். உண்மைதான். ஏனென்றால், 1931 இல் தான் சாதிவாரிக் கணக்கெடுப்பு கடைசியாக முடியுது. அதுக்குப் பிறகு சாதிவாரிக் கணக்கெடுப்புக் கிடையாது. மக்கள் தொகைக் கணக்கெடுப்புதான் போய்க்கிட்டு இருக்கு. ஒவ்வொரு வீடா வர்றான். டோர் நம்பர் எழுதுறான். என்ன சாதின்னு இப்ப கேக்கறது இல்ல. ஆனால் வெள்ளைக்காரர்கள் 1931 வரை 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை சாதியையும் சேர்த்து, ஒவ்வொரு சாதியும் எவ்வளவுன்னு கணக்கெடுத்த வழக்கம் இருந்தது. அதைக் கடைசியா எம்.ஜி.ஆர். பண்ணிப் பார்த்தார். வன்னியர்களுக்கு இடஒதுக்கீடுன்னு வந்தப்ப சாதி வாரியாக் கணக்கெடுன்னு சொன்னார். எடுத்தாங்க. தமிழ்நாட்டோட மக்கள் தொகை 4 கோடி. இவர்கள் கொண்டுட்டு வந்த தொகை 12 கோடி. வன்னியர் 8 கோடின்ட்டான், ஆதி திராவிடர் 32 கோடின்ட் டான், ஏண்டா மொத்தத் தொகையே 4 கோடி இவங்க கொண்டு வந்தது 12 கோடி எம்.ஜி.ஆரால ஒண்ணும் பண்ண முடியல. 1931-லே சாதி வாரிக் கணக்கெடுப்பை முடித்தார்கள். அதற்கு முன்பே யார் அன் டச்சபிள் என்று தீர்மானித்து விட்டார்கள். ஒரு பெரிய உண்மையைத் தெரிஞ்சுக்கணும். யார் பிற்படுத்தப்பட்டவன்னு வெள்ளைக்கார அரசாங்கமோ அல்லது வேறு எந்த அரசாங்கமோ நிர்மாணிக்கவில்லை. இந்த ஊரிலே ஒரு பிற்படுத்தப்பட்டவர் ஒரிசாவிலே முற்பட்ட வகுப்பினராக இருக்கக்கூடும். ஒரு ஊருல கவுண்டர், இன்னொரு ஊருல கவுடா, கவுண்டர் எம்.பி.சி., கவுடர் பி.சி. கர்நாடகாவுல தேவகவுடாவுக்கு சொந்தக்காரர்கள் இந்தக் கவுடாக்கள் ஃஎப்.சி. ஆக, பேக்வேர்ட் கிளாஸை நிர்ணயம் பண்றதுங்கறது ஒரு அரசாங்கத்திற்கு கஷ்டமா இருந்தது.

ஆனா தாழ்த்தப்பட்டவர்களை நிர்ணயம் பண்றது எளிதாக இருந்தது. என்ன காரணம்னா? மூணே காரணம் தான் Unseeable, unapproachable and untouchable - பார்க்கக் கூடாதவர்கள், நெருங்க முடியாதவர்கள், தொடக் கூடாதவர்கள். திருநெல் வேலி மாவட்டத்திலே புரத வண்ணான்னு ஒரு சாதி. எவ்வளவு கொடுமை பாருங்க. புரத வண்ணான்னு ஒரு சாதி. அவர்கள் சாயங்காலம் 6 மணிக்கு மேல் தான் வெளிய வரணும். சாயங்காலம் 6 மணிக்கு மேல வந்து எல்லா வீட்டுலயும் துணி எடுத்திட்டுப் போயி இராத்திரி 12 மணிக்குப் போய் தொவைச்சிட்டு அதிகாலை 6 மணிக்கு போய் எல்லார் வீட்டுலயும் திருப்பிக் கொடுத்திட்டு பகல் முழுக்க படுத்துக்கணும். பகலில் நடமாடினால் கட்டி வைத்து உதைத்தார்கள். புரதவண்ணார்னு ஒரு சாதிய. 1927 வரைக்கும். இப்ப ஒரு 50, 60 வருடத்திற்கு முன்னாடி வரைக்கும் புரத வண்ணார்ங்கற ஒரு சாதி சூரியனைப் பார்த்ததில்லை. வெளிச்சத்தைப் பார்த்ததில்லை. தேர் எப்படி இருக்கும்னு அவனுக்குத் தெரியாது. சாதி எப்படி இருக்கும்னு தெரியாது. தெரு எப்படி இருக்கும்னு தெரியாது. காலை 6 மணிக்குள் இரவுக்குள்ளாகவே தன்னுடைய வாழ்க்கைச் சக்கரத்தை முடித்துக் கொண்ட ஒரு கேவலமான நிலை புரத வண்ணார்ங்கற ஒரு சாதிக்கு இருந்தது. ஆக, untouchability is visible - யார் யாரெல்லாம் தாழ்த்தப்பட்டவன்? யார் யாரெல்லாம் தீண்டாமைக்கு ஆட்படுகிறான் என்கிற பட்டியல் வெள்ளைக்காரனிடம் இருந்தது. இது அம்பேத்கருக்கு ஈசியா இருந்துச்சு. வட்டமேசை மாநாட்டுக்குப் போகும் போதும் சரி, வெள்ளைக்காரன் போன பிறகு அவர் வரைவுக் குழுவிலே இருந்த போதும் சரி, யார் யாரெல்லாம் தாழ்த்தப்பட்டவன் என்கிற பட்டியல் மாநில வாரியாக என்பது அம்பேத்கரினுடைய கையில் இருந்தது. கையில் இருந்த காரணத்தால் தாழ்த்தப் பட்டவர்களுக்கு இடஒதுக்கீடுன்னு முடிவு பண்ணிட்டார்.

அப்ப பேக்வேர்ட் க்ளாசுக்கு ஒண்ணுமே செய்யலையா? பேக்வேர்ட் க்ளாசுக்கு செஞ்சதே அம்பேத்கர்தான். ஆனா எவ்வளவு செஞ்சார்ங்கறது தான் முக்கியம். இன்றைக்கும் விவாதம் நடக்குது. Constituent Assembly விவாதத்தில் இருக்கு. அரசியல் சட்டத்தினுடைய 16-வது பிரிவு உப பிரிவு 4 வது உட்பிரிவுதான் employment opportunity - பற்றி பேசுகிறது. இன்றைக்கு வேகமாகப் பேசிக் கொண்டிருக்கிறோமே Socially and educationally backward என்று. இந்த Socially and educationally backward என்கிற வார்த்தையை முதன்முதலாக வரையறுத்தவர் அம்பேத்கர். அதுக்கு முன்னாடி any class என்று இருந்தது. Any class which was not adequately represented - இதுதான் வரைவுத் தீர்மானம். 16-வது பிரிவில் இராஜேந்திர பிரசாத் தலைமையில் அம்பேத்கர் மட்டுமே இருந்து கடைசிவரை எழுதிய அந்த வரைவுக் குழு விவாதத்தைப் படித்துப் பார்த்திங் கன்னா, 16(4)லிலே முதல்ல என்ன சொன்னார்கள் என்றால், எந்த சமூகம் போதிய அளவுக்கு பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லையோ அரசுப் பதவிகளில் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் என்று இருந்தது. அதை மாற்றி 15(4)ஐச் சேர்த்து, அது அப்படி இருக்கக் கூடாது Any classன்னு இருக்கக் கூடாது *socially educationaly backward class*-ன்னு இருக்கணும் என்று போட்டவர் அம்பேத்கர்.

*(அடுத்த இதழில் முடியும்)*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# கழக சார்பில் 'பயிற்சி முகாம்கள்'

தமிழ்நாட்டில் கழகத்தினருக்கு பயிற்சி முகாம்கள் கீழ்க்கண்ட திட்டப்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.. மாவட்ட கழகப் பொறுப்பாளர்களோடு கலந்து பேசி, அவர்களின் ஒப்புதலோடு இந்த தேதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| மே 31 - ஜூன் 1 | - | புதுவை மாநிலம் |
| ஜூன் 7, 8 | - | சேலம் மாவட்டம் |
| ஜூன் 14, 15 | - | கோவை மாவட்டம் |
| ஜூன் 21, 22 | - | ஈரோடு மாவட்டம் |
| ஜூன் 28, 29 | - | நாகை மாவட்டம் |

மாவட்டங்களில் இதுவரை பயிற்சி முகாம்கள் நடக்காத ஊர்களைத் தேர்ந்தெடுத்து, அங்கே முகாம்களை நடத்துவதற்கு, கழகப் பொறுப்பாளர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுகிறோம். (விரிவான செய்தி பின்னர்)

**– தலைமைக் கழகம்**

# மாநிலத்திற்குள் மத்திய அரசுப் படையா?

ஈரோடு மாவட்டத்தில் மத்திய அரசின் இருப்புக் காவல் படையின் (சி.ஆர்.பி.எப்.) அதி விரைவு நடவடிக்கைப் படை இறக்கி விடப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டம் பற்றிய, அனைத்துத் தகவல்களையும் சேகரித்து, மத்திய உள்துறை அமைச்சகத்துக்குச் சமர்ப்பிக்க அப்படைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு வேண்டுகோள் விடுத்தால் மட்டுமே பொது ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு, மாநில நிர்வாகத்திற்கு உதவுவதற்காக மத்தியப் படை வரலாம் என்று இந்திய அரசியல் சாசனம் அனுமதிக்கிறது. இந்திய அரசுக்குத் தேவையான தகவல்களை அளிக்க, இங்குக் காவல்துறை மத்திய மாநில உளவுத்துறைகள், குற்றப் புலனாய்வுத் துறை என்று எத்தனையோ அமைப்புகள் இருக்கும்போது தகவல் சேகரிப்பு என்ற பெயரில் முழுச் சீருடையோடும், ஆயுதங்களோடும், மத்தியப் படை இங்கு அனுப்பப்பட்டிருப்பது மக்களிடம் அச்சத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையாகும். அது மட்டுமின்றி மத்திய அரசு, மாநில அரசின் நிர்வாக அமைப்புகள் மீது நம்பிக்கையின்றி, மாநில உரிமையில் அத்துமீறித் தலையீடு செய்வதாகும்.

இதைக் கண்டித்து ஏப்.10 ஆம் தேதி ஈரோட்டில் முற்றுகைப் போராட்டத்தை மக்கள் பாதுகாப்பு கூட்டு இயக்கம் போராட்டத்தை நடத்தியது. காலை 10.30 மணி அளவில் ஈரோடு பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு ஈரோடு நகராட்சி மண்டபத்தை முற்றுகையிடச் செல்லும் வழியில் காவல்துறை தடுத்து நிறுத்தியது.

தோழர் பாவேந்தன் தலைமையில் நடந்த போராட்டத்தில் ஈரோடு மாவட்டத் தலைவர் கா. நாத்திகசோதி, நகர கழக பொறுப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் கு. மாது, சிவா, செந்தில், சுப்ரமணி, மாதவராசு ஆகியோர் பங்கேற்றனர்.

# 'மதிமாறன் பதில்கள்' நூல் வெளியீடு

மே 16 அன்று மாலை 7 மணியளவில் 'தோழர் வே. மதிமாறன் பதில்கள்' நூல் வெளியீட்டு விழா சிறப்புடன் நடைபெற்றது. 'சமூக விழிப்புணர்வு' இதழில் வே. மதிமாறன் வாசகர்கள் கேள்விக்கு தந்த விடைகளே, இந்த நூல். கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று, நூலைத் திறனாய்வு செய்து உரையாற்றினார். ம.க.இ.க. பொதுச்செயலாளர் மருதையன், கவிஞர் தமிழேந்தி, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் பெரியார்தாசன் ஆகியோர் உரையாற்றினர். வழக்கறிஞர் ராஜீவ்காந்தி வரவேற்புரையாற்ற, வழக்கறிஞர் ஆனந்த ராஜ் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். வே. மதிமாறன் ஏற்புரை வழங்கினார். தோழர் மதிமாறன் 'பாரதிய ஜனதா பார்ட்டி' என்ற பாரதியை விமர்ச்சிக்கும் நூலின் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

# சாதிவாரிக் கணக்கெடுப்பு தேவை!

நாட்டின் மக்கள் தொகை குறித்த கணக்கெடுப்பு வரும் 2011 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சூழ்நிலையில், இது குறித்த ஆரம்பக் கட்ட ஆலோசனைக் கூட்டம் டில்லியில் நடைபெற்றது. சாதிவாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்பையும் நடத்த வேண்டுமென்ற கோரிக்கை குறித்து தீவிரமாக பரிசீலிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், சாதிவாரியான கணக்கெடுப்பு நடத்துவதா, வேண்டாமா என்பது குறித்து முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் விடப்பட்டுள்ளது.

சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு 1881 ஆம் ஆண்டு முதன்முறையாக நடத்தப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியின் போது தொடர்ந்து நடத்தப்பட்ட இந்த கணக்கெடுப்பு கடைசி முறையாக 1931 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. பின்னர், 1941 ஆம் ஆண்டும் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டாலும் கூட அது நிறைவு பெறாமல் போனது. பின்னர், நாடு சுதந்திரம் அடைந்தபோது 1951 ஆம் ஆண்டு மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் சாதிகளை ஒழிக்க வேண்டுமென்று போராடும் சூழ்நிலையில் இதுபோல சாதி வாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டாம் என்று முடிவெடுக்கப்பட்டது. அதன் பிறகு சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்படவே இல்லை.

பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுவது வழக்கம். அதன்படி மக்கள் தொகை குறித்த அடுத்த கணக்கெடுப்பு வரும் 2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது. சாதிவாரியான கணக்கெடுப்பு நடத்த வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருகிறது. குறிப்பாக இடஒதுக்கீடு குறித்த பிரச்சனைகள் வரும்போதெல்லாம் சுப்ரீம் கோர்ட்டில் இது குறித்து கேள்வி எழுப்பப்படுவது வழக்கம். சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தும்படி முன் ஒரு முறை கேரள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும்கூட அதை அரசாங்கத்தால் அமல்படுத்த முடியவில்லை.

2011 ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த ஆரம்பக் கட்ட ஆலோசனைக் கூட்டம் டில்லியில் நடைபெற்றது. உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாநில பிரதிநிதிகள், அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், பல்கலைக்கழக அதிகாரிகள், யுனிசெப் அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த விவரங்கள் மட்டுமே அதிகாரப்பூர்வமாக ஆலோசிக்கப்பட்டது. ஆலோசனையின் முடிவில் சாதிவாரி கணக்கெடுப்பு குறித்த பேச்சு எழுந்தது.

அரசு தரப்பு வட்டாரங்களோ, 'இது, மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து ஆலோசிப்பதற்காக கூட்டப்பட்ட கூட்டம் மட்டுமே. சாதிவாரியான கணக்கெடுப்பு நடத்த வேண்டுமென்றால் அது குறித்து மத்திய அரசு தான் தீர்மானிக்க வேண்டும் என்று கூறுகின்றன.

தேசிய கட்சிகளான காங்கிரஸ், பா.ஜ., இடதுசாரிகள் என மூன்றுமே சாதிவாரி கணக்கெடுப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றன. இதனால், முக்கிய கட்சிகளான தி.மு.க., ராஷ்டிரிய ஜனதா தளம் போன்றவை தரப்பிலிருந்து நெருக்கடி அளிக்கப்பட்டால் மட்டுமே சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவது சாத்தியமாகும்.

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

பல்வேறு போராட்டக் களங்களில் தளபதியாக நின்று வழி நடத்தியவர் பிரிகேடியர் பால்ராஜ்.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் :

விடுதலைக்கான நீண்ட பயணத்திலே எமது சுதந்திர இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது. எத்தனையோவீர காவியங்களைப் படைத்திருக்கிறது. எண்ணற்ற சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறது. மகத்தான இராணுவ வெற்றிகளைக் குவித்திருக்கிறது. இந்த இமாலய வெற்றிகள் பலவற்றுக்கு நடுநாயகமாக நின்று, எமது சண்டையணிகளையும் மரபுப் படையணிகளையும் வழிப்படுத்தி, நெறிப்படுத்திச் சமராடிய எமது வீரத்தளபதி இன்று எம்முடன் இல்லை. இவரது இழப்பால் எமது தேசம் ஆற்ற முடியாத துயரத்திலும் ஆழ்ந்த வேதனையிலும் இன்று மூழ்கிக் கிடக்கிறது.

பொதுவாகவே, விடுதலை இலட்சியத்தில் பிடிப்பு ஏற்பட்டு விட்டால், எமக்கு துன்ப துயரங்கள் தெரிவதில்லை. வேதனைகள் புரிவதில்லை. உடல் உபாதைகள் அழுத்துவதில்லை. இயற்கைகூடக் குறுக்கே நிற்பதில்லை. எனது அன்புத் தளபதி பிரிகேடியர் பால்ராஜுக்கும் அப்படித்தான். ஓயாது குமுறும் சமர்க்களங்களையெல்லாம் அவன் ஓய்வில்லாது, உறக்கமில்லாது எதிர்கொண்டான். அங்கு இரவு, பகல் பாராது செயற்பட்டான். கொட்டும் மழையும் கோடையின் கொளுத்தும் வெயிலும் அவனைக் கட்டிப்போட்டது கிடையாது. கொடிய சண்டைக்களங்களில் எல்லாம் எத்தனையோ துன்பங்களைச் சுமந்தவாறு, எத்தனையோ நெருக்கடிகளைச் சமாளித்தவாறு, எத்தனையோ ஆபத்துக்களை எதிர்கொண்டவாறு அபாரமான மனவுறுதியோடு போராடினான்.

தலைசிறந்த போர்த் தளபதி என்ற வகையில் நான் அவனை ஆழமாக நேசித்தேன். அவன் மீது அளவு கடந்த அன்பும் பாசமும் கொண்டிருந்தேன். அவன் அறிமுகமாகிய நாளிலிருந்து அவனுள் அபூர்வ போர்ப் பண்புகளும், போர்க் குணங்களும் இயற்கையாகவே நிறைந்து கிடப்பதைக் கண்டு கொண்டேன். ஆற்றல் மிக்க, ஆளுமை மிக்க இலட்சியப் போராளியாக அவனை வளர்த்தெடுத்தேன். அபாரமான துணிவும், அசுர வேகமும், சிறந்த தாக்குதல் உத்திகளும், நேர்த்தியாகப் படை நகர்த்தும் ஆற்றலும், கூட்டுக் குலையாத குறி தவறாத செயற்பாடுகளுமாக அவன் வெளிப்படுத்திய போர்ப்பண்புகள், எமது எதிரிக்கு அச்சத்தைக் கொடுத்தன. அதே நேரம், எமது போராளிகளின் மனோதிடத்தையும், இலட்சிய உறுதியையும் மேலும் உரமாக்கின. எமது மக்களக்கு பெரும் வெற்றிகளைத் தேடித் தந்தன.

பிரிகேடியர் பால்ராஜ் எம்மைவிட்டு எங்கும் போய்விடவில்லை. எமது தேசத்தின் சுதந்திர மூச்சாக, எம்மையெல்லாம் உள்ளிருந்து இயக்குகின்ற இலட்சிய நெருப்பாக அவன் என்றும் எம்முள் எரிந்து கொண்டிருப்பான் - என்று குறிப்பிட்டுள்ளார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 29th May 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.